81 ஆவது வரவுசெலவுத்திட்ட உரை
2027

2026 நவம்பர் 12 ஆந் திகதி

இலங்கை பாராளுமன்றம்

வரவுசெலவுத்திட்ட உரை – 2027

1. முன்னுரை

கௌரவ சபாநாயகர் அவர்களே,

சிறந்ததொரு நாட்டை கட்டியெழுப்புவதற்காக தலைமுறை தலைமுறைகளாக செவிமடுத்துவரும் கதையை யதார்த்தமானதாக ஆக்கிக்கொள்ளும் நேர்மையான மற்றும் உண்மையான உறுதியுடன் எமது அரசாங்கம் அதன் மூன்றாவது வரவுசெலவுத்திட்டத்தினை சமர்ப்பிக்கின்றது. அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு வரவுசெலவுத்திட்டமும் நாம் ஒன்றிணைந்து மீள்திறன் ஆற்றல் பற்றிய சான்றினை பறைசாட்டுகின்ற அதேவேளையில், ஒரு நாடு என்ற வகையில் நாம் மிக மோசமான வீழ்ச்சியிலிருந்து மீண்டு வருகின்றோம் என்பதையும், சரியான மற்றும் திட்டமிடப்பட்ட பயணத்தில் செல்கின்றோம் என்பதையும் உறுதியான நம்பிக்கையுடன் உறுதிப்படுத்தி யிருக்கின்றோம்.

இலட்சக் கணக்கான எமது மக்களின் இதயத்திற்குள் எதிர்பார்ப்பின் மங்காத ஒளியை எம்மால் ஏற்றக்கூடியதாக இருந்தது. இற்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இந்நாட்டு மக்கள் அனைவரும் எமது மீது வைத்திருந்த உன்னத நம்பிக்கையின் எதிர்பார்ப்புகளை எவ்வித நிபந்தனையுமின்றி நாம் நிறைவேற்றி வருகின்றோம் என்பதை நினைவுகூர்தல் வேண்டும்.

வறுமையை ஒழித்தல், நீதமான சமூகம் ஒன்றை கட்டியெழுப்புதல், இலஞ்சம் மற்றும் ஊழலை முற்றாக ஒழித்தல், பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்துதல், மக்களின் நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்துதல் மற்றும் ஒவ்வொரு பிரசைக்கும் சிறந்ததொரு வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கான வாய்ப்பை வழங்குதல் என்பன எங்களின் முதன்மையான நோக்கங்களாக இருக்கின்றன. இருப்பினும், இவை அனைத்தினதும் அடிப்படையாக இருக்கவேண்டியது கல்வியின் மூலம் அறிவை ஆயுதமாகக் கொண்ட, நற்பண்புகள் நிரம்பிய, தர்க்கரீதியாக சிந்திக்கின்ற, படைப்பாற்றலுடன் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற பிரசைகளையும் தூரநோக்குடைய

தலைவர்களையும் உருவாக்குவதாகும். எமக்குத் தேவையானது அறிவும் விவேகமும் செறிந்த, புதிய சிந்தனைகள் மற்றும் புதிய படைப்புகளின் மூலம் உலகிற்குப் பங்களிப்புச்செய்கின்ற, சர்வதேச அரங்கில் எந்தவொரு சவாலையும் எதிர்க்கொள்ளக்கூடிய, அறிவார்ந்த இலங்கையர் என்ற தலைமுறையை உருவாக்குவதாகும். உலகில் எங்கிருந்தாலும் இலங்கையர் என்ற அடையாளம் காணப்படும்போது, அவர் அறிவு, விவேகம், படைப்பாற்றல் மற்றும் சிறந்த நற்குணங்கள் கொண்ட ஒருவராக அங்கீகரிக்கப்படும் சூழலை நாங்கள் உருவாக்க விரும்புகிறோம்.

இலங்கையர் என்ற அடையாளம் என்பது அறிவு, நற்பண்பு மற்றும் சிறப்பியல்பு ஆகியவற்றின் சின்னமாக உருவெடுப்பதாகும். இவை அனைத்தின் ஊடாகவும், உண்மையான மறுமலர்ச்சி ஒன்றினை உருவாக்குவதே எமது வரவுசெலவுத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். ஏனெனில், ஒரு மறுமலர்ச்சிக் காலத்தை உருவாக்குவது என்பது பொருளாதாரக் குறிகாட்டிகளிலோ அல்லது புள்ளிவிவரங்களிலோ ஏற்படும் மாற்றம் மட்டுமல்ல. அது மனிதனின் சிந்தனை, அறிவு, மனப்பாங்கு மற்றும் நடத்தை ஆகியவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தி, நாட்டின் பண்பாட்டு, அறிவுசார் மற்றும் கலைசார் வாழ்விற்குப் புத்துயிரளிக்கும் ஒரு பரந்த சமூகப் புரட்சியாகும்.

21 ஆம் நூற்றாண்டில் இலங்கை என்ற வகையில் நாம் அடைந்துகொள்ள வேண்டிய ஓர் அபிவிருத்தியை நோக்கி, நாம் அனைவரும் ஒன்றிணைந்து, கூட்டாக பொதுமக்களின் பங்குபற்றுதலுடனும் அர்ப்பணிப்புடனும் இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டியிருக்கின்றது.

இந்தப் பயணத்தில் நாம் செய்ய வேண்டிய முதலாவது பணி, அரசியல் கலாச்சாரத்தில் ஓர் அடிப்படை மாற்றத்தை உருவாக்குவதேயாகும். சுதந்திரத்திற்குப் பின்னர் வரலாற்றில் முதன்முறையாக, ஊழல் நிறைந்த ஒரு சில மேட்டுக்குடி குடும்பங்களுக்கு இடையே கைமாறி வந்த அரச அதிகாரத்திற்குப் பதிலாக, ஓர் உண்மையான மக்களாட்சியை உருவாக்கும் அதிகாரத்தை நீங்கள் எங்களுக்கு வழங்கியுள்ளீர்கள்.

வருவாயை மட்டும் திரட்டும் அரசாங்கம் நமக்குத் தேவையில்லை. திரட்டப்படும் ஒவ்வொரு ரூபா வரிக்கும் மக்களுக்குப் பயன்தரும் அரசாங்கமே நமக்குத் தேவை. நமக்கு ஒரு பெரிய அரசாங்கம் தேவையில்லை. வினைத்திறன்மிக்க, வெளிப்படையான, மக்களுக்குப் பொறுப்புக்கூறுகின்ற ஒரு அரசாங்கமே எமக்குத் தேவை.

மக்களின் பணத்தின் உண்மையான உரிமையாளர்கள் இந்த நாட்டின் குடிமக்களே என்பதை அங்கீகரிப்பது, அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் உள்ள எமது கொள்கையாகும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

எமது நாட்டின் பொருளாதாரத்தை மாற்றம்பெறுகின் சகாப்தத்தை நோக்கி தேவையான நம்பிக்கை, அனுபவம், பொருளாதார அடித்தளம் மற்றும் நிலைபெறுதன்மை என்பன இன்று எம்மிடம் உள்ளன. 2027 ஆம் ஆண்டிற்காக நாங்கள் முன்வைக்கும் இந்த வரவுசெலவுத்திட்டமானது, அந்த அடித்தளத்தின் மீது கட்டியெழுப்பப்படும் ஒரு முன்னேற்றப் படிமுறையாகும். உற்பத்திப் பொருளாதாரத்தை வலுப்படுத்தி, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களைப் பாதுகாத்து, முதலீட்டிற்கு வழிவகுத்து, டிஜிட்டல் பொருளாதார நடவடிக்கைகள் மூலம் அறிவையும் தொழில்நுட்பத்தையும் பொருளாதாரத்துடன் இணைத்து, சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, சமூக நீதியை உறுதிசெய்யும் ஒரு வரவுசெலவுத்திட்டமாக இதை உருவாக்குவதே எங்களின் எதிர்பார்ப்பாகும்.

நாங்கள் சமர்ப்பிக்கும் ஒவ்வொரு வரவுசெலவுத் திட்ட முன்மொழிவும், ஒரு பொதுவான இலக்கை நோக்கி நகரும் ஒரு தொடர்ச்சியான வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாகும். மேலும், இந்த வரவுசெலவுத்திட்டமானது ஒரு தனி நபரின் அல்லது ஒரு தரப்பினரின் சிந்தனைகளின் அடிப்படையில் மட்டும் தயாரிக்கப்படவில்லை. இது பல்வேறு தரப்பினர்களினதும் யோசனைகள், முன்மொழிவுகள் மற்றும் அனுபவங்களை ஒன்றிணைத்து, கூட்டாகத் தயாரிக்கப்படும் ஒரு வேலைத்திட்டமாகும். எங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு

முன்மொழிவுக்கும் நாங்கள் உரிய கவனம் செலுத்தியுள்ளோம். அது எமது கொள்கை முன்னுரிமைகள், கிடைக்கக்கூடிய வளங்கள், நிதி வசதி மற்றும் செயற்படுத்தும் ஆற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

நம் நாட்டில் இந்த பொருளாதார நிலைபெறுத்தன்மை மிகவும் கடினமான காலத்தில் கட்டயெழுப்பப்பட்டது என்று கூறுவது மிகையல்ல. மத்திய கிழக்கில் நடந்து வரும் யுத்தம் முன்னெப்போதையும் விடத் தொடர்ந்து செல்வதால், உலகில் பாரிய நிச்சயமற்ற தன்மை உருவாகி வருகின்றது. ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டதால், உலகம் பூராவும் மசகு எண்ணெய்ப் போக்குவரத்தில் கிட்டத்தட்ட 20% பாதிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், எரிபொருள் விலைகள், மேலதிகச் செலவுப் பெறுமதி, கப்பல் மற்றும் காப்புறுதிக் கட்டணங்களின் அதிகரிப்பு என்பன எமது எரிசக்தி சந்தைகளில் மிகவும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எமது பொருளாதாரம் மற்றும் மக்களின் வாழ்வின் மீது ஏற்பட்டுள்ள அழுத்தத்தை எம்மால் இன்னும் மீண்டுவர முடியவில்லை. அதன் விளைவாக, மக்களுக்கும் பொருளாதார நிலைபெறுத்தன்மைக்கும் ஏற்படுகின்ற பாதிப்பைக் குறைப்பதற்கு ரூபா 147 பில்லியனுக்கும் அதிகமான தொகை செலவிடப்பட்டது.

அதேபோன்று, அனர்த்தத்திற்குப் பின்னரான தேவைகள் மதிப்பீட்டு (PDNA) அறிக்கையின் பிரகாரம், டித்வா புயலினால் வீடமைப்பு, கைத்தொழில், புகையிரதப் பாதை முறைமை சேவைகள், விவசாயம், கல்வி மற்றும் சுகாதாரக் கட்டமைப்புகளுக்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ஐ.அ.டொலர் 2 பில்லியன், மற்றும் பொருளாதார நட்டம் ஐ.அ.டொலர் 1.4 பில்லியனுடன் சேர்த்து மொத்தமாக சுமார் ஐ.அ.டொலர் 3.4 பில்லியன் (ரூ. 1.022 டிரில்லியன்) என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

இந்த அனைத்து பாதகமான பொருளாதார நிலைமைகளையும் எதிர்கொண்டு பொருளாதார நிலைபெறுத்தன்மையை கட்டியெழுப்புவதற்கு எமக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

உலக காலநிலை அமைப்பு எதிர்வுகூறியுள்ளவாறு இதுவரையில் ஏற்பட்டிருக்கின்ற எல்னினோ காலநிலை மாற்றம் 2027 பெப்ரவரி மாதத்தில் உச்சநிலையினை அடையும் சாத்தியம் 100% என உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த எல்னினோ காலநிலை மாற்றம் விவசாயத்திற்கும், உணவு விலைகளுக்கும் நீர் வழங்கல்களுக்கும் நீர் மின்சாரத்திற்கும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் அபாயம் நிலவுகின்றது. இவ்வாறு, உலக மட்டத்திலும் அதேபோன்று உள்நாட்டிலும் ஏற்படக்கூடிய அபாயத்தை முன்கூட்டியே அடையாளம் கண்டு அவற்றிற்கு முகம்கொடுக்க முடியும் என்ற வகையில் பொருளாதாரத்தை தொடர்ந்தும் நிலைப்படுத்துவது எனது முதன்மைப் பொறுப்பாகும் எனக் கருதுகின்றோம்.

இன்று காணப்படுகின்ற பொருளாதார சவால்களை முகாமைசெய்தல், அதேபோன்று எதிர்கால சந்ததியினருக்கு முன்னர் காணப்பட்ட பொருளாதார நெருக்கடிகளுக்கு மீண்டும் முகங்கொடுக்க வேண்டி ஏற்படாத நாடாக மாற்றுவது எமது இலக்காகும். "வளமான நாடு அழகான வாழ்க்கை" எனும் எமது கொள்கைப் பிரகடனத்தின் சாரம்சம் பொருளாதார குறிகாட்டிகளில் செயலாற்றுகையை அதிகரிப்பது மாத்திரமல்ல. கௌரவத்துடனும் அபிமானத்துடனும் வாழ்வதற்கு முடியுமான சமூகம் மற்றும் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையைக் கொண்ட ஒரு நாட்டை உருவாக்குவதாகும்.

இம்முறை வரவுசெலவுத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் பொருளாதார நிலைத் தன்மையிலிருந்து மாற்றத்தை நோக்கி நகர்வதாகும். உற்பத்தி, முதலீடு, ஏற்றுமதி, பயன்மிக்க வேலைவாய்ப்பு, சமூக நலன்புரி மற்றும் நிலைபேறுதன்மை போன்ற சகல துறைகளுக்கும் முன்னேற்றகரமான மாற்றமொன்றை அடைந்துகொள்வதாகும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

கடந்த இரண்டு வருடங்களுக்குள் எமது அரசாங்கத்தினால் பேரண்ட பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க நிலைபெறுத்தன்மையை அடைந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. அதன் பிரகாரம்;

- 2025 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற 5% பொருளாதார வளர்ச்சி வேகத்தை தொடர்ச்சியாக பேணியதுடன், டித்வா புயலின் தாக்கத்திற்கு மத்தியிலும் 2026 ஆண்டின் முதலாவது காலாண்டில் 5.1% பொருளாதார வளர்ச்சியை அடைந்துகொண்டோம். இரண்டாவது காலாண்டில் மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமைக்கு மத்தியிலும், 4.2% வளர்ச்சியை எட்டியுள்ளோம்.
- நீண்ட காலமாக பதிவாகிய ஆரம்பக் கணக்கின் எதிர்மறை மீதி, 2025 ஆண்டில் 5.4% வரலாற்றிலேயே அதிகூடிய நேர்கணிய மீதியொன்றை பதிவுசெய்துள்ளது. 2026 வரவுசெலவுத்திட்டத்துக்கு அமைய ரூபா 360 பில்லியனாக எதிர்பார்க்கப்படும் ஆரம்பக் கணக்கின் நேர்கணிய மீதி, செப்தம்பர் மாத இறுதியில் ரூபா 1,844 பில்லியன் நேர்கணிய மீதியொன்றை பதிவு செய்தது.
- 2025 ஆண்டில் வரவுசெலவுப் பற்றாக்குறை 2.3% ஆக, 68 வருடங்களுக்குப் பின்னர் குறைந்த பெறுமதியைப் பதிவு செய்துள்ளது.
- 2022 ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.2% ஆக காணப்பட்ட வரலாற்றிலேயே அதிகுறைந்த பெறுமதியாகிய அரசாங்க வருமானம் 2025 ஆண்டில் 16.6% ஆக 23 வருடங்களுக்கு பின்னர் பதிவாகிய அதிகூடிய அரசாங்க வருமானமாகக் காணப்பட்டது. இது எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தில் சுமார் 110% ஆகும்.
- 2025 ஆண்டில் நடைமுறைக் கணக்கு, டொலர் 1,719 மில்லியனாக வரலாற்றின் அதிகூடிய மிகையொன்றை பதிவுசெய்ய எமக்கு முடியுமாக இருந்தது.
- 2025 ஆண்டில் வெளிநாட்டு பணவனுப்பல் வருவாய் ஐ.அ.டொலர் 8.1 பில்லியனாக வரலாற்றிலேயே அதிகூடிய பெறுமதியை பதிவுசெய்தது. அதேபோன்று இந்த ஆண்டின் ஒக்டோபர் மாதமளவில் அது ஐ.அ.டொலர் 7.6 பில்லியனாக காணப்பட்டது. அதன் பிரகாரம், இம்முறை டொலர் 9 பில்லியனை மிகைத்துச்

செல்கின்ற வெளிநாட்டு பணவனுப்பல் எதிர்பார்க்கப்படுகின்றது.

- 2022 ஆண்டின் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 114% ஆக காணப்பட்ட மத்திய அரசாங்கத்தின் கடன் தொகையை, 2025 ஆண்டின் இறுதியில் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் குறிப்பிடுவதற்கமைய 95% இற்கு குறைக்க முடியுமாக இருந்தது.
- 2022 ஆண்டில் அரசாங்கத்தின் வருமானத்தில் 79.1% வட்டிக் கொடுப்பனவுகளுக்காக செலவிடப்பட்ட அதேவேளையில், 2025 ஆம் ஆண்டில் 45.9% சதவீதம் வரையிலும், 2026 செப்தம்பர் அளவில் 39.6% வரையிலும், மேலும் குறைவடைந்தது.
- 2022 ஆண்டில் பிரதான 52 அரச தொழில்முயற்சிகள் பதிவு செய்துள்ள ரூபா 774.6 பில்லியன் ஒட்டுமொத்த வரிக்கு முன்னரான தேறிய நட்டம், 2025 ஆண்டு ரூபா 444.4 பில்லியன் இலாபமாக மாறியுள்ளது. அதன்மூலம், திறைசேரிக்கு இருந்த அழுத்தம் குறைக்கப்பட்டது. நாம் நட்டமடைந்த நிறுவனங்களை இலாமடையும் நிறுவனங்களாக மாற்றியுள்ளோம். 2026 ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 367 பில்லியன் வரிக்கு முன்னரான இலாபமொன்றை பதிவுசெய்துள்ளோம். ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம், 2008 இல் கையகப்படுத்தப்பட்டதிலிருந்து 2025 வரை ரூ. 528 பில்லியன் நஷ்டத்தைச் சந்தித்துள்ளது. அதற்கமைய ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் தொடர்ந்தும் பொதுத் திறைசேரிக்கு சுமையாக இருந்து வருகின்றது. அதற்குத் தேவையான தீர்வுகளை கண்டறிவதற்கு தற்போது அமைச்சரவையினால் நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.
- உலகச் சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பதை காரணமாகக் கொண்டு 2025 இல் ஒட்டுமொத்த எரிபொருள் இறக்குமதியின் பொருட்டு, டொலர் 4,042 மில்லியனாக காணப்பட்ட பெறுமதி, 2026 செப்தம்பர் மாதம் அளவில் டொலர் 4,487 மில்லியன் செலவிடப்பட்டமை, வாகன இறக்குமதிச் சந்தை திறக்கப்பட்டதற்கு மத்தியிலும், வெளிநாட்டு ஒதுக்கு 2026 ஒக்தோபர் மாதமளவில் ஐ.அ.டொலர் 7 பில்லியனுக்கும் அதிகமாக பதிவுசெய்துள்ளது.

- எவ்வாறாயினும், 2025 செப்தம்பர் மாதமளவில் 2.1% சதவீதமாக பதிவாகிய வருடாந்த பணவீக்கம் மத்திய கிழக்கு யுத்தத்திற்கு மத்தியிலும், அதிகரித்துச் சென்ற எரிபொருள் விலை, அதேபோன்று அதனோடு இணைந்த ஏனைய காரணிகளின் காரணமாக 2026 ஒக்டோம்பர் மாதமளவில் 8.3% சதவீதத்தை விட அதிகரித்திருந்தது.
- தனியார் துறைக்கு வணிக வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் 2024 ஆண்டில் ரூபா 8,156 பில்லியனாக காணப்பட்ட தெகை 2025 ஆண்டில் ரூபா 10,212 பில்லியன் வரை 25.2% இனால் அதிகரித்திருந்தது.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

கடந்த இரண்டு வருடங்களுக்குள், பொருளாதார, சமூகம் போன்ற உலகலாவிய தரப்படுத்தலில் இலங்கைக்கு அதிகூடிய முன்னேற்றத்தை அடைந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

- 2026 பிட்ச் தரப்படுத்தலுக்கு அமைவாக இலங்கை, 'CCC+' இலிருந்து 'B-' மட்டம் வரை உயர்வடைந்துள்ளது.
- 'ட்ரான்ஸ்பேரன்ஸ் இன்டநெஷனல்' நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட ஊழல் கருத்துச் சுட்டெண் (Curruption perception Index 2025/2026) இற்கு அமைவாக உலகலாவிய தரப்படுத்தலில் 14 இடங்கள் முன்னேறி 107 ஆவது இடத்தை அடைந்துள்ளது.
- உலகலாவிய சமாதான சுட்டிக்கு (2026) அமைவாக, இலங்கை 14 இடங்கள் முன்னேறி உலகலாவிய ரீதியில் 67 ஆவது இடத்தை அடைந்துள்ளது.
- குளோப் ட்ராடர் அன்ட் பிளாஷ் பேக் (GlobeTrotter & Flash Pack) ஆகியவற்றின்படி, 2025 ஆம் ஆண்டில் தனியாகப் பயணம் செய்பவர்களுக்கான உலகக் குறியீட்டில் இலங்கை முதலிடம் பிடித்தது.
- உலக பொருளாதார பேரவையினால், சுற்றுலா பொருளாதாரங்களின் துரிதமாக வளர்ச்சியைக் காட்டிய நாடுகளுக்கிடையே உலகில் 10 ஆவது இடத்திற்கு இலங்கை பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

- Conde'Nast சர்வதேச சஞ்சிகையினால் குடும்பத்தில் அனைவரும் ஒன்றாக சுற்றுலா செல்லக் கூடிய உலகின் சிறந்த பயண இடமாக இலங்கை பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.
- சர்வதேச நிதி நிறுவகத்தினால் (Institute on International Finance - IIF) மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டிற்கு அமைவாக வளர்ந்துவரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்து வருகின்ற 57 பொருளாதாரங்களுக்கு இடையே இலங்கை முதலீட்டு உறவை மேம்படுத்தும் முன்னேற்றத்தில் நான்காவது இடத்தையும், அரச கடன் பற்றி வெளிப்படுத்தும் தன்மையை மேம்படுத்தும் முன்னேற்றத்தில் ஐந்தாவது இடத்தையும் பெற்றுள்ளது.
- உலக வங்கியினால் இலங்கை 2020 ஆண்டில் உயர் நடுத்தர வருமானம் பெறும் நாடு என்ற நிலையிலிருந்து கீழ் நடுத்தர வருமானம் பெறும் நாடாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. பொருளாதாரம் மீண்டும் எழுச்சியடைந்ததை பிரதிபலித்து 2026 ஆண்டில் மீண்டும் உயர் நடுத்தர வருமானம் பெறும் நாடாக உயர்த்தப்பட்டுள்ளது.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

எமது அரசிறைக் கொள்கையின் வெற்றியை அளவிடுகின்ற அளவுகோள்கள் மேற்குறிப்பிட்ட விடயங்கள் மாத்திரமல்ல. பாதிப்புக்கு உள்ளான சிறுவர்கள், முதியோர்கள், அங்கவீனமுற்ற நபர்கள், நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டுள்ள தரப்பினர்கள், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மற்றும் அனர்த்தங்களின் மூலம் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் பராமரித்தல் என்பனவும் அதே அளவுக்கு முக்கியமானதாகும்.

2025 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் நாம் பொருளாதார நிலைபெறுத்தன்மை மற்றும் சமூக நியாயத்தன்மை ஆகியவற்றுக்கு அத்திவாரமிடப்பட்டது. 2026 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் உற்பத்தி, முதலீடு டிஜிட்டல்மயப்படுத்தல் மற்றும் நிறுவன மறுசீரமைப்பு ஆகியவற்றுக்கு அதிகூடிய கவனம் செலுத்தப்பட்டது. 2027 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் நாம் இதுவரை அடைந்து

கொண்டுள்ள பொருளாதார நிலைபெறுத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தியை அதிகரித்தல், பொருளாதாரத்தின் பங்குதாரர் என்ற வகையில் பொது மக்களை பங்குபற்றச் செய்தல், பொருளாதாரத்தில் அடைந்து கொள்கின்ற வெற்றியை மக்களுக்கு நியாயமான முறையில் பகிர்ந்தளித்தல் மற்றும் தேசிய பொருளாதாரத்தின் இறையாண்மையை அடைந்து கொள்வதற்கு தேவைப்படுகின்ற புதிய பொருளாதார மாற்றமொன்றுக்கு மறுசீரமைப்பினை மேற்கொள்வதாகும்.

பொருளாதார மாற்றமென்பது மேலும் ஒரு செலவுப் பட்டியலை சமர்ப்பிப்பது அல்ல. அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் சகல முதலீடுகளுக்கும் வழங்கப்படுகின்ற சகல வரிச் சலுகைகளையும், வழங்கப்படுகின்ற சகல கடன் பெறுகைகளையும் மற்றும் முன்மொழியப்படுகின்ற சகல சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் அதனூடாக ஏற்படுகின்ற பொருளாதார மற்றும் சமூக நன்மையின் அடிப்படையில் மதிப்பீடு செய்வதாகும்.

மக்கள் பொருளாதார நெருக்கடி காலத்தின் போது தாங்கிக்கொண்ட இந்த சந்தர்ப்பத்திலும் தாங்கிக் கொண்டிருக்கின்ற சகல அர்ப்பணிப்புகளையும் நிரந்தர அர்ப்பணிப்பாக மாற்றுவது எமது நோக்கமல்ல. பொருளாதார நிலைபெறுத்தன்மை, மிகச் சிறந்த வேலை வாய்ப்பு நியாயமான வருமானம் தரமான அரசாங்க சேவை பாதுகாப்பான சமூகத் தரத்தினர் மற்றும் எதிர்கால சந்ததயினருக்கு நிலைபேறான எதிர்காலம் ஒன்றை கட்டியெழுப்புதல் எமது கடமையாகும்.

2. 2027 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தின் 07 மூலோபாய நோக்கங்கள்

கௌரவ சபாநாயகர் அவர்களே,

2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை இந்த உயரிய சபைக்கு சமர்ப்பித்த சந்தர்ப்பத்தில் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு சவால்களுக்கு மத்தியில் அசையாமல் முன் செல்லக்கூடிய பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்புவதன் தேவையை நாம் வலியுறித்தினோம். 2025 ஆம் ஆண்டு இறுதியில் திட்வா சூறாவளி எமது மக்கள் வாழ்க்கைக்கு உற்பத்தி

நடவடிக்கைகளுக்கு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது. 2026 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் தீவிரமடைந்த மத்திய கிழக்கு யுத்தத்தின் காரணமாக வலுச்சக்தியின் விலை இறக்குமதி செலவுகள் மற்றும் வழங்கல் சங்கிலி என்பவற்றின் மீது புதிய அழுத்தம் ஏற்பட்டது.

திட்வா சூறாவளி போன்ற அனர்த்தத்திற்கு முகம் கொடுக்கும் போது அரசிறை வாய்ப்புக்களை நேரகாலத்துடன் கட்டியெழுப்புவது அரசாங்கத்திற்கு முக்கியமானதாகக் காணப்பட்டது. அதன் மூலம் அனர்த்தத்திற்கு உள்ளான மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் அத்தியவசிய சேவைகளை நடாத்திச் செல்வதற்கும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு மின்னுரிமைக்கு அமைவாக வளங்களை பயன்படுத்துவதற்கும் தேவையான நிதியாற்றலை வலுப்படுத்திக் கொள்வதற்கு எங்களுக்கு முடிந்தது.

இலங்கை நீண்டகாலமாக முகங்கொடுத்த அடிப்படை கட்டமைப்பு ரீதியான பேரண்டப் பொருளாதாரப் பிரச்சினையாக, வரவு செலவுப் பற்றாக்குறை, சென்மதி நிலுவை மற்றும் நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட பற்றாக்குறை என்பன காணப்பட்டன. சரியான வருமானம் மற்றும் செலவினக்கொள்கையின் மூலம் வரவு செலவுப் பற்றாக்குறையை குறிப்பிடத்தக்க அளவில் எம்மால் குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருந்த போதிலும், வெளிநாட்டுத்துறை இன்னும் தேவையானவாறு வலுவடையவில்லை. 2025 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் நடைமுறைக்கணக்கில் 1,853 மில்லியன் ஐ.அ.டொலர் மிகையொன்று பதிவாகியுள்ள போதிலும், 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் சுமார் ஐ.அ.டொலர் 420 மில்லியன் பற்றாக்குறை பதிவாகியது. அரசிறைத் துறையில் அடைந்து கொண்ட முன்னேற்றத்தை வெளிநாட்டுத் துறையை வலுவூட்டுகின்ற கட்டமைப்பு ரீதியான மாற்றத்திற்கு அடிப்படையாகக் கொள்ளல் வேண்டும்.

தற்காலத்தில் உலகப் பொருளாதாரத்தில் காணப்படுகின்ற நிலைமையை பார்க்கும் போது இந்த தேவைப்பாடு மேலும் தெளிவாகின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் 2026 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதத்தில் வெளியிடப்பட்ட உலக பொருளாதார எதிர்கால நோக்கிற்கு அமைவாக உலகளாவிய

பொருளாதார வளர்ச்சி 2026 ஆம் ஆண்டில் 3.1% வரை மந்தமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. யுத்தம் தீவிரமடைதல், வலுச்சக்தி மற்றும் உணவு வகைகளின் விலை அதிகரித்தல் மற்றும் சர்வதேச வர்த்தகத்தின் நிச்சயமற்ற தன்மை போன்ற இடர் நிலைமை இப்போதும் காணப்படுகின்றது.

இந்த நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கக் கூடிய நீண்டகால திட்டமொன்று எமக்கு தேவைப்படுகின்றது.

2.1 பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்தலும் பொருளாதாரத்தில் நிலைத்துநிற்கும் ஆற்றலை வலுப்படுத்துதலும்

பேரண்டப் பொருளாதாரம் மற்றும் அரசிறை ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்த வண்ணம், கடன் நிலைபேறான தன்மையை உறுதி செய்வதும், எதிர்கால உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அதிர்வுகளை எதிர்கொள்வதற்கு இலங்கையைத் தயார்படுத்துவதும் எமது பிரதான நோக்கமாகும். இதற்கு நிலைபேறான அரச வருமானம், விவேகமான செலவின முகாமைத்துவம், திட்டமிட்ட கடன் மீள்செலுத்தல், போதுமான அரசிறை வாய்ப்புக்கள் மற்றும் வலுவான வெளிநாட்டு கையிருப்புகள் தேவைப்படுகின்றன. விலை நிலைபெறுத்தன்மையைப் பேணுவதில் இலங்கை மத்திய வங்கியின் சட்டரீதியான பொறுப்புகளை மதித்து, அரசிறை மற்றும் நிதிக் கொள்கைகளுக்கு இடையில் போதுமான ஒருங்கிணைப்பைப் பேணுவதும் முக்கியமானதாகும்.

நாட்டில் பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச்செல்லப்பட்ட 2022 ஆம் வருடத்தின் மத்திய அரசாங்கத்தின் கடன் 114% ஆக காணப்பட்டது. கடன் நிலைபேறுதன்மையின் போது கவனத்தில் கொள்ளப்படுவது யாதெனில், மொத்த உள்நாட்டு உற்பத்திற்கும் அரசாங்கத்தின் வருமானத்திற்கும் ஏற்ப கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குள்ள ஆற்றல் மற்றும் உடனடி கடன் சேவைகளைத் தீர்ப்பதற்குப் போதுமான திரவநிலை காணப்படுகின்றதா என்பதாகும்.

2032 ஆம் ஆண்டாகும் போது அரசாங்கத்தின் கடனை 95% என்ற மட்டத்திற்கு கொண்டு வருவதே எமது இலக்காகும். அரசிறை முகாமைத்துவ முன்னேற்றத்தைப் பொறுத்து, இது 87% ஆகக்

குறையும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் 6 ஆவது பகுப்பாய்வு எதிர்வுகூறியுள்ளது. அரசாங் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் தலைமையில் கடன் நிலைபேறுத்தன்மையைப் பேணுவதற்காக, வருடாந்த கடன்களைப் பெற்றுக்கொள்ளும் திட்டங்களும் உபாயங்களும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. 2025 ஆம் ஆண்டில், மத்திய அரசின் கடன் வீதம் 95% இனை எட்டியிருந்தது. ஒட்டு மொத்த வெளிநாட்டுக் கடன் தீர்ப்பனவு 2025 இல் ஐ.அ. டொ. 3,707 மில்லியனாகவும், 2026 இல் ஐ.அ. டொ. 3,591 மில்லியனாகவும் இருந்தது. இது 2027 மற்றும் 2028 இல் முறையே ஐ.அ. டொ. 2,986 மில்லியன் மற்றும் ஐ.அ. டொ. 3,574 மில்லியனாக இருக்கும். இந்தக் கடனைச் செலுத்துவதற்குத் தேவையான நிலையுறுதியை நாம் கொண்டுள்ளோம்.

2.2 முதலீடு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதிகளை அடிப்படையாகக்கொண்ட பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துதல்

உயர் உற்பத்தித்திறன் கொண்ட, ஏற்றுமதி போட்டித்தன்மை வாய்ந்த, உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கிய கட்டமைப்பு ரீதியான மாற்றத்தை துரிதப்படுத்துவதே எமது இலக்காகும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனியார் முதலீடுகளை விஸ்தரித்தல், ஏற்றுமதிப் பொருட்கள் மற்றும் சந்தை பன்முகப்படுத்துதல், சர்வதேச ரீதியில் பெறுமதி சங்கிலித் தொடருடன் இணைதல் மற்றும் அதிக பெறுமதிசேர் கைத்தொழில்கள் மற்றும் சேவைகளை ஊக்குவித்தல் ஆகியன இங்கு பிரதான துறைகளாகும்.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கான நிதி பிரவேசங்களை விஸ்தரிப்பதற்கும், முதலீட்டாளர்களுக்குத் தெளிவானதும் வெளிப்படையானதுமான முதலீட்டுச் சூழலொன்றை உருவாக்கவும் நாம் செயற்பட்டு வருகிறோம்.

2.3 தொழில்நுட்பம், புத்தாக்கம் மற்றும் மானிட மூலதனம் என்பவற்றினூடாக உற்பத்தி விளைவுப்பெருக்கத்தை அதிகரித்தல்

கல்வி, திறன் விருத்தி, ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் டிஜிட்டல் பரிவர்த்தனை ஆகியவற்றை பலப்படுத்துவதன் மூலம் தேசிய உற்பத்தி விளைவுப்பெருக்கத்தை அதிகரித்தல், அரச சேவைகளை நவீனமயப்படுத்தல், டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளை விஸ்தரித்தல், புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை ஊக்குவித்தல் மற்றும் கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், கைத்தொழில் ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் என்பனவற்றின் மீது நாம் முன்னுரிமை அளிக்கிறோம்.

குறிப்பாக, மாற்றமுறும் உள்நாட்டு மற்றும் உலக தொழிற் சந்தைக்குத் தேவையான நிபுணத்துவங்களை எமது இளைஞர் சமுதாயத்திற்கு வழங்குவதும், அறிவு மற்றும் புத்தாக்கங்களை வருமானங்களாக மாற்றுவதும் இன்றியமையாதது. தொழில்நுட்பத் திறன் வாய்ந்த பணியாளர்களும், அதிக உற்பத்தித்திறனுடன் கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியும், ஏற்றுமதிப் போட்டித்திறனையும் அந்நியச் செலாவணி ஈட்டும் திறனையும் அதிகரிக்கும்.

2.4 கிராமியப் பொருளாதாரத்தை வலுவூட்டலும், அனைவருக்கும் பயனளிக்கும் வளர்ச்சியை உறுதிப்படுத்தலும்

ஏற்றுமதி மற்றும் கிராமிய வருமான வளர்ச்சிக்கு விவசாய உணவுத் துறையில் காணப்படுகின்ற ஆற்றல் மிக உயர்வானது. உற்பத்தி விளைவுப்பெருக்கத்தை அதிகரிப்பதற்கு பங்களிப்புச்செய்யாத, பரந்த மற்றும் இலக்கற்ற மானியங்கள் மீது பெரிதும் சார்ந்திருப்பதற்குப் பதிலாக, பயனற்ற காணிகளை உற்பத்தித்திறன் கொண்ட பயிர்செய்கைகளுக்கு பயன்படுத்துதல், விவசாய ஆராய்ச்சி, காலனிலைக்கு ஏற்ற தொழில்நுட்பங்கள், நீர் முகாமைத்துவம், களஞ்சிய மற்றும் குளிர் களஞ்சிய வசதிகள், உற்பத்தித் தரச் சான்றிதழ் மற்றும் டிஜிட்டல் முறைமைகள் என்பன மீது அதிக முன்னுரிமை அளிக்கப்படுதல் வேண்டும். காணிப்

பயன்பாடு, கிராமிய நிதி அணுகல் மற்றும் உற்பத்தியாளர்களைச் சந்தைகளுடன் இணைத்தல் என்பன சம்பந்தமாக காணப்படுகின்ற தடைகளை முறையான ஆய்வின் பின் தீர்த்து வைப்பதும் கட்டாயமாகும். இதன்மூலம், கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை வலுவூட்டல், உணவுப் பாதுகாப்பு மற்றும் அந்நியச் செலாவணி வருவாய் ஆகியவற்றை ஒரே அபிவிருத்தித் தொழிற்பாட்டின் விளைவுகளாக மாற்ற முடிகின்றது.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களை ஊக்குவித்தல், கிராமிய மக்களுக்குப் புதிய பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குதல், நவீனதொழிற் சந்தைக்குத் தேவையான தொழில்நுட்ப, தொழில்சார் மற்றும் மொழி ஆற்றல்களை விருத்திசெய்வதனூடாக கிராமிய மட்டத்தில் புதிய பொருளாதார மாற்றமொன்றை ஏற்படுத்த முடிகின்றது.

2.5 வலுச்சக்தி சந்தை ஸ்திரத்தன்மையும் மற்றும் தொடர்ந்து முன்னெடுத்தலும்

சர்வதேச ரீதியில் எரிபொருள் விலை அதிகரித்தல், விநியோகச் சங்கிலி தடைப்படுதல் மற்றும் காலனிலை மாற்றங்கள் என்பன எமது நாட்டின் வலுச்சக்தித் துறையில் உறுதி இன்மைக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. எமது நோக்கம் வலுச்சக்தித் துறையில் நாம் எதிர்கொள்கின்ற இந்த அடிப்படையை மாற்றியமைப்பதாகும். இதற்காக, புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தியை விஸ்தரித்தல், மின்சார வழங்கல் வலையமைப்பு, வலுச்சக்தி சேமிப்பு, வலுச்சக்தி வினைத்திறனை மேம்படுத்துதல் என்பன முக்கியம் பெறுகின்றன. பல்வேறு விநியோக வழிகள் மற்றும் வலுச்சக்தி மூலங்களைப் பயன்படுத்துவதன் மூலம், அத்தியாவசிய வலுச்சக்தி விநியோகத்தின் இடையறாத் தன்மையைப் பாதுகாக்கும் அதேவேளை, இறக்குமதி செய்யப்படுகின்ற எரிபொருளுக்காகச் செலவாகும் அந்நியச் செலாவணியின் மீது காணப்படுகின்ற நீண்டகால அழுத்தத்தைக் குறைப்பதும் எமது இலக்காகும்.

2.6 காலநிலை அனர்த்தங்களைத் தாங்கக்கூடிய ஆற்றலை வலுப்படுத்துதல்

எதிர்கால அனர்த்தங்களைத் தாங்கக்கூடிய தரநிர்ணயங்கள், பூர்வாங்க எச்சரிக்கை மற்றும் முறையான பராமரிப்புத் திட்டங்களைக் கடைப்பிடித்தல் என்பன முக்கியமானதாகும். அத்துடன், உணவு விநியோகச் சங்கிலி, களஞ்சியப்படுத்தல், பொதுப் போக்குவரத்து மற்றும் அத்தியாவசியப் பொருள் விநியோக முறைகள் என்பவற்றை வலுப்படுத்தப்பட வேண்டும். அத்தியவசிய தொடர்பாடல் வசதிகள், மின்சாரம் போன்ற சேவைகளின் இடையறாத் தன்மை உறுதி செய்யப்படுதல் வேண்டும். எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படக்கூடிய அபாயங்களை முழுமையாக தவிர்க்க முடியாத போதிலும், அவற்றால் பொருளாதார செயற்பாடுகள் மந்தமடைவதையும் மக்களின் வாழ்வுக்கு ஏற்படுத்தும் அழுத்தங்களையும் குறிப்பிடத்தக்க அளவில் மட்டுப்படுத்துவதே எமது நோக்கமாகும்.

2.7 அரச பொறிமுறையை நவீனமயப்படுத்துதல்

மக்களுக்குத் தரமான சேவைகளை வழங்குகின்ற, முதலீடு மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளை இலகுபடுத்துகின்ற, சட்டத்திற்குப் பொறுப்புக் கூறுகின்ற மற்றும் வெளிப்படைத்தன்மையைக் கொண்ட வினைத்திறன்மிக்க அரச பொறிமுறையொன்றைக் கட்டியெழுப்புவது இன்றியமையாதது. அரசிறை முகாமைத்துவம், அரச தொழில்முயற்சியும் சொத்து முகாமைத்துவமும், வரி நிர்வாகம், மற்றும் பெறுகைத் தொழிற்பாடுகளை நவீனமயப்படுத்தல் இங்கு இன்றியமையாத அம்சங்களாக காணப்படுகின்றன. ஊழலையும் தேவையற்ற நிர்வாகத் தாமதங்களையும் மட்டுப்படுத்திய வண்ணம் சட்ட ஆதிக்கத்தையும் பொறுப்புக் கூறுதலையும் பலப்படுத்தல், பொது மக்களின் நம்பிக்கையை மேம்படுத்துவதும் அரச வளங்களைப் பாதுகாப்பதும் ஒரே மாதிரியான முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

3. நடுத்தர கால பேரண்டப் பொருளாதாரமும் அரசிறை முன்னோக்கிய பயணப்பாதையும்

கௌரவ சபாநாயகர் அவர்களே,

எமது நடுத்தர கால பொருளாதார இலக்கு 7% அல்லது அதிலும் கூடிய நிலைபேறான பொருளாதார அபிவிருத்தி வேகத்தை நோக்கி பயணிப்பதாகும். நாங்கள் எதிர்பார்க்கும் பொருளாதார மாற்றத்திற்கு பலமானதும் நம்பகமானதுமான அரசிறை அடித்தளமொன்று காணப்படுவது அத்தியவசியமாகும். அதற்கமைய, 2027 – 2031 நடுத்தர கால அரசிறை பணிச்சட்டம் மற்றும் அரசிறை முகாமைத்துவ சட்டத்தினூடாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள பொறுப்புசார் பணிச் சட்டத்திற்கு ஏற்ப அரசிறை ஒருமைப்பாட்டை தொடர்ந்தும் பேணிச்செல்வதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம். மொத்த தேசிய உற்பத்தியில் 2.3% ஆரம்ப மிகையைப் பேணிச்செல்வதும் வரவு செலவுப் பற்றாக்குறையை 5% இலும் குறைந்த மட்டத்தில் பேணிச்செல்வதும், அரச கடன்களை நிலைபேறான பாதையின் பக்கம் செலுத்துவதும் எமது அடிப்டை அரசிறை இலக்காக காணப்படுகின்றது.

நடுத்தர கால அரச வருமானங்களை மொத்த தேசிய உற்பத்தியில் 16% இற்கும் குறைந்த மட்டத்தில் பேணிச்சென்று, நீண்ட கால அடிப்படையில் சுமார் 20% வரை படிப்படியாக அதிகரிப்பதே எமது நோக்கமாகும். இந்த இலக்கை அடைவதற்காக வரி அடித்தளத்தை விஸ்தரித்தல், வரி விலக்கு மற்றும் ஊக்குவிப்பை தர்க்கரீதியானதாக்குதல், வரி நிருவாகத்தை டிஜிட்டல் மயப்படுத்தல் மற்றும் வரி இசைவினை பலப்படுத்தல் போன்றவற்றுக்கு தேவையான மறுசீரமைப்புகள் முன்னெடுக்கப்படும்.

அரசிறை முகாமைத்துவச் சட்டத்தின் பிரகாரம், ஆரம்ப செலவின எல்லைக்கு ஏற்ப நடுத்தர கால செலவினங்களைப் பேணிச் செல்வதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். எவ்வாறாயினும், திட்வா சூறாவளியால் சேதத்திற்குள்ளான உட்கட்டமைப்பு வசதிகளை புனரமைப்பதற்கும் மக்களின் வாழ்வை சுமுக நிலைக்கு கொண்டுவருவதற்கும் தேவையான

மேலதிக நிதி ஒதுக்கீடுகள் காரணமாக 2027 ஆம் வருடத்திற்கான ஆரம்ப செலவினம் மொத்தத் தேசிய உற்பத்தியில் 13.6% வரை தற்காலிகமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த விஷேட செலவினத்தேவைகளை சட்டரீதியான அரசிறைப் பணிச்சட்டத்தினுள் இருந்துகொண்டு முகாமை செய்த வண்ணம், 2028 ஆம் வருடத்திலிருந்து ஆரம்ப செலவினத்தை மொத்த தேசிய உற்பத்தியில் 13% வரை மீண்டும் கொண்டுவருவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

2027 ஆம் வருடத்திலிருந்து, அரச முதலீடுகளை மொத்த தேசிய உற்பத்தியில் 4% த்தைத் தாண்டிய மட்டத்தில் பேணிச்செல்வதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம். 2027 ஆம் வருடத்தில் மூலதன செலவுகள் மொத்த தேசிய உற்பத்தியில் வீதமொன்றாக, வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக 4.48% உம் திட்வா அனர்த்தத்திற்கான குறைநிரப்பு மதிப்பீட்டில் 0.64% ஆக ஒட்டுமொத்த அரச முதலீடு 5.12% என்றவாறு ரூ. 2,000 பில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) செய்துகொள்ளப்பட்ட விரிவாக்கப்பட்ட கடன் வசதி நிகழ்ச்சித்திட்டம் அடுத்த வருடம் மார்ச் மாதம் நிறைவு செய்யப்படவுள்ளது. அதற்கமைய, 17 ஆவது IMF நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். உள்நாட்டுப் பொருளாதாரத்தை ஸ்திரநிலைப்படுத்தும் வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுவரும் அதேவேளை, பொருளாதார மாற்றலுக்கு ஆயத்தமாகும் இச் சந்தர்ப்பத்தில், உலகலாவிய மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை எதிர்வுகூறுவது சிரமமாகும். இவ்வாறான நிலைமைகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு எமது இருப்புகள் மென்மேலும் பலமாக இருக்க வேண்டுமென்றே நாம் நம்புகின்றோம்.

எனவே, தற்போதைய IMF நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின் மீண்டும் நிகழ்ச்சித்திட்டமொன்றிற்குச் செல்வதற்கான சாத்தியக்கூறு தொடர்பாகவும் அந்நிகழ்ச்சித்திட்டம் எவ்வாறான நிகழச்சித்திட்டமாக இருக்க

வேண்டும் என்பது தொடர்பாகவும் தேடிப்பார்த்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு அமைச்சரவையினால் நிதி, திட்டமிடல் பிரதியமைச்சரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சமூக நீதிக்காகவும் மக்களின் பாதுகாப்பிற்காகவும் பொருளாதார மற்றும் இயற்கை அனர்த்தங்களின் முன்னே அதிகூடிய அவதானத்திற்கு முகம் கொடுக்கின்ற குறைந்த வருமானமுடையவர்களையும் ஆபத்திற்கு உட்படக்கூடிய குடும்பங்களையும் பாதுகாக்கும் பொருட்டு இலக்கு வைக்கப்பட்ட சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்ந்தும் பலப்படுத்தப்படும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

எமது மக்கள், இந்த பொருளாதார ஸ்தீரத்தன்மைக்காக அர்ப்பணிப்புகளையும் தியாகங்களையும் மேற்கொண்டிருந்தார்கள் என்பதுடன், அவற்றைத் தாங்கிக்கொண்டார்கள். நாம் எல்லோரும் அவர்களுக்கு எமது கௌரவத்தை அளித்தல் வேண்டும். அவர்களுடைய இந்த தாங்கிக்கொள்ளும் சக்திக்கு நியாயத்தை நிறைவேற்றுவது என்பது, பொருளாதார ஸ்திரத்தன்மையில் இருந்து மாற்றத்தை நோக்கி வேகமான திருப்பமொன்றை அடைவதாகும். இதற்காக 2027 ஆம் வருடத்திற்கான வரவுசெலவுத்திட் முன்மொழிவுகளை இந்த உயரிய சபைக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

பொருளாதார மாற்றத்திற்கான அத்தியவசிய அடித்தளத்தை கட்டியெழுப்புதல்

4. சட்டக் கட்டமைப்பை வலுப்படுத்தல்

எதிர்பார்க்கப்படுகின்ற பொருளாதார மாற்றத்தை அடைவதற்கும் வினைத்திறனை அதிகரிப்பதற்கும் புதிய பலமான சட்டக் கட்டமைப்பொன்றும் நிறுவனக் கட்டமைப்பொன்றும் இருப்பது இன்றியமையாதது. எமது ஒரு சில சட்டங்களை நோக்கும் போது அவை 100 வருடங்களுக்கும் மேல் பழைமை வாய்ந்தனவாக காணப்படுகின்றன. எமது சில நிறுவனங்களின் பணிகள்

நிறைவடைந்துவிட்டது. அத்தகைய, சட்டங்களும் நிறுவனங்களும் நாங்கள் எதிர்பார்க்கும் பொருளாதார மாற்றத்தை அடைவதற்கு தடையாக காணப்படுகின்றன. எனவே, புதிய பொருளாதார மாற்றத்தை அடைவதற்கு பழைய மற்றும் காலங் கடந்த சட்டங்களையும் நிறுவனங்களையும் தற்போதைய சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடியவாறு திருத்தியமைப்பதும், ஏற்பட்டுள்ள புதிய நிலவரங்களுக்கு ஏற்றவாறு புதிய சட்டங்களை வகுப்பதும் நிறுவனங்களைக் கட்டியெழுப்புவதும் இன்றியமையாததாகும். அதற்கமைய, இந்த கைவிலங்கை அகற்றாமல் எங்களுக்கு முன்னோக்கிப் பயணிக்க முடியாது. இதற்காக;

- தொற்றுநோய், இயற்கை அனர்த்தங்கள், பயங்கரவாத நடவடிக்கைகள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக வீழ்ச்சியடைந்த தொழில்முயற்சிகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு, பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கு மற்றும் கடன்படுனர்களின் கடனைச் செலுத்துவதற்கு சந்தர்ப்பமொன்றைப் பெற்றுக்கொள்ளும் வகையில் "2026 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டம்" நிறைவேற்றப்பட்டுள்ளது.
- "2026 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பணம் தூய்தாக்கல் தடை (திருத்ச்) சட்டம்" ஊடாக பணம் தூய்தாக்கலை தடுப்பதை பலப்படுத்துவதற்குத் தேவையான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- "2026 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் (திருத்த) சட்டம்" ஊடாக நிதி முறைமைக்குள் அறிக்கையிடாமை காரணமாக இருந்த அவதானத்தை குறைப்பதற்கும், இதற்கு இணங்காதோருக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- "2026 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க பயங்கரவாதிகளுக்கு பணம் சென்றடைவதைக் கட்டுப்படுத்தும் உடன்பாட்டு (திருத்தச்) சட்டம்" ஊடாக நிதி முறைமையை பலப்படுத்துவதனூடாக தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலாகும் விதத்தில் நிதியிடலும்

மற்றும் இலங்கையைப் பயன்படுத்தி உலகப் பயங்கரவாதத்திற்கு நிதியிடலும் தடுக்கப்பட்டுள்ளது.

- நுண்நிதிக் கடன்களைப் பெற்றுக்கொண்ட பலர் தற்சமயம் பாரிய கடன் வலைக்குள் சிக்கிக்கொண்டுள்ளனர். அவர்களுடைய பாதுகாப்புக் கருதி ஏற்கனவே "2026 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டம்" நிறைவேற்றப்பட்டுள்ளது. அதற்கமைய மேற்படி "நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டம்" 2027 ஆம் வருடத்தில் தாபிக்கப்பட்டு, தொழில்முயற்சிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவோருக்கு பாதுகாப்பைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- அரச தனியார் துறை கூட்டுமுயற்சி கருத்திட்டங்களை ஆரம்பித்தல், அபிவிருத்தி, முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை என்பவற்றிற்காக ஏற்கனவே "அரச தனியார் துறை கூட்டுதொழில் முயற்சிச் (PPP) சட்டம்" வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இச்சட்டமூலத்தை 2027 ஆம் வருட ஆரம்பத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- அரசிற்கு பங்குரிமை கம்பனிகளை வினைத்திறன் மிக்கவாறு முகாமை செய்வதற்காக ஒருங்கிணைந்த உரித்துக் கம்பனியொன்றை (holding company) கூட்டிணைக்கும் வகையில் "அரசுக்குச் சொந்தமான வர்த்தகத் தொழில் முயற்சிகளை முகாமை செய்வதற்கான சட்டம்" இதன் சட்டவரைவு தற்சமயம் சட்டமா அதிபருக்கு இசைவுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இதற்காக ஏற்கனவே அரசுக்குச் சொந்தமான 34 கம்பனிகள் இனங்காணப்பட்டுள்ளன.
- முதலீட்டாளர்களுக்குச் சொந்தமான முதலீடுகளை சொத்து ஊக்குவிப்பும் பாதுகாப்பும், நியாயமானதும் சமமாகக் கருதப்படுவதையும் அத்தாட்சிப்படுத்துவதற்கும், நட்டஈடு செலுத்துதல் மற்றும் பிணக்குகளைத் தீர்ப்பது சம்பந்தமாக ஏற்பாடுகளைச் செய்வதற்கும்

"முதலீட்டுப் பாதுகாப்பு சட்ட வரைவு" தற்சமயம் சட்டமா அதிபரின் இணக்கப்பாட்டிற்காக அனுப்பப்பட்டுள்ளது.

- கொழும்பு துறைமுக நகரத்திற்கு வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தெடுப்பதற்கும், முதலீட்டாளர்களுக்கும் அங்கு பணியாற்றுவோர்களுக்கும் கூடுதல் வசதிகளை வழங்கும் வகையில் "கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு (திருத்த) சட்டம்" சட்டவரைவு சட்டமா அதிபரின் இணக்கப்பாட்டிற்காக அனுப்பப்பட்டுள்ளது.
- தொழில்சார் காப்புறுதியாளர்களின் தரத்தை மேம்படுத்துவதையும், தொழில்சார் பயிற்சியை விருத்தி செய்வதையும் நோக்காகக் கொண்ட புதிய நிறுவனம் ஒன்றை தாபிக்கும் பொருட்டு "இலங்கை தொழில்சார் காப்புறுதியாளர்களின் நிறுவனச் சட்டம்" வரையப்பட்டு வருகின்றது.
- இக் கால கட்டத்தில் கொள்கைசார் தீர்மானங்களை எடுக்கும் போது மிக முக்கியமான விடயமாக காணப்படுவது தரவுகளும் தகவல்களும் ஆகும். இலங்கையின் உத்தியோகபூர்வ தொகை மதிப்பீட்டு விபரங்களைத் தயாரித்தல், ஒருங்கிணைப்பு மற்றும் கட்டுப்பாடு என்பவற்றின் பொருட்டு "தேசிய புள்ளிவிபரச் சட்டம்" வரையப்பட்டு வருகின்றது.
- சுங்கத் திணைக்களத்தில் வினைத்திறன் மிக்கதும், வெளிப்படையானதுமான வியாபார நடவடிக்கைகளுக்கு வசதிகளை செய்யும் நோக்குடன் " சுங்க கட்டளை (திருத்த) சட்டம்" என்ற சட்டத்தை 2027 ஆம் வருட ஆரம்பத்தில் நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வருடத்தின் ஒக்தோபர் மாதத்தில் இருந்து சுங்கத் திணைக்களத்தில் கடதாசியற்ற (Paperless) நிகழ்ச்சித் திட்டம் அமுல்செய்யப்பட்டு, ஒரு நூற்றாண்டு காலமாக பயன்படுத்தப்பட்டு வந்த இதன் ஒரு பிரிவான சுங்க நீள அறை (Custom Long Room) டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டுள்ளது.
- இலங்கை கணக்கீட்டு தர நிர்ணயங்கள், இலங்கை கணக்காய்வு தர நிர்ணயங்கள் மற்றும் தரக் கட்டுப்பாடு தொடர்பான

ஒழுங்குபடுத்தல் தர நிர்ணயங்கள் ஆகிய தர நிர்ணயங்களை முறைப்படுத்தும் பொருட்டு "நிதி அறிக்கையிடல் ஒழுங்குபடுத்தல் (திருத்த) சட்டம்" திருத்தப்படும்.

- "உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்" இச் சட்டத்தை அமுல்செய்யும் போது எழுந்துள்ள நீண்ட கால பிரச்சினைக்களுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் பொருட்டு இச் சட்டம் திருத்தப்படும்.
- நிதிக் கம்பனிகளை ஒழுங்குமுறைப்படுத்தலையும் மேற்பார்வையையும் பலப்படுத்தல், அனுமதியற்ற நிதி தொழில்முயற்சிகளை புலனாய்வு செய்தலும் அவற்றிற்கு எதிராக வழக்குத் தொடுத்தல், சாத்தியவளமற்ற நிதி தொழில்முயற்சிகளை மூடுவதற்கான தேவைகளை வலுவூட்டல் என்பவற்றின் பொருட்டு "நிதி தொழில் முயற்சிகள் சட்டம்" திருத்தப்படும்.
- அரச சொத்து முகாமைத்துவத்தில் காணப்படுகின்ற தேவைகளை நிறைவேற்றும் வகையில் "அரச சொத்து முகாமைத்துவச் சட்டம்" கொண்டுவரப்படும்.
- உற்பத்தி விளைவுப்பெருக்கமுடையவாறும் வினைத்திறன் மிக்கவாறும் முதலீட்டு மற்றும் உற்பத்தி தொழிற்பாட்டைப் பேணிச்செல்வதற்குத் தேவையான சிறந்த வேலை சூழலொன்றை ஏற்படுத்தும் வகையில் தொழில்சார் பொறுப்புகளையும் பொறுப்புக்கூறலையும் திட்டவட்டமாக இனங்காணுகின்ற தொழில்தருநர் – தொழில்பெறுநர் உறவினை ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்டு, பல தசாப்தங்களாக காணப்படுகின்ற காலங் கடந்த தொழில் சட்டத்தை தற்கால சமூக பொருளாதார தேவைகளுக்கு ஏற்றவாறு திருத்துவதற்கு அமைச்சரவையினால், நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக் குழு தேசிய தொழில் ஆலோசனை சபை உட்பட சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கருத்திற்கொண்டு சிபாரிசுகளை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

செய்யப்படவேண்டிய அத்தியவசிய கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள்

- அரசாங்கக் காணிகளை முதலீட்டாளர்களுக்கு பெற்றுக்கொடுக்கும் போது ஏற்படுகின்ற தாமதங்களை குறைப்பதற்கும் கருத்திட்டத்தின் தேசிய முக்கியத்துவம், உருவாக்கப்படுகின்ற தொழில் வாய்ப்புகளின் அளவு மற்றும் முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்ற பிரதேசங்களுக்கு ஏற்றவாறு, பெற்றுக்கொடுக்க வேண்டிய நிவாரணங்கள் சம்பந்தமாக சிபாரிசுகளை முன்வைப்பதற்காக அமைச்சரவையினால் உத்தியோத்தர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.
- முதலீட்டு ஊக்குவிப்பின் பொருட்டு தனியார் துறையையும் சர்வதேச அனுபவங்களுடைய தொழில் நிபுணர்களையும் கொண்ட 100% திரைசேறிக்கு உரித்தான தனியார் கம்பனியொன்றை நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இக் கம்பனிக்கும், Gov Tech நிறுவனத்தை நிறுவும் போது, கருத்திற்கொள்ளப்பட்ட சந்தைக்கு ஏற்ற சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- தற்சமயம் கெசினோ, இணையவழிச் சூதாட்டம் உள்ளிட்ட பிற சூதாட்ட வகைகளின் கீழ் வரும் விளையாட்டுக்களை ஒழுங்குமுறைப்படுத்தும் வகையில் சூதாட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபை ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது. நிபுணர்களின் உதவியுடன், தேவையான ஒழுங்குமுறைப்படுத்தல் ஒழுங்குவிதிகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.
- தெரிவு செய்யப்பட்ட சில ஏற்றுமதிகளுக்காக இம் மாதம் ஐந்தாம் திகதியில் இருந்து முன்னோடிக் கருத்திட்டமொன்றாக ஆரம்பிக்கப்பட்டுள்ள வர்த்தகத்திற்கான தேசிய ஒற்றைச் சாளர (National Single Window for Trade) கருத்திட்டத்தின் முதற் கட்டமாக ஏற்றுமதியாளர்கள் 2027 ஆரம்பத்திலும், இறக்குமதியாளர்கள் மற்றும் மீள்-கப்பலேற்றல் 2027 இன் கடைசிப் பகுதியிலும்

மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக ரூ. 1,990 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

- முதலீட்டுக்கான தேசிய ஒற்றை சாளர (National Single Window for Investment) கருமபீடத்தினை அமைப்பதற்காக ஆலோசனை கம்பனியொன்றை பெற்றுக்கொள்ளும் பொருட்டு விலைகூறல்கள் கோரப்பட்டு தற்சமயம் அவ் விலைகூறல்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. இதனை நிறுவும் பொருட்டு ரூ. 100 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.
- இலங்கைச் சுங்கத்தின் எல்லைக் கட்டுப்பாட்டுத் தொழிற்பாட்டை வலுப்படுத்தும் பொருட்டு ஸ்கேனர் கட்டமைப்பை விரிவுபடுத்தும் வகையில் உடல் ஸ்கேனர் இந்திரங்களையும் கொள்கலன் ஸ்கேனர் இயந்திரங்களையும் பெற்றுக் கொள்வதற்காக ரூ. 1,000 மில்லியனை ஒதுக்குவதற்கு முன்மொழியப்படுகின்றது.
- "துறைமுகங்களுக்கிடையில் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்கள்" முறைமையை அறிமுகம் செய்தல், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களை ஏற்றுமதியின் பக்கம் செலுத்தும் பொருட்டு தற்போதுள்ள "ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களை வரி நிவாரணத்துடன் தீர்த்தல்" தொழிற்பாடு (TIEP) என்பவற்றை நவீனமயப்படுத்துவதற்கு முன்மொழியப்படுகின்றது.

5. சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள்

இலங்கையை உலக வர்த்தக வலையமைப்புடன் தொடர்புபடுத்தும் வகையில் தற்போதுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை இற்றைப்படுத்துவதற்கும், மேலும் சில அரசுகளுடன் புதிய வர்த்தக ஒப்பந்தங்களை செய்துகொள்வதற்கும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

- இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை விஸ்தரிப்பதற்காக ஏற்கனவே அமைச்சரவையினால் உத்தியோத்தர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

- சீனாவுடன் புதிய வர்த்தக ஒப்பந்தமொன்று தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.
- வலய விரிவாக்கல் பொருளாதார கூட்டுமுயற்சியில் (RCEP) இணைவதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.
- ஐக்கிய அரபு இராச்சியத்துடனும் ஓமானுடனும் விரிவாக்கப்பட்ட பொருளாதார கூட்டுமுயற்சி ஒப்பந்தங்களை செய்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- ஏற்றுமதி போட்டித் தன்மை, ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் மற்றும் நிலைபேறான உற்பத்தி என்பவற்றை ஊக்குவிப்பதற்காக 2027 - 2030 காலப் பகுதியில் ஐரோப்பா சங்கத்தின் ரூ. 3,430 மில்லியன் கொடையின் கீழ் "இலங்கை - ஐரோப்பா சங்க நிலைபேறான வர்த்தக மற்றும் பொருளாதார ஒருங்கிணைந்த கருத்திட்டம்" நடைமுறைப்படுத்தப்படும்.

அத்துடன், சாத்தியவள ஆய்வுகளின் பின் பிற நாடுகளுடன் புதிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை செய்துகொள்வதற்கும் நாங்கள் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

6. வலுச்சக்தி

எதிர்கால பொருளாதார மாற்றம், தேசிய பாதுகாப்பு, மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் சார்பில் வலுச்சக்தித் துறையில் மாற்றம் நிறைந்த மாற்றமொன்று தேவைப்படுகின்றது. நிலையான, தொடர்ச்சியான வலுச்சக்தி வழங்களை உறுதிப்படுத்தல், உற்பத்தி ஆகுசெலவை குறைத்தல் என்பவற்றை இலக்காகக் கொண்ட வலுச்சக்தித் துறையில் புதிய மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்குத் தேவையான திட்டங்கள் இவ் வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

6.1 மின்சாரம்

இன்று எமது நிறுவப்பட்டுள்ள கொள்ளளவில் சுமார் 62% புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி மூலம் கிடைக்கப் பெறுகின்றது. 2029 ஆம் வருடமாகும் போது இதனை 69% வரை அதிகரிப்பதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

சூரிய சக்தி மற்றும் காற்று போன்ற வானிலை மற்றும் காலநிலை நிலவரங்களின் அடிப்படையில் மாற்றமடைகின்ற வலுச் சக்தி வகைகள் கூடுதலாக சேரும் போது மின்சாரக் கட்டமைப்பின் திடநிலை கட்டுப்பாடு தொடர்பில் நாங்கள் மிகவும் கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும். 2025 பெப்ரவரி மாதத்திலும் மற்றும் 2026 ஒக்தோபர் மாதத்திலும் தேசிய மின்சார மின்சாரக் கட்டமைப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி, முறைமைப் பாதுகாப்பு கட்டுப்பாடு மின்சார வழங்கல் முகாமை தொடர்பாகவும் வலையமைப்பின் பாதுகாப்பு முறை தொடர்பாகவும் சிந்தித்துப் பார்ப்பதற்கு முக்கியமான பாடமொன்றாக விளங்கியது. அவ்வாறான சம்பவங்கள் மீண்டும் ஏற்படாதிருப்பதற்கு எமது மின்சாரக் கட்டமைப்பை தொழில்நுட்ப ரீதியாக பலப்படுத்தும் பொருட்டு ரூ. 26.5 பில்லியன் நிதியை முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி கூடிய சதவீத்தில் தேசிய மின்கட்டமைப்புடன் சேர்க்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் மின்கட்டமைப்பின் திடநிலையை பேணிச்செல்வதற்கு துணையாக அமைகின்ற அதன் நிலைபெறுத்தன்மையைப் பராமரிக்க உதவும் வகையில், 75 MVA (மெகாவோல்ட் அம்பியர்) திறன் கொண்ட இரண்டு ஒத்திசைவு மின்தேக்கிகளை புதிய ஹபரணை மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் நிறுவுதல் மற்றும் பாதுக்கை 220KV மின்கட்டமைப்பு உப மின்நிலையத்தில் 300 MVAr திறன் கொண்ட STATCOM வசதிகளை நிறுவுதல். இவற்றை உலக வங்கியின் நிதி உதவியுடன் 2027 ஆம் வருடத்தில் ஆரம்பித்து 2029 ஆம் வருடத்தில் நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
- கட்டமைப்பில் ஏற்படுகின்ற நிலையற்ற தன்மைகளை நேரகாலத்துடன் இனங்காண்பதற்கும் அவசர நிலைமைகளின் போது துரித மற்றும் விளைவுபெறுக்கமுடைய தீர்மானங்களை எடுப்பதற்கும் விரிவான பிராந்திய கண்காணிப்பு முறைமையொன்றை (Wide Area Monitoring System) ஏற்படுத்தல். "உலக வங்கி தொழில்நுட்ப உதவிக் கருத்திட்டம்" கீழ் இது நடைமுறைப்படுத்தப்படும்.

- பகல் காலங்களில் எமக்குக் கிடைக்கும் மேலதிக மின்சாரத்தை சேமித்து வைப்பதற்காக நாங்கள் ஏற்கனவே பற்றரி களஞ்சிய முறையை (BESS) அறிமுகம் செய்துள்ளோம். 2026 ஆம் வருடத்தில் BESS ஊடாக 160MW முறைமைக்குக் கிடைக்கின்றது. 2027 ஆம் வருடத்தில் இதனை 560MW 2029 வருடத்தில் 1,245MW என்றவாறு அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- 2026 ஆம் வருடத்தில் BESS கட்டமைப்பின் பொருட்டு விலைகூறல்களைக் கோருவதற்கான 160MW கொண்ட முதலாம் கட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட விலை மாதத்திற்கு ஒரு மெகாவொட் இற்கு ரூ. 2.033 மில்லியனாக காணப்பட்டது. 2026 ஆம் வருடத்தில் இரண்டாம் கட்டத்தில் 250 மெகாவொட் இற்கு விலைகூறல்களை கோரும்போது கிடைக்கப்பெற்ற விலைகூறல் மாதத்திற்கு ஒரு மெகாவொட் அலகிற்கு ரூ. 1.808 மில்லியன் வரை குறைந்து காணப்பட்டது. அதற்கமைய போட்டிமிகு விலைகூறல்களை கோருவதன் மூலம் இவ்வருடத்திற்கான விலையை 11% இனால் குறைத்துக்கொள்வதற்கு முடிந்துள்ளது.
- புதுப்பிக்கத்தக்க சக்திவலு உற்பத்தியை ஊக்குவித்தலும், சக்திவலு பாதுகாப்பை அதிகரித்தல் மற்றும் தேசிய மின்சாரக் கட்டமைப்பில் சமநிலையின்மையை கட்டுப்படுத்தி ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் நோக்குடன், Net Plus முறைமையின் கீழ் பற்றரிக் களஞ்சிய வசதிகளுடன் கூடிய கூரை மீது பொருத்தப்படுகின்ற சூரிய சக்தி மின்சாரக் கட்டமைப்புகளை நிறுவும் வீட்டுப் பாவனையாளர்களுக்கு சக்திவலுவைக் களஞ்சியப் படுத்துவதற்குத் தேவையான பற்றரிகளைக் கொள்வனவு செய்வதற்காக மானியமொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்மொழியப்படுகின்றது.
- புதிதாக கூரை மீது சூரிய மின்சார கட்டமைப்புக்களை நிறுவும் வீட்டுப் பாவனையாளர்களுக்கு பற்றரிக் களஞ்சியக் கொள்ளளவு 1KV இற்கு ரூ. 25,000 மானியம் வழங்கப்படும். இந்த மானியம் ஆகக்கூடியது 10KV வரை உச்ச தொகையாக ரூபா 250,000 வழங்குவதற்கு முன்மொழியப்படுகின்றது. இதற்காக ரூ. 3,500 மில்லியனை ஒதுக்குவதற்கு முன்மொழியப்படுகின்றது. சூரிய சக்தியை களஞ்சியப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்ற

பற்றரிகளுக்கு இறக்குமதியின் போது அறவிடப்படுகின்ற துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டினை (PAL) நீக்குவதற்கும் முன்மொழியப்படுகின்றது.

- நுரைச்சோலை லக்விஜய மின்உற்பத்தி நிலையம் அவசர நிலைமைகளின் போது மேலதிக மின்சக்தியை வழங்குவதற்கான தேவை நீண்ட காலமாக திட்டமிடப்பட்ட போதிலும், அதற்குரிய சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த மேலதிக சக்தி வலுவை வழங்குவதற்காக 30MW கொள்ளளவுடைய BESS நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- 2030 ஆம் வருடமாகும் போது நிறைவேற்றி முடிக்கும் நோக்குடன் கிளிநொச்சியில் இருந்து புதிய ஹபரணை வரையிலான 400KV வடக்கு பிரதான வழங்கல் கட்டமைப்பின் ஆரம்ப வேலைகளுக்காக ரூ. 500 மில்லியன் நிதியை ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த மின்சார வழங்கல் கட்டமைப்பை நிர்மாணிப்பதற்கு 150 மில்லியன் ஐ.அ.டொ. நிதி உதவியை ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஊடாக பெற்றுக்கொள்வதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.
- நுரைச்சோலை – வாரியபொல, மொரகாலை - ஹம்பாந்தோட்டை வரையிலான 220KV கொள்ளளவுடைய 02 கடத்தல் முறைமைகளையும் புதிய ஹபரணை – கிரிந்திவலை 400KV கடத்தல் முறைமையையும் நிர்மாணிப்பதற்காக தனியார் துறை முதலீடுகளை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- 2027 ஆம் வருடத்தில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஐ.அ.டொ. 12 மில்லியன் நிதி வழங்கலுடன், 180 அலகுகளை விட அதிகமாக பாவிக்கின்ற 03 இலட்சம் மின்சார பாவணையாளர்களுக்கு இலவசமாக ஸ்மார்ட் மின்மானிகள் (Smart Metters) பெற்றுக்கொடுக்கப்படும். LECO ஊடாக சேவை வழங்கப்படுகின்ற பிரதேசங்களில் 120 அலகுகளை விட அதிகமாக பாவிக்கின்ற எல்லா மின்சாரப்

பாவணையாளர்களுக்கும் ஸ்மார்ட் மின்மானிகள் பெற்றுக்கொடுக்கப்படும்.

- 2029 ஆம் வருடமாகும் போது காற்று மூலம் புதிதாக பிறப்பிக்கப்படுகின்ற 370 MW மின்சார கொள்ளளவு, மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும். இதில், 2027 இல் 50MW மின்சார கொள்ளளவை கட்டமைப்புடன் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2029 இறுதியில் காற்று மூலம் பிறப்பிக்கப்படுகின்ற மின் கொள்ளளவு 674MW வரை அதிகரிக்கும்.
- நீர்த்தேக்கங்கள் மீது மிதக்கும் சூரிய கலங்களை நிறுவுவதற்காக ரன்தெனிகல, தெதுருஓயா, ரிதியகம, அம்பலன் ஓயா, காசல்ரீ, சந்திரிக்கா வெவ, கிரி இப்பன் ஆர வெவ ஆகிய 10 நீர்த் தேக்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 10% அல்லது அதிலும் குறைந்த நீர் மேற்பரப்பை பயன்படுத்தி சூரிய கலன்களை பொருத்துவதன் மூலம் சுமார் 500MW மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இக் கருத்திட்டங்கள் அரசாங்கத்தினாலும், தனியார் துறையினாலும் நடைமுறைப்படுத்தப்படும். அதற்கமைய தனியார் துறையிடமிருந்து முதலீட்டு யோசனைகளை தருவிப்பதற்கு 2027 ஜனவரி மாதத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.
- மின்சாரத் தடையை முகாமை செய்வதற்கு, மின்சார வலையமைப்பை சீரான நிலையில் வைத்திருப்பதற்கு, மின்சாரத்திற்கான கேள்வியை முகாமை செய்வதற்கு, சூரியசக்தி வளம் மற்றும் பிற வலுச்சக்தி வளங்களை மின்சாரக் கட்டமைப்புடன் ஒன்றிணைப்பதற்கும் முகாமை செய்வதற்கும் மற்றும் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட மின்சார விநியோக முறைமைகளை திட்டமிடலை வலுப்படுத்துவதற்கும் ஏற்றவாறு 04 விநியோக கட்டுப்பாட்டு நிலையங்கள் (Distribution Control Center) குளியாப்பிட்டி, பேராதனை, பத்தரமுல்லை மற்றும் தெஹிவலை ஆகிய இடங்களில் நிருவப்படும்.

6.2 பெற்றோலியம்

- இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபையினால் (PDASL) மேற்கு கரைக்கு சற்று தொலைவில் அமைந்துள்ள மன்னார் படுகையில், 04 பகுதிகளில் பெற்றோலிய மற்றும் இயற்கை வாயு ஆய்வு மற்றும் உற்பத்திக்கு (Sri Lanka Licencing Round 2026) விலைகூறல்கள் கோரப்பட்டன. 2027 பெப்ரவரி 02 திகதி இந்த விலைகூறல்களை திறப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- பெற்றோலிய எரிபொருள் களஞ்சியக் கொள்ளளவை விருத்தி செய்வதற்காக கொலன்னாவை பெற்றோலிய தொகுதியில் 2025 ஆம் வருடத்தில் ரூ. 3,746 மில்லியன் முதலீட்டில் 64,000m^3 கொள்ளளவுடைய 06 தாங்கிகள், இவ்வருட இறுதியில் ரூ. 1,446 மில்லியன் முதலீட்டில் 22,000m^3 கொள்ளளவுடைய 02 தாங்கிகள் மற்றும் 2026 செப்தம்பர் மாதத்தில் முதுராஜவலை களஞ்சியத் தொகுதியில் ரூ. 3,786 மில்லியன் முதலீட்டில் 40,000m^3 கொள்ளளவுடைய 03 தாங்கிகள் அமைக்கப்படும். இதற்கமைய, எமது களஞ்சியக் கொள்ளளவு 126,000m^3 இனால் 45 நாட்களுக்கான தேவை வரை அதிகரிக்கின்றது.
- எரிபொருளை கப்பலிலிருந்து இறக்குவதற்கு செலவாகும் காலத்தை 96 மணித்தியாளத்தில் இருந்து 48 மணித்தியாளம் வரை குறைக்கும் நோக்குடன் ரூ. 16,332 மில்லியன் முதலீட்டில் கொலன்னாவையில் இருந்து துறைமுகம் வரை குழாய் முறைமையொன்றை அமைப்பதற்கு விலைமனுக் கோரல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இதனை 18 மாதங்களில் நிறைவேற்றி முடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- கட்டுநாயக பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தை, சர்வதேச விமான சேவைத் துறைக்கு சேவை வழங்கும் நிலையமொன்றாக அபிவிருத்தி செய்யும் யோசனைக்கு ஏற்ப ரூ. 22,340 மில்லியன் முதலீட்டில் முதுராஜவெல பெற்றோலியத் தொகுதியில் 92,000m^3 கொள்ளளவுடைய Jet A1 எரிபொருள் தாங்கி தொகுதியொன்றையும், முதுராஜவெலையில் இருந்து கட்டுநாயக பண்டாரநாயக சர்வதேச விமான நிலையம் வரை

விமானங்களுக்கான எரிபொருளை எடுத்துச் செல்லும் குழாய் முறைமையொன்றையும் நிர்மாணிக்கும் பணிகள் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், தற்போதைய கொள்ளளவான நாளொன்றுக்கு 50,000 பீப்பாக்களிலிருந்து 100,000 பீப்பாக்கள் வரை அரச தனியார் துறை கூட்டு முயற்சியின் கீழ் மேம்படுத்தப்படும். இதற்காக ஏற்கனவே தருவிக்கப்பட்டுள்ள ஆர்வ வெளிப்பபடுத்தல்களை (EOI) அடிப்படையாகக் கொண்டு 2027 இல் இந்த முன்மொழிவுகளுக்கு விண்ணப்பங்கள் (RFP) கோரப்படும்.

7. டிஜிட்டல் யுகத்தை நோக்கிய டிஜிட்டல் மாற்றமும் அபிவிருத்தியும்

கௌரவ சபாநாயகர் அவர்களே,

டிஜிட்டல் பரிவர்த்தனை என்பது இனியும் வெறுமனே தொழில்நுட்ப ஆரம்பமொன்று மட்டுமல்லாது, அரச துறையின் வினைத்திறனை விருத்தி செய்தல், நிர்வாகத்தை பலப்படுத்தல், பொருளாதார விருத்திக்கு தேவையான வசதிகளை வழங்கல் மற்றும் ஒவ்வொரு பிரஜைக்கும் அரச சேவையின் பக்கம் பிரவேசிக்கக்கூடிய வாய்ப்பை உறுதிப்படுத்துவதற்கான அடிப்படைத் தேவையொன்றாகும். அரச நிறுவாகத்தின் நவீனமயம், அரச நடவடிக்கைகள் வினைத்திறனையும் வெளிப்படைத் தன்மையையும் மேம்படுத்தல் மற்றும் நிறுவனக் கொள்ளளவை பலப்படுத்தல் என்பவற்றிற்கான அடிப்படைக் கருவியாக டிஜிட்டல் மயமாக்கல் இனங்காணப்பட்டுள்ளது.

இத்துறை தற்போதைய உலகில் விருத்தியடைந்த நிலைமையினை அடைவது என்பது சவால் மிகுந்த பல்நோக்குத் தொழிற்பாடொன்றாகும். அதேபோன்று இத்துறையானது, எப்போதுமே, நாளதுவரைப்படுத்தப்பட்டு வருவதால், இதன் மூலம் உண்மையான நன்மைகளை அடைய வேண்டுமெனில், முதலாவதாக இதற்குத் தேவையான சட்ட மற்றும் நிறுவனக் கட்டமைப்பை கட்டியெழுப்புதல் வேண்டும்.

- பொதுத் திறைசேரியின் 100% உரிமையின் கீழ், அரச சேவைகளை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள் என்பவற்றிற்காக GovTech நிறுவனம் நிறுவப்பட்டு, தற்பொழுது அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- தனிப்பட்ட தரவு பாதுகாப்புச் சட்டம் (Personal Data Protection Act) திருத்தப்பட்டு, தற்சமயம் தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை நிறுவப்பட்டு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- டிஜிட்டல் பொருளாதார அதிகாரசபை மற்றும் தேசிய டிஜிட்டல் பொருளாதார பேரவை ஆகிய நிறுவனங்களை நிறுவுவதற்கான சட்ட மூலத்தினை (Digital Economy Bill) 2027 வருடத்தின் முதல் காலாண்டில் நிறைவேற்றிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- டிஜிட்டல் துறையின் விருத்தியுடன் அத்தியவசிய இணையப் பாதுகாப்புக்கான இணையப் பாதுகாப்புச் சட்டம் (Cyber Security Bill) சட்டமா அதிபரிடம் இசைவிற்காக முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, 2027 ஆம் வருடத்தில் சைபர் பாதுகாப்பு அதிகாரசபையொன்றை நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- அரசாங்கத்தின் பெறுகைத் தொழிற்பாடு, டிஜிட்டல் தீர்வுகள் மற்றும் வசதிகளை கொள்வனவு செய்யும் போது சிக்கல் நிலை காணப்படுகின்றது. எனவே, டிஜிட்டல் தீர்வுகள் மற்றும் வசதிகளுக்காக விசேடமான அரசாங்க பெறுகை வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு ஏற்கனவே பெறுகை ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, 2027 ஆம் வருட ஆரம்பப் பகுதியில் இப்பெறுகை வழிகாட்டல்களை அறிமுகம் செய்யக்கூடியதாக இருக்கும்.

டிஜிட்டல் பொருளாதாரத் துறையில் புதிய மாற்றமொன்றிற்காக;

- தேசிய செயற்கை நுண்ணறிவுக் (AI) கொள்ளளவினைக் கட்டியெழுப்பும் வகையிலும், பொறுப்புடன் AI பாவணையை ஊக்குவிக்கும் வகையிலும், அரசு, புத்திஜீவிகள் மற்றும்

கைத்தொழிற்துறை அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் கொண்டுவந்து மிகச் சிறந்த தேசிய செயற்கை நுண்ணறிவு நிலையமொன்றை (National Artificial Intelligence Centre of Excellence) விஜேராம மாவத்தையில் நிறுவுதல்.

- டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு வசதிகளூடாக, அரச நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைக்குச் சமாந்தரமாக, மென்பொருள் கொள்வனவின் போது புதிதாக உற்பத்தி செய்வதற்கு முன், தரப்படுத்தப்பட்ட தீர்வுகளை கொள்வனவு செய்தல் மற்றும் பொதுப் பாவணைக்கு முன்னுரிமையளிக்கும் கொள்கையை (Shared platform first and buy before build policy) நிறுவுதல்.
- Lanka Government Cloud முறைமையை LGC 2.0 இலிருந்து LGC 3.0 வரை விஸ்தரித்தலும் செயற்கை நுண்ணறிவுக்கான இறையாண்மை உட்கட்டமைப்பு வசதிகளுக்கான ஆரம்ப அடித்தளத்தை நிறுவுதல்.
- பிரஜைகள் அரச சேவைகளுக்கு இலகுவாக பிரவேசிக்கக்கூடியவாறு பிரதேச செயலகங்களினாலும், கிராம உத்தியோகத்தர்களினாலும் வழங்கப்படுகின்ற சேவைகளை டிஜிட்டல் மயப்படுத்தல்.
- டிஜிட்டல் மயப்படுத்தலை மிகவும் துரிதமாக ஊக்குவிக்கும் நோக்குடன், உயர் செயலாற்றுகையை காட்டும் அரச நிறுவனங்களை பாராட்டும் வகையில் "ஜனாதிபதி டிஜிட்டல் சிறப்பு விருது" வேலைத் திட்டத்தை ஆரம்பித்தல்.
- டிஜிட்டல் வருமானப் பொருளாதாரத்தை நோக்கி வழிநடாத்தும் பொருட்டு GovPay, QR போன்ற பௌதிக ரீதியில் நாணயத்தாளற்ற கொடுப்பனவு முறைகளுக்கு பழக்கப்படுத்தலும், விஸ்தரித்தலும்.
- மேலும், முறையான சட்ட பணிச்சட்டமொன்றை நிறுவுவதினூடாக டிஜிட்டல் அருவச் சொத்து சேவை வழங்குனர்கள் (Virtual Asset Service Providers – VASP) சார்பில் தேவையான ஒழுங்குமுறைப்படுத்தல் அடித்தளத்தை வகுத்தல்.

- பிரதான உபாயவழி துறைகளில் டிஜிட்டல்மயப்படுத்தலை தேசிய டிஜிட்டல் பொருளாதாரத் திட்டத்துடன் ஒன்றிணைக்கும் பொருட்டு துறைசார் டிஜிட்டல் திட்டங்களைத் தயாரித்தலும் நிறுவன டிஜிட்டல் பரிவர்த்தனை அலகுகள் (DTU) ஊடாக செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.
- தரவு நிலையங்களை நிறுவுவதற்கான முதலீடுகளை ஊக்குவிக்கும் எதிர்பார்ப்புடன், முறையான அளவுகோள்களின் கீழ் தெரிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு சக்திவலுக் கட்டண சலுகைகளையும் ஏனைய ஊக்குவிப்புக்களையும் பெற்றுக்கொடுத்தல்.
- பாடசாலை மாணவர்களுக்கு இடையில் டிஜிட்டல் எழுத்தறிவை கூட்டும் வகையில் தெறிவு செய்யப்பட்ட 750,000 பாடசாலை மாணவர்களுக்கு புரோட்பேன்ட் வவுசர்களை (Broadband Vouchers) பெற்றுக்கொடுத்தல்.
- இலங்கை தொழில்முயற்சிகள் மீது தனியார் முதலீடுகளை கவரும் வகையில் டிஜிட்டல் புதிய தொழில்முயற்சி நிதிக்கான நிதியத்தை (Digital Startup Fund of Funds) பலப்படுத்தல்.

ஆகிய முன்மொழிவுகள் சார்பில் ரூ. 10,000 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

(1) நிறுவன பலப்படுத்தல், கொள்கை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல், (2) டிஜிட்டல் அரச பரிவர்த்தனை, (3) டிஜிட்டல் கைத்தொழில் அபிவிருத்தியும் மேம்பாடும், (4) டிஜிட்டல் வருமான பொருளாதாரத்தை வலுவூட்டல், (5) உபாய வழிக் கைத்தொழில்களில் டிஜிட்டல் நடவடிக்கைகளை வலுவூட்டல், (6) அனைத்தையும் உள்ளடக்கிய அனுகல், பாவனையை ஊக்குவித்தல் மற்றும் திறன் அபிவிருத்தி ஆகிய 06 பிரதான துறைகளின் கீழ் இந் நாட்டின் டிஜிட்டல் பரிவர்த்தனை மற்றும் டிஜிட்டல் பொருளாதார அபிவிருத்திக்கான உறுதுணையாக 2027 ஆம் வருடத்திற்கு டிஜிட்டல் பொருளாதார அமைச்சுக்கு ஏற்கனவே ரூ. 18,500 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதுடன், இத் தொகையை ரூ. 28,500 மில்லியன் வரை அதிகரிப்பதற்கு முன்மொழிகின்றேன்.

- 2026 வரவு-செலவுத் திட்டத்திற்கு என்னால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளுள் புதிய தொடர்பாடல் தூண்களுக்கான வரியை 05 வருட காலங்களுக்கு நீக்குவதற்கு ஒழுங்கு விதிகள் வகுக்கப்பட்டன. இவ் வேலைத் திட்டத்தை தொடர்ந்தும் வெற்றிகரமாக அமுல் செய்வதனூடாக அதிவேக இணைய வசதிகளை நாட்டில் விஸ்தரித்த வண்ணம் 2030 வருடம் ஆகும் போது கிராமத்திற்கு தொடர்பாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தீவு முழுவதும் அதிவேக புரோட்பேண்ட் இணைய பரப்பெல்லையை விஸ்தரிப்பதற்கு 700 – 800 இற்கும் இடைப்பட்ட தொடர்பாடல் தூண்களுக்கான தேவை காணப்படுகின்றது. இவற்றுள் 573 தொடர்பாடல் தூண்கள் 2028 ஆம் வருடம் ஆகும் போது அமைத்து முடிக்கப்படும். இவ்வாறு அமைக்கப்படுகின்ற புதிய தொடர்பாடல் தூணொன்று சார்பில் செலவாகும் தொகையில் 75% அல்லது ரூ. 35 மில்லியன் ஆகிய இரண்டில் குறைந்த தொகை அளிப்பொன்றாக வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக மின்சார இணைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக ரூ. 5 மில்லியன் வழங்கப்படும். இதற்காக, தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் "கிராமத்திற்கு தொடர்பாடல்" நிகழ்ச்சித்திட்டம் ஊடாக நிதியத்தினூடாக ரூ. 9,000 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- தற்சமயம் நாட்டில் காணப்படுகின்ற கையடக்கத் தொலைபேசி வலையமைப்புகளில் (Broadband) காணப்படுகின்ற சேவைத் தரங்களும் அனுபவத் தரங்களும் (Quality of service and Quality of Experience) சிக்களுக்குரிய நிலைமையில் காணப்படுவதுடன், இதன் காரணமாக குறிப்பாக கிராமிய மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். இவற்றைக் கண்டறிநது சீர்செய்வதற்கு இலங்கையில் முதற்தடவையாக 2027 இல் இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் தன்னியக்க கண்காணிப்பு முறைமையொன்று அறிமுகம் செய்யப்படும் என்பதுடன், இதன்மூலம் நாட்டில் கையடக்கத் தொலைபேசி வலையமைப்புகளில் (Broadband) காணப்படுகின்ற சேவைத் தரங்களையும் அனுபவத் தரங்களையும் (Quality of service and Quality

of Experience) மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நாட்டு மக்களுடைய உரிமையாக உள்ள அலைவரிசை அலைக்கற்றை (frequency spectrum) தற்சமயம் விளைவுப் பெருக்கமின்றியும் வினைத்திறன் மிக்க முகாமையின்றியும் வழங்கப்பட்டிருப்பதன் காரணமாக நாட்டில் நிகழ்ந்துள்ள நிதிசார் பிரதிகூலத்தை சரி செய்யும் நோக்குடன் தன்னியக்க அலைவரிசை அலைக்கற்றை முகாமைத்துவ முறைமையொன்றையும் (Automated Spectrum Management systems) தன்னியக்க அலைவரிசை அலைக்கற்றை கண்காணிப்பு முறைமையொன்றையும் (Automated Spectrum Monitoring systems) நிறுவும் பணிகள் 2027 இல் ஆரம்பிக்கப்படும். இந்த அனைத்து முறைமைகளையும் கொள்வனவு செய்வதற்காக இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் ரூபா 3,100 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

- பிரசைகளுக்கு நேரடியாக அரச நிறுவனங்களுக்கு வருகை தராமலேயே (presence-less) சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை துரிதமாக விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கமைய கிராமிய மட்டத்திலிருந்து பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மத்திய அரசு வரை பொதுமக்கள் பரவலாக பயன்படுத்தும் அனுமதிப்பத்திரங்கள், விண்ணப்பப்படிவங்கள், அங்கீகாரம் மற்றும் கொடுப்பனவுகள் சார்ந்த முதனிலை அரச சேவைகளை டிஜிட்டல் முறையினூடாக நிறைவேற்றிக்கொள்ளும் காலவரையறையானது. 2027 இலிருந்து படிப்படியாக விஸ்தரிக்கப்படும். எதிர்காலத்தில் தேசிய டிஜிட்டல் அடையாள அட்டை (Digital ID) அறிமுகமாவதைத் தொடர்ந்தும் அதன் பாவணை விஸ்தரிக்கப்படுவதைத் தொடர்ந்தும், இச்சேவைகளை துரிதமாகவும் நிலைபேறாகவும் மேம்படுத்தி ஒட்டுமொத்த அரச பொறிமுறையை நாடு முழுவதும் விஸ்தரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

டிஜிட்டல் தொழில்நுட்பத்தினூடாக மக்களுடைய அன்றாட வாழ்வை இலகுபடுத்தி வினைத்திறன் மிக்க அரச சேவையை வழங்குவதும்,

போட்டிமிகு டிஜிட்டல் பொருளாதாமொன்றை கட்டியெழுப்புவதுமே எமது பிரதான நோக்கமாகும்.

8. கல்வி

நவீன உலகத்திற்குத் தேவையான மனிதவளங்களை கட்டியெழுப்பும் பாரிய பொறுப்பு கல்வித்துறையையேசாரும். எனவே, இதற்குத் தேவையான கல்வியில் பண்புரீதியான மாற்றமொன்றும் அதேபோன்று கல்வியை வழங்கும் புதிய தொழில்நுட்ப மாற்றமொன்றும் தேவைப்படுகின்றது. அத்துடன், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும் மனிதவளங்களையும் அபிவிருத்தி செய்வதும் இன்றியமையாதது.

- புதிய கல்விச் சீர்த்திருத்தங்கள் ஏற்கனவே தரம் 01 இல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன், அடுத்த வருடத்தில் தரம் 02 இலும் தரம் 06 இலும் ஆரம்பிக்கப்படவுள்ளன.
- கல்வியியற் கல்லூரிகளில் ஆசிரியர் பயிற்சியைப் பெறுகின்ற பயிலுநர் ஆசிரியர்களின் நிதிச் சுமையை இலகுபடுத்துவதற்காக, அவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை 2027 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து ரூ. 10,500 இலிருந்து ரூ. 20,000 வரை அதிகரிப்பதற்கு முன்மொழிகிறேன். இது அவர்களின் ஆசிரியர் பயிற்சிக் காலத்திற்குள் வழங்கப்படுகின்ற நிதி ஒத்துழைப்பாகவும் அதேபோன்று எமது கல்வி முறையும் எதிர்கால பொறுப்புக்களை பொறுப்பேற்பதற்காக அவர்களை தயார்படுத்துவதற்கு உதவியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.
- பிரிவெனாக்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவியாக அவர்களது கல்வித் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு பிக்கு மாணவர்களுக்காக வழங்கப்படுகின்ற நாளாந்த கொடுப்பனவை 2027 ஏப்ரல் மாதத்திலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் ரூ. 15 இலிருந்து ரூ. 50 வரையும், பிக்கு அல்லாத மாணவர்களுக்காக வழங்கப்படுகின்ற நாளாந்த கொடுப்பனவை ரூ. 5 இலிருந்து ரூ. 25 வரையும் அதிகரிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

- மதிப்புமிக்க தார்மீகமான குணநலன்களைக் கொண்ட சிறுவர் பரம்பரையொன்றை உருவாக்கும் பொருட்டு அறநெறிப் பாடசாலைக் கல்வியின் தரத்தைப் பாதுகாக்கும் வகையில் தன்னார்வத்துடன் பங்களிப்புச் செய்கின்ற அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற வருடாந்தக் கொடுப்பனவை 2027 ஆம் ஆண்டிலிருந்து ரூ. 7,500 இலிருந்து ரூ. 12,500 வரை ரூ. 5,000 இனால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- சீன அரசாங்கத்தினால் அன்பளிப்பொன்றாக பெற்றுத் தரப்படுகின்ற பாடசாலை சீருடைகளை எதிர்வரும் வருடத்திலும் அவ்வாறே பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்த சில வருடங்களுக்கும் இவ்வன்பளிப்பைப் பெற்றுத்தருவதாக சீன அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

8.1 பாடசாலை கல்வியில் டிஜிட்டல் பரிவர்த்தனை நிகழ்ச்சித்திட்டம்

- அனைத்து இரண்டாம் நிலை பாடசாலைகளுக்கும் நம்பகமான இணைய இணைப்புகளை பெற்றுக்கொடுப்பதே எமது இலக்காகும். தற்சமயம் இவ்வருடத்தில் பெற்றுக்கொடுக்கப்பட்ட 3,009 இணைப்புகளும் அடங்களாக 6,225 பாடசாலைகளுக்கு நம்பகமான இணைய இணைப்புகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 750 பாடசாலைகளுக்கு துரிதமாக இணைப்புகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன், ஆரம்ப பாடசாலைகளுக்காகவும் இந்நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்படும்.
- டிஜிட்டல் கற்பித்தலுக்குத் தேவையான கணினி மற்றும் ஸ்மார்ட் பலகைகள் உள்ளிட்ட உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல். தகவல் தொழில்நுட்ப மற்றும் தொலைக் கல்வி நிலையங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையை (NEMIS) மேம்படுத்துதல், வலதுகுறைந்த மாணவர்களுக்கான இணைந்த டிஜிட்டல் கற்பித்தல் வசதிகளை வழங்குதல் மற்றும ஆசிரியர்களின் டிஜிட்டல் அறிவையும் தொழில்நுட்பத் திறன்களையும் விருத்தி செய்தல் உள்ளிட்ட 05

வருடங்களுக்கான இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூ. 96,500 மில்லியன் என மதிப்பிடப்பட்டிருப்பதுட்டுள்ளது. இதன் ஆரம்ப கட்டமாக இவ்வருடத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் ரூ. 4,000 மில்லியனிற்கு மேலதிகமாக மேலும், ரூ. 3,000 மில்லியன் நிதியை ஒதுக்கீடுசெய்வதற்கு முன்மொழிகின்றேன்.

- இதற்கமைய 2027 ஆம் வருடத்தில் டிஜிட்டல் மயப்படுத்தல், ஆசிரியர் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தல், ஆசிரியர் கல்லூரிகள், தேசிய கல்விக் கல்லூரிகள், பாடசாலைக் கட்டிடங்கள், பாடசாலை ஆய்வுகூடங்கள் மற்றும் ஆசிரியர் விடுதி அபிவிருத்தியும் நவீனமயப்படுத்தலும் உட்பட ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக ரூ. 35,000 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

8.2 உயர் கல்வி

- ரூ. 8,000 மில்லியன் முதலீட்டுடன், பேராதனை மற்றும் வயம்ப பல்கலைக்கழகங்களில் அனைத்து வசதியுடன் கூடிய மருத்துவ பீடங்களையும் சிகிச்சை நிலையக் கட்டிடங்களையும் அமைப்பதற்கு 2027 இல் ரூ. 450 மில்லியன் ஒதுக்கப்படுகின்றது.
- கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்திற்கான அங்கசம்பூரண கட்டிடம், றுகுண மற்றும் சப்ரகமுவா பல்கலைக்கழகங்களுக்கான கணினி மற்றும் ஆராய்ச்சி வசதிகளுடன் கூடிய ஆய்வுகூடக் கட்டிடத் தொகுதி, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இணை-சுகாதார விஞ்ஞானபீடம், களனி பல்கலைக்கழகத்தின் வணிக மற்றும் முகாமைத்துவ கல்வி மற்றும் விஞ்ஞான பீடங்களுக்கான கட்டிடங்கள், இரஜரட்டை பல்கலைக்கழகத்திற்கான ஆய்வுகூட கட்டிடத்தொகுதி, ஊவா வெல்லஸ்ஸ, கொழும்பு பல்கலைக்கழகங்களின் முகாமைத்துவ பீடங்களுக்கான பல்நோக்கு கட்டிடங்கள் முதலான கட்டிடங்களை அமைத்தல் உள்ளிட்ட கல்வி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக ரூ. 2,250 மில்லியன் நிதி ஒதுக்கப்படுகின்றது.

- ஹாடி உயர்கல்வி நிறுவனம், மொரட்டுவை மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களில் காணப்படுகின்ற விடுதி வசதிகளை மேம்படுத்தல், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்திற்கான சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குதல், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கிழக்கு மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமைகளை அபிவிருத்தி செய்தல் ஆகிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் சார்பில் ரூ. 717 மில்லியன் உட்பட தற்போது முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற மாணவர் சேமநலன் பணிகளுக்காக ரூ. 6,250 மில்லியன் ஒதுக்கப்படுகின்றது.
- வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்வி, கல்விசாரா பணியாளர்கள் சார்பில் விடுதி வசதிகளை வழங்கும் பொருட்டு ரூ. 2,050 மில்லியன் நிதிக்கான உத்தியோகபூர்வ இல்லக் கருத்திட்டத்தை 2027 ஆம் வருடத்தில் ஆரம்பிப்பதற்கு முன்மொழியப்படுகின்றது.
- "திட்வா" சூறாவளி காரணமாக பேராதனை பல்கலைக்கழகத்தில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு ஏற்பட்ட சேதங்களை புனரமைப்பதற்கு ரூ. 6,150 மில்லியன் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2027 ஆம் வருடத்தில் இவை உட்பட திட்வாவினால் தேசமடைந்த உயர் கல்வி நிறுவனங்களின் புனரமைப்புப் பணிகளுக்காக ரூ. 700 மில்லியன் ஒதுக்கப்படுகின்றது.
- அரச பல்கலைக்கழகங்களுக்கு வருடாந்தம் சுமார் 42,000 மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்ற போதிலும், காணப்படுகின்ற வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பதால், பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெறுகின்ற அனேகமான மாணவர்களுக்கு இச்சந்தர்ப்பம் கிடைக்காமல் போகின்றது. இம் மாணவர்களுக்கு உயர் கல்விக்கான வாய்ப்புக்களை வழங்கும் நோக்குடன் தனியார் உயர் கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பைத் தொடர்வதற்கு தகைமை பெறுகின்ற மாணவர்களுக்கு அரச வங்கிகளூடாக வட்டி இல்லா கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுக்கும்

வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. அம்மாணவர்களுக்கு தற்சமயம் பெற்றுக்கொள்ளக்கூடிய மாதாந்த உதவுதொகையை ரூ. 6,250 இலிருந்து ரூ. 10,000 வரை அதிகரிப்பதற்கு முன்மொழியப்படுவதுடன், இது 2027 ஆம் வருடத்தின் ஏப்ரல் மாதத்திலிருந்து செயற்படுத்தப்படும்.

8.3 தொழில்சார் கல்வி

தொழில்சார் கல்வி பல்வேறு திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் ஊடாக பல்வேறு மட்டங்களில் நாடு பூராகவும் பரந்துபட்ட 550 இற்கு மேற்பட்ட நிலையங்களூடாக அமுல் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றில் தரமான தொழில்சார் கல்வியை பெற்றுக்கொடுப்பதற்காகவும், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காகவும், நாட்டிற்குத் தேவையான இலக்கு வைக்கப்பட்ட உழைப்பு வளங்கலை உருவாக்குவதற்காகவும் வளங்களை வினைத்திறன் மிக்கவாறு ஈடுபடுத்தும் நோக்குடனும் வழிநடாத்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் என்பவற்றிற்காக நிறுவனமொன்றில் மத்தியமயப்படுத்தப்பட்ட ஆய்வொன்றை மேற்கொள்வதற்காக ரூ. 50 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

- இரத்மலானையில் அமைந்துள்ள தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் விடுதி, சிற்றுண்டிச்சாலை, ஆய்வுகூடம் மற்றும் வேலைத்தளங்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்காக ரூ. 3,380 மில்லியன் பெறுமதியுடைய கருத்திட்டம் சார்பில் 2027 ஆம் வருடத்திற்கு ரூ. 800 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.
- ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் மற்றும் மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவனம் உள்ளிட்ட கைத்தொழில் கல்வி மற்றும் பயிற்சி துறைக்குரிய நிறுவனங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 2027 வருடத்திற்கு ரூ. 200 மில்லியன் நிதி ஒதுக்கப்படுகின்றது.
- நாட்டின் 25 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 25 தொழில்நுட்பக் கல்லூரிகளை நவீனமயப்படுத்தும் பொருட்டு ரூ.

6,000 மில்லியன் செலவுடைய கருத்திட்டம் சார்பில் 2027 ஆம் வருடத்திற்கு ரூ. 1,500 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயப்படுத்தல், பாடத்திட்டங்களை இற்றைப்படுத்தல், புதிய தொழில்நுட்பங்களை ஒன்றணைத்தல், அரச மற்றும் தனியார் துறைகளுக்கிடையில் ஒத்துழைப்பை வலுப்படுத்தல் என்பவற்றிற்காக தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சித்துறையின் அபிவிருத்திக்காக ரூ. 11 பில்லியன் மூலதன முதலீட்டை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

9. ஆராய்ச்சி, அபிவிருத்தி, புத்தாக்க பொருளாதார மாற்றத்தை நோக்கி

கௌரவ சபாநாயகர் அவர்களே,

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்துறையில் கொள்கை ரீதியான வழிகாட்டல், ஆராய்ச்சி நடவடிக்கைகளை வழிநடாத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு என்பவற்றிற்காக தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பேரவை நிறுவப்பட்டுள்ளது. இதன்மூலம், எல்லா விதமான தேசிய ஆராய்ச்சிகளையும் இனங்கண்டு (விஞ்ஞான, தொழில்நுட்ப, பொறியியல், விவசாய, மருத்துவ) உற்பத்திப் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கி செயற்படுவது பிரதான பணியாக விளங்குகின்றது. இது விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு மற்றும் மட்டுப்படுத்தப்படாது பாதுகாப்பு மற்றும் சமூக நலன்புரி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இதன்மூலம்,

- அரச துறையினாலும் அதேபோன்று தனியார் துறையினாலும் முன்னெடுக்கப்படுகின்ற ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தலும் ஒழுங்குமுறைப்படுத்தலும்.

- தேசிய அபிவிருத்தி இலக்குகளுக்கும் பொருளாதார விருத்திக்கும் பங்களிப்புச் செய்கின்றவாறு ஆராய்ச்சிகளை வழிநடாத்தல்.
- உள்நாட்டு ஆராய்ச்சியாளர்களின் திறமைகளை விருத்தி செய்தலும், சர்வதேச மட்டத்திலான உயர் ஆராய்ச்சிகளுக்கான அனுசரணைகளை வழங்குதலும்.
- ஆய்வுகூடங்களிலும், பல்கலைக்கழகங்களிலும் முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளை சமூகத்திற்கும் கைத்தொழில்துறைக்கும் பயனுள்ள உற்பத்தி அல்லது சேவைகளாக மாற்றியமைத்தல்.
- நாட்டின் எதிர்கால தேவைகளுக்கு ஏற்றவாறு தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கொள்கைகளை தயார் செய்தல்.
- ஆராய்ச்சிகள் ஊடாக கண்டுபிடிக்கப்படுகின்ற புதிய தொழில்நுட்பங்களை வணிகமயப்படுத்தல் வரை எடுத்துச்சென்று நாட்டின் பொருளாதாரத்துடன் இணைத்தல்.

இந்த தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பேரவை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழுள்ள தேசிய புத்தாக்க நிறுவனம், புதிய கண்டுபிடிப்பாளர்களின் ஆணைக்குழு, தேசிய விஞ்ஞான மன்றம், தேசிய ஆராய்ச்சிப் பேரவை, தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு, இலங்கை விவசாய கொள்கை ஆராய்ச்சிப் பேரவை ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்படவுள்ளன.

பல்வேறு அமைச்சுகளின் கீழ் காணப்படுகின்ற ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் ஊடாக பல்வேறு விடயப்பரப்புகள் உட்படுமாறு ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்குத் தேவையான நிறுவன, தொழில்நுட்ப மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்கத்தின் முதலீடுகள் ஊடாக 2027 ஆம் வருடத்திற்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ரூ. 23,800 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சி நடவடிக்கைகள் அனைத்தும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் ஒருங்கிணைப்பதற்கு தொழிற்பாட்டுச் செலவினங்கள் உட்பட ரூ. 7,600 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சட்டத்தின் சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. இச் சட்டவரைவு, 2027 வருடத்தின் ஆரம்பப் பகுதியில் இப்பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

10. அதிவேகப் பாதைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி

நாம் இந்த வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக நெடுஞ்சாலைகள், அதிவேக பாதைகள் மற்றும் புகையிரதப் பாதைகள் அபிவிருத்திக்காக பாரிய முதலீட்டினை செய்வதற்கு எதிர்பார்க்கிறோம். அதற்காக இம்முறை வரவு-செலவுத் திட்டத்திலிருந்து ரூ. 251 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் புதிய முன்மொழிவாக ரூ. 146 பில்லியனும், திட்வா சூறாவளி காரணமாக புகையிரத பாதை மற்றும், நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்களுக்கு ஏற்பட்ட சேதங்களை புனரமைப்பதற்காக, திட்வா குறைநிரப்பு மதிப்பீட்டிலிருந்து ரூ. 90 பில்லியன் உள்ளடங்கலாக ரூ. 487 பில்லியன் நிதியை செலவிட எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு பிரதானமாக;

- மத்திய அதிவேக வீதியின் 4 ஆம் கட்டமான குருநாகல் - தம்புள்ளை அதிவேக வீதிப் பகுதியின் முதலாவது கட்டமாக குருநாகலில் இருந்து கலேவெல வரை நிர்மாணப் பணிகளுக்காக ரூ. 30,000 மில்லினை ஒதுக்கீடுசெய்வதற்கு முன்மொழிகின்றேன்.
- ருவன்புர அதிவேக வீதியின் முதலாவது கட்டமான கஹதுடுவையிலிருந்து இங்கிரிய வரை அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காக 2026 இல் ஆரம்பப் பணிகளுக்காக ரூ. 18,680 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது. 2027 ஆம் வருடத்திற்கு ரூ. 27,000 மில்லினை ஒதுக்குவதற்கு முன்மொழியப்படுகின்றது.

- பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த மத்திய அதிவேக பாதையின் கடவத்தை - மீரிகம பகுதியின் நிர்மாணப் பணிகளை 2028 செப்தம்பர் மாதமாகும் போது நிறைவு செய்வதை நோக்கமாகக் கொண்டு 2027 ஆம் ஆண்டுக்காக ரூ. 53,450 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மத்திய அதிவேக பாதையின் பொத்துஹெர - ரம்புக்கனை பகுதியின் நிர்மாணப் பணிகளை 2027 மே மாதமாகும் போது நிறைவு செய்வதை நோக்கமாகக் கொண்டு, 2027 ஆம் ஆண்டுக்காக ரூ. 4,500 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டில் வேலைகளை ஆரம்பித்த மத்திய அதிவேக பாதையின் ரம்புக்கனை - கல்கெதர பகுதியின் நிர்மாணப் பணிகளை 2029 ஜூலை மாதமாகும் போது நிறைவு செய்வதை நோக்கமாகக் கொண்டு 2027 ஆம் ஆண்டுக்காக ரூ. 23,050 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மத்திய அதிவேக பாதை உச்ச பலன்களைப் பெற்றுக்கொள்வதற்காக, அது தொடர்பாக இனங்காணப்பட்ட இணைப்பு வீதிகளின் பிரிவுகளை (Connecting roads) மேம்படுத்துவது அவசியமாகும். குருநாகல் - தம்புள்ளை அதிவேக பாதையுடன் இணைந்த வீதிகளின் அபிவிருத்திக்காக ரூ. 500 மில்லியனையும், பொத்துஹெர – கலகெதர அதிவேக பாதையுடன் இணைந்த வீதிகள் அபிவிருத்திக்காக ரூ. 5,000 மில்லியனையும் கடவத்தை – மீரிகம மத்திய அதிவேக பாதையுடன் இணைந்த வீதிகள் அபிவிருத்திக்காக ரூ. 3,000 மில்லியனையும் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.
- வாகன நெரிசலைக் குறைப்பதற்கும் போக்குவரத்து வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் புதிய மேம்பாலங்கள் சிலவற்றை நிர்மாணிப்பதற்கும் முன்மொழிகின்றேன். அதற்கமைய, அலவ்வ மற்றும் குருநாகல் - முத்தெட்டுகல புகையிரத கடவை வீதிகளில் 02 மேம் பாலங்களை நிர்மாணிப்பதற்கும், புதிதாக நிர்மாணிக்கப்படும் கண்டி

பல்நோக்கு போக்குவரத்து மையத்திற்கு கண்டி - மாத்தளை புகையிரத பாதையைத் தவிர்த்து பிரவேசிப்பதற்காக கண்டி தபால் நிலையத்திற்கு அருகில் புதிய மேம்பாலமொன்றை நிர்மாணிப்பதற்கும் இம்முறை வரவு-செலவுத் திட்டத்திலிருந்து ரூ. 1,900 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

- கோக்கிலாய் பாலத்தை நிர்மாணிப்பதற்காக ரூ. 600 மில்லியனும், கிரான் பாலத்தை நிர்மாணிப்பதற்காக ரூ. 400 மில்லியனும், பொந்துக்கால்சேனை பாலத்தை நிர்மாணிப்பதற்காக ரூ. 200 மில்லியனும் மற்றும் வெருகல் ஆற்றுக்கு குறுக்கே புண்ணியடி பிரதேசத்தில் புதிய பாலத்தை நிர்மாணிப்பதற்காக ரூ. 340 மில்லியனும், வட்டுவாக்கல் பாலத்தை நிர்மாணிப்பதற்காக ரூ. 500 மில்லியனும் 2027 இல் ஒதுக்கப்பட்டுள்ளன. இக்கருத்திட்டங்களுக்கான மொத்த மதிப்பீடு ரூபா 10,630 மில்லியனாகும்.
- வீதி வலையமைப்பில் நிலவும் வாகன நெரிசலைக் குறைப்பதற்கும் வீதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் தெரிவு செய்யப்பட்ட வீதிகளை அகலமாக்கி அபிவிருத்தி செய்வதற்காக ரூ. 22,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இரத்தினபுரி மாற்றுப் பாதை, கஹவத்தை மாற்று பாதை, கிரிபத்கொட மாற்று பாதை, கட்டுநாயக்க - சிலாபம் அதிவேக பாதை உட்பட காலத்திற்கேற்ப இனங்காணப்படும் வீதி அபிவிருத்திகளின் சாத்திவள ஆய்வுகளை செய்வதற்கு ரூ. 680 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11. புகையிரத இலத்திரனியல் மயப்படுத்தல்

- பயணிகள் போக்குவரத்தின் முதுகெலும்பாகக் கருதப்படும் புகையிரத துறையின் அபிவிருத்தி, அரசாங்கத்தின் முன்னுரிமையாக அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, மூன்று பிரதான புகையிரத பாதைகளை இலத்திரனியல் மயப்படுத்துவதற்கு ரூ. 1,200 பில்லியனுக்கும் அதிகமான முதலீடு மேற்கொள்ளப்படவுள்ளது. இந் நிகழ்ச்சித்திட்டத்தின் முதல் கட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2027 ஆம் ஆண்டுக்காக;

- களனிவெளி புகையிரப் பாதையின் மருதானையில் இருந்து ஹோமாகமை வரையிலான பகுதியை இலத்திரனியல் மயப்படுத்துவதற்கு ரூ. 45,000 மில்லியன்;
- பிரதான புகையிரத பாதையில் (Main line) மருதானையில் இருந்து இராகமை வரையிலான பகுதியை இலத்திரனியல் மயப்படுத்துவதற்கு ரூ. 16,400 மில்லியன்;
- கரையோர புகையிரத பாதையில் (Coastal line) மருதானையில் இருந்து பாணந்துறை வரையிலான பகுதியை இலத்திரனியல் மயப்படுத்துவதற்கு ரூ. 17,700 மில்லியன்;
- காணி சுவீகரிப்பு உள்ளடங்கலாக ஏனைய செயற்பாட்டுச் செலவுகளுக்காக ரூ. 900 மில்லியன்;

உள்ளடங்கலாக ரூ. 80,000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்குப் முன்மொழியப்படுகின்றது.

12. நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் துறை

பொருளாதாரத்தின் துரித மாற்றத்திற்காக நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளில் அபிவிருத்தி அத்தியவசியமானதென்பதை நாம் இனங்கண்டுள்ளோம். அதற்கமைய பிணையுறுதியற்ற கடன்கள், வட்டியற்ற கடன்கள், குறைந்த வட்டிக் கடன்கள் போன்ற பல்வேறு கடன் திட்டங்களுக்காக வட்டி உதவுதொகைகள் மற்றும் வங்கிகளுக்கான மீள்நிதியிடல் என்பவற்றுக்காக 2026 ஆம் ஆண்டில் ரூ. 54,136 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அத்துறையில் ஏற்பட்ட எழுச்சி காரணமாக அரச மற்றும் தனியார் வங்கி முறைமையூடாக இத்துறைக்கு ரூ. 97,100 மில்லியன் கடன் வெற்றிகரமாக பகிர்ந்தளிக்கப்பட்டது. இத்துறையில் ஏற்பட்ட உத்வேகம் காரணமாக இந்த மொத்த ஏற்பாடுகளையும் முழுமையாக உபயோகிப்பதற்கு எமக்கு முடிந்துள்ளது.

2027 ஆம் ஆண்டிலும் வட்டி உதவு தொகைக்காகவும் மற்றும் வங்கிகளுக்கு மீள்நிதியிடலுக்காகவும் ரூ. 67,687 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் அரச மற்றும் தனியார்

வங்கிகள் ஊடாக ரூ. 174 பில்லியன் தொழில்முயற்சியாளர்களுக்கு சலுகைக் கடன்களாக வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதனுள், பின்வரும் கடன் திட்டங்கள் உள்ளடங்குகின்றன:

- **நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் துறையை மீளக் கட்டியெழுப்புவதற்கான மீள்நிதியிடல் மற்றும் வட்டிச் சலுகைக் கடன் திட்டம் (Re-MSME Plus)**
    - மீள்நிதியிடல் கடன் திட்டத்தின் கீழ் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் மூலதன மற்றும் தொழிற்படு மூலதனத் தேவைகளுக்காக 5% வட்டி வீதத்தின் கீழ் சலுகைக் கடன்களை வழங்குவதற்காக ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 30,000 மில்லியனுக்கு மேலதிகமாக, மேலும் ரூ. 20,000 மில்லியன் கடன் வழங்குவதற்காக அரசாங்கத்தினால் வட்டி மானியம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற அதேவளை, அதற்காக ரூ. 200 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது. இற்கு மேலதிகமாக, தேவையான நிதி ஏற்பாடுகளும்செய்யப்படும்.
    - இச்சலுகைக் கடன் திட்டத்தில் கடற்றொழில் துறையை உள்வாங்குவதற்காக, நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் வரைவிலக்கணத்தினுள் வியாபாரத்தின் புரள்வை மாத்திரம் கருத்திறகொண்டு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வழங்குவதற்கு முன்மொழியப்படுகின்றது.
- **ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள்**
    - சலுகை வட்டி கடன் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிலவும் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் மேலும் ரூ. 30,000 மில்லியன் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின்

மூலதன மற்றும் தொழிற்படு மூலதனத் தேவைகளுக்காக கடன் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

- **சிறிய மற்றும் நடுத்தர அளவிலானவு அரிசி ஆலை உரிமையாளர்களுக்கான வாக்குறுதிக் கடன் (Pledge Loan) திட்டம்:**
    - அரச உத்தரவாத விலைக்கு நெற் கொள்வனவு செய்வதற்காக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கான வாக்குறுதிக் கடன் திட்டம், வட்டியற்ற கடன் திட்டமாக 2027 முதல் செயற்படுத்துவதற்குப் முன்மொழிகின்றேன். அத்திட்டத்தின் ஊடாக ரூ. 20,000 மில்லியன் நிதி வசதிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கடன் திட்டத்தின் மேலதிக வட்டிச் சலுகையை ஏற்பதற்காக ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 350 மில்லியனுக்கு மேலதிகமாக தேவையான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

- **பெண்களை தலைமை குடும்பங்களை முன்னேற்றுவதற்கான கடன் திட்டம்:**
    - பெண்களை தலைமையாகக் கொண்ட குடும்ப அலகுகளை முன்னேற்றுவதற்கான விசேட வேலைத்திட்டம் அவசியமாகும். குறிப்பாக கிராமப் பிரதேசங்களில் வாழும் அத்தகைய குடும்பங்களின் வாழ்க்கை தரம் ஒப்பீட்டளவில் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகிறன. அக்குடும்பங்களை பொருளாதார ரீதியில் வலுப்படுத்துவதற்காக சமுர்த்தி வங்கி ஊடாக 3% வருடாந்த வட்டி வீதத்தின் கீழ், ரூ. 1 மில்லியன் வரை குழுக் கடன் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழிகின்றேன். இதற்காக, வட்டி நிவாரணம் செலுத்துவதற்காக ரூ. 200 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன். மேலதிகமாக தேவையான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை

எடுக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் ரூ. 12,500 மில்லியன் கடன் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- **கிராமிய தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டம்:**
    - கிராமிய தொழில்முயற்சிகளை வலுவூட்டுவதற்கும் அஸ்வெசும பயனாளிகளை வலுவூட்டுவதையும் நோக்கமாகக் கொண்டு, தொழில்முயற்சியாளர்களுக்கு சமுர்த்தி வங்கி ஊடாக உயர்ந்த பட்சம் ரூ. 5 மில்லியன் வரை 4% வருடாந்த வட்டி வீதத்தின் கீழ் கடன் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இக்கடன் வசதியைப் பெற்றுக்கொள்வதற்குத் தகைமை பெறுவதற்கு குறித்த தொழில் முயற்சியாளர்கள் குறைந்தபட்சம் ஐந்து அஸ்வெசும பயனாளிகளுக்கேனும் வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுத்தல் கட்டாயமாகும். இதற்காக வட்டி நிவாரணத்திற்காக ரூ. 200 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழிகின்றேன். இதன் மூலம் ரூ. 5,000 மில்லியன் கடன் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- **கடற்றொழில்சார் பாரியளவான தொழில்முயற்சியாளர்களுக்கான சலுகைக் கடன்**
    - ஏற்றுமதி வாய்ப்புகளுடன் கூடிய பாரியளவிலான கடற் தொழிலாளர்கள், மீன் உற்பத்தி வழங்குநர்கள், படகு தயாரிப்பாளர்கள் மற்றும் கடற்றொழில் துறைக்குத் தேவையான ஏனைய மீன்பிடி உபகரண உற்பத்தியாளர்களுக்குத் தேவையான நவீன தொழில்நுட்பம் மற்றும் ஏனைய உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்வதற்காக அதிகபட்சம் ரூ. 500 மில்லியன் வரை கடன் தொகையை வங்கிகள் ஊடாக 5% ஆண்டு வட்டி வீதத்தின் கீழ் வழங்குவதற்கும் முன்மொழிகின்றேன். அதற்காக வட்டி மானியத்திற்காக ரூ. 1,000 மில்லியன் வழங்குவதற்கும் முன்மொழிகின்றேன். இதன் மூலம், ரூ. 15,000 மில்லியன் கடன் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- **வீடு சார்ந்த சுற்றுலா தங்குமிட வசதிகள் (Home-Stay) கடன் திட்டம்:**
    - வீடுகள் சார்ந்த சுற்றுலா தங்குமிட வசதிகளை நடாத்திச் செல்லும் வியாபாரங்களுக்கு அந்த வசதிகளை மேம்படுத்துவதற்கும் புதிதாக வீடுகள் சார்ந்த சுற்றுலாத் தங்குமிடங்களை ஆரம்பிப்பதற்கும், தொழில்முயற்சியாளர்களுக்கு 3% ஆண்டு வட்டி வீதத்தில் உயர்ந்தபட்சம் ரூ. 2 மில்லியன் வரை சலுகைக் கடன்பெற்றுக் கொடுப்பதற்கு முன்மொழியப்படுகின்றது. அதேவேளை, அதற்குத் தேவையான வட்டி நிவாரணம் செலுத்துவதற்கு முதற்கட்டமாக ரூ. 100 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழிகின்றேன். இதற்கு மேலதிகமாக தேவையான நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இக்கடன் திட்டத்தின் கீழ் ரூ. 7,500 மில்லியன் சலுகைக் கடன் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த முழுமையான கடன் திட்டங்கள் தொடர்பில் உள்ளிடப்பட வேண்டிய தரவுகள் மற்றும் தகவல்கள் நிதி அமைச்சின் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், 1819 உடனடி அழைப்பு தொலைபேசி இலக்கமும் (hotline) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

13. துறைமுக அபிவிருத்தி

கிழக்கு - மேற்கு உலகளாவிய கடல் மார்க்கத்தில் மிகவும் கேந்திர முக்கியதுவமிக்க அமைவிடத்தில் அமைந்துள்ள கொழும்பு துறைமுகம் உலகின் துறைமுகங்களுக்கு மத்தியில் 20 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. துறைமுகமும் அதுசார் சேவைகளும் அபிவிருத்தி செய்யப்படுவது நாட்டின் பொருளாதாரத்திற்கு உயர் முக்கியத்துமிக்கதாக விளங்குகின்றது. 2040 ஆம் ஆண்டளவில் அங்கு கப்பல் ஏற்றும் மொத்தக் கொள்ளளவை 20 அடி கொள்கலன் அலகுகள் (TEUs) 30 மில்லியக்கு மேல் அதிகரிப்பதும், மீள்-ஏற்றுமதி கப்பலேற்றல் மற்றும் ஏற்பாட்டுச் சேவை வழங்கும் மையமாக அபிவிருத்தி செய்வதும் எமது இலக்காகும்.

- ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் உலக வங்கினதும் நிதியுதவியுடன், மேற்கு முனையம் II, 3.2 கிலோமீற்றர்களைக் கொண்ட அலைதாங்கி சுவர் நிர்மாணிக்கப்பட்டு 3.2 மில்லியன் கொள்கலன்களைக் கையாளுவதற்காகத் தேவையான அபிவிருத்தி மேற்கொள்ளப்படும்.
- கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்திக்காக தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சாத்தியவள ஆய்வை அடுத்த ஆண்டின் முற்பகுதியில் நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. வடக்கு துறைமுக அபிவிருத்தியின் தீர்க்கமான காரணியான களனி கங்கை முகத்துவாரம் சார்ந்த மேலதிக ஆய்வை துரிதமாக நடை முறைப்படுத்தவதற்காக ரூ. 300 மில்லியன் துறைமுக அதிகாரசபை நிதியிலிருந்து செலவிட எதிர்பார்க்கப்படுகின்றது.
- கொழும்புத் துறைமுகத்தில் அரச-தனியார் கூட்டுமுயற்சியுடன் சேவை வழங்கல் நிலையத்தை அமைக்கும் பொருட்டு (Logistic Centre) ஒன்றை அமைப்பதற்கான முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP) எதிர்வரும் 2 மாதங்களுக்குள் மேற்கொள்ளப்படும்.
- கொழும்புத் துறைமுகத்தின் கப்பல் போக்குவரத்து முகாமைத்துவ முறைமையை தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்தி, நம்பகமான மற்றும் செயல்திறன்மிக்க சேவையினை பெற்றுக் கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. யப்பான் அரசாங்கத்தின் ஆதரவுடன் நடைமுறைப்படுத்தப்படும், ரூ. 3,578 மில்லியன் செலவிலான இக் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக ரூ. 575 மில்லியன் நிதி ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- **கப்பல் எரிபொருள் வழங்கும் கொள்ளளவு (Bunkering)**

இலங்கைத் துறைமுகங்களுக்கு வரும் கப்பல்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், எரிபொருள் நிரப்பும் கொள்ளளவை (Bunkering) விரிவுபடுத்தி வலுப்படுத்தவும், இலங்கையை ஒரு போட்டித்தன்மை வாய்ந்த பிராந்திய எரிபொருள் நிரப்பும் மையமாக நிலைநிறுத்தவும் பாரிய வாய்ப்புக்

காணப்படுகின்றது. அதற்கமைய, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (CPC) ஆதரவுடன், கொழும்புத் துறைமுகத்தில் தனியார் துறையின் பங்கேற்புடன், 'கட்டுவித்தல் – தொழிற்படுத்தல் - கைமாற்றுதல்' (Build-Operate-Transfer - BOT) அடிப்படையில் எரிபொருள் நிரப்பும் கொள்ளளவை 50,000 மெட்ரிக் தொன்களாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- காலி துறைமுகத்தை மையப்படுத்தி கப்பல் எரிபொருள் வழங்கும் சேவைகளுக்குத் தேவையான களஞ்சியங்கள் மற்றும் குழாய் தொகுதியை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் தனியார் துறையும் இணைந்து செயற்படும்.
- திருகோணமலைத் துறைமுகத்தை எரிபொருள் களஞ்சியப்படுத்தும் மையமாக மாத்திரமன்றி, தெற்காசியப் பிராந்தியத்தின் எரிபொருள் விநியோக வலையமைப்புடன் இணைக்கப்படக்கூடிய உபாயரீதியான மையமாக அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. அரச மற்றும் சர்வதேச பங்குடமைகளுடன் இணைந்து இதனை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- திருகோணமலை மேல் தாங்கி முனையத்தில் தெரிவுசெய்யப்பட்ட 5 தாங்கிகளில் 2 இன் திருத்தப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. தாங்கி முனையத்திலிருந்து துறைமுகம் வரை புதிய குழாய் அமைப்பு ஒன்றை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரூ. 7,375 மில்லியனை செலவு செய்ய எதிர்பார்க்கிறது.
- இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் லங்கா ஐ.ஓ.சி. (IOC) கம்பனியுடன் இணைந்து தாபித்துள்ள, திருகோணமலைத் துறைமுகத்திலுள்ள 'ரின்கோ பெற்றோலிய டேர்மினல்' பிறைவேற் லிமிற்றெட் நிறுவனத்திற்குச் சொந்தமான 61 தாங்கிகளில் 29 தாங்கிகளை அரச-தனியார் பங்குடமையின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கான முதலீட்டு முன்மொழிவினை

(RFP) 2027 ஆம் ஆண்டில் அழைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அபிவிருத்திப் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் இலங்கையின் கடல்சார் போட்டித்தன்மை குறிப்பிடத்தக்களவு வலுவடையும் என்பதுடன், உலகளாவிய கப்பல் போக்குவரத்து மற்றும் கடல்சார் கைத்தொழிலில் இந்நாட்டு கரைகடந்த கப்பல் எரிபொருள் வழங்குதல் (Offshore Bunkering) உள்ளடங்களாக பிரதான எரிசக்தி மையமாக தோற்றம்பெறும் என நாம் நம்புகின்றோம்.

14. விமானச் சேவைகள் துறையில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்

14.1 சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி

தற்பொழுது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் முதலாவது முனையத்தின் விமானப்பயணிகள் கொள்ளளவு சுமார் 6 மில்லியனாக இருக்கின்ற போதிலும், அதிலும் கூடிய விமானப்பயணிகள் கையாளப்படுகின்றனர். 2032 ஆம் ஆண்டாகும் போது சுமார் 16 மில்லியன் விமானப்பயணிகளை கையாளக்கூடிய கொள்ளளவு தேவைப்படுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. அதற்கமைய, விமான நிலையத்தின் விமானப்பயணிகள் கொள்ளளவை அதிகரிக்கும் பணிகள் ஏற்கனவே தாமதமடைந்துள்ளது. எனவே, அதனை அபிவிருத்தி செய்வதை நாம் முன்னுரிமையாகக் கருதுகிறோம். அதற்கமைய;

- விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் கம்பனியின் ரூ. 15,000 மில்லியன் முதலீட்டின் மூலம் முதலாவது முனையத்தின் கொள்ளளவை 6 மில்லியனில் இருந்து 9 மில்லியனாக அதிகரிக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- தாமதமடைந்துள்ள இரண்டாவது முனையத்தின் நிர்மாணப் பணிகளுக்காக, சர்வதேச ஒத்துழைப்புக்கான யப்பான் முகவராண்மையின் (JICA) ஆதரவுடன் நிர்மாணப் பணிகள் மிக விரைவில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- சர்வதேச விமானப் பயணிகளுக்கு உள்நாட்டு பயண முடிவிடங்களுக்கு மிகவும் எளிதாகப் பயணிக்கக் கூடியவாறு, இலங்கை விமான சேவைகள் கம்பனியினால் (AASL) ரூ. 800 மில்லியன் முதலீட்டில் விமான நிலைய வளாகத்தில் உள்நாட்டு விமான முனையமொன்றை அமைக்கும் பணிகள் (Domestic Air Terminal) அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும்.
- விமான நிலையத்திற்கு முன்னால் உள்ள வீதியைப் அகலமாக்குவதற்கும், விமான நிலையத்திலும் அதனைச் சுற்றியும் காணப்படுகின்ற வாகன நெரிசலைக் குறைப்பதற்கும் மேம்பாலமொன்றை (Flyover) அமைப்பதற்குத் தேவையான சாத்தியவள ஆய்வுகள் முன்னெடுக்கப்படும். இதற்கு ரூ. 200 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்யப்படுவதற்குப் முன்மொழியப்படுகின்றது.
- விமான நிலையத்திற்கு உள்ளேயும் அதனைச் சூழவும் வாகன நெரிசலைக் குறைப்பதற்காக, ரூ. 400 மில்லியன் செலவிடப்பட்டு, விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியினால் புதிய வாகனத் தரிப்பிடமொன்று நிர்மாணிக்கப்படும்.
- தனியார் துறையின் பங்களிப்புடனும், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை விமான சரக்குகளை கையாளு மையமொன்றாக மாற்றியமைப்பதற்காக, கட்டுவித்தல்-தொழிற்படுத்துதல்-கைமாற்றுதல் (BOT) அடிப்படையில் விமான நிலையத்திற்குள்ளேயே மீள்-ஏற்றுமதி மையமொன்று அபிவிருத்தி செய்யப்படும்.
- விமான ஓட்டுநர் பயிற்சி, உள்நாட்டு, வர்த்தக மற்றும் பிராந்திய விமான சேவைகளுக்காக ரத்மலானை சர்வதேச விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்படும். விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தற்போதுள்ள ஓடுபாதையைப் புனரமைப்பதற்கும், அதனை 1,400 மீட்டரிலிருந்து 1,771 மீட்டர் வரை நீடிப்பதற்கும் ரூ. 6,000 மில்லியன் செலவிலான கருத்திட்டமொன்றை விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி (AASL) நிதியைக் கொண்டு 2027 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும்.

- 2013 ஆம் ஆண்டில் 190 மில்லியன் ஐ.அ.டொ. கடனைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டு, விமான செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட மத்தலை சர்வதேச விமான நிலையம் இன்று ரூ. 70,000 மில்லியனுக்கும் மேற்பட்ட திரட்டிய நட்டத்தைப் பதிவு செய்துள்ளது. அத்துடன், இந்த நட்டம் ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றது. எனவே, சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து விமான நிலையச் செயற்பாடுகள், தரவு மையங்கள், உணவு மற்றும் உணவு நிலைய சேவைகள் மற்றும் விமானச் சேவைகள் மற்றும் பராமரிப்பு ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்வதற்காக ஏற்கனவே அபிலாசைகள் கோரப்பட்டு (EOI) முடிக்கப்பட்டுள்ளன. தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து முன்மொழிவுகளை முன்வைப்பதற்கான (RFP) விண்ணப்பங்களைக் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்த ஆண்டில் புதிய முதலீட்டாளர்களைத் தெரிவுசெய்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

14.2 உள்நாட்டு விமான நிலையங்கள்

- சீகிரியாவை மையமாகக் கொண்ட சுற்றுலாத்துறையை ஊக்கிவிப்பதற்காக, சீகிரியா உள்நாட்டு விமான நிலையத்தின் பயணிகள் முனையம் உள்ளடங்கலாக வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ. 100 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்யப்படுவதற்கு முன்மொழியப்படுகின்றது.
- சீனக்குடா விமான நிலையத்தின் பயணிகள் முனையம் உள்ளடங்கலாக வசதிகளை மேம்படுத்துவதற்காக இலங்கை விமான சேவைகள் கம்பனியினால் 2027 ஆம் ஆண்டில் தேவையான முதலீடுகள் மேற்கொள்ளப்படும்.

15. கைத்தொழில், வர்த்தகம் மற்றும் முதலீடுகள்

- வாழைச்சேனை கைத்தொழில் பேட்டையை அபிவிருத்தி செய்தல், புளியங்குளம் கைத்தொழில் பேட்டைக்கான சாத்தியவள ஆய்வை மேற்கொள்ளும் பூர்வாங்க திட்டங்களை வகுத்தலும், இங்கிரிய, தம்புள்ளை, ரைகம-மில்லனிய மற்றும் கட்டுநாயக்கா உள்ளடங்கலாக புதிய கைத்தொழில் பேட்டைகளின் அடுத்த கட்ட அபிவிருத்திப் பணிகளை நிறைவு

செய்தல், தற்போதுள்ள கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்றவற்றுக்காக ரூ. 4,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- "ஸ்ரீலங்கா எக்ஸ்போ 2027" கண்காட்சியை ஜனவரி மாதம் நடத்துதல், தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டத்தின் (NEDP) கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள முன்னுரிமைகளைச் செயற்படுத்துவதன் மூலம் ஏற்றுமதிப் பல்வகைப்படுத்தல், போட்டித்தன்மை மற்றும் உயர் பெறுமதி வாய்ந்த ஏற்றுமதிகளை ஊக்குவித்தல் உள்ளிட்ட பணிகளுக்காக ரூ. 750 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- கைத்தொழில்களுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் இடையிலான தொடர்புகளை விஸ்தரித்து, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளை ஊக்குவித்த வண்ணம், புதிய தயாரிப்புகள் மற்றும் செயன்முறைகளை வணிகமயப்படுத்துவதற்காக ஆதரவளிக்கும் அறிவு மற்றும் அனுபவ மையமொன்றை நிறுவுவதற்காகச் சாத்திய வள ஆய்வுவொன்று மேற்கொள்ளப்படும்.
- வடக்கில் தொழில்வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கத்துடன் இதுவரை உற்பத்தி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்த குறஞ்சான்தீவு உப்பளத்தை, வ/ப உப்புக் கம்பனியின் நிதியைப் பயன்படுத்தி மீள ஆரம்பிக்கவுள்ளோம். அதற்காகத் தேவையான நுழைவு வீதிகளை நிர்மாணிப்பதற்கும் சேவைவழங்கலுக்காகவும் பொது திறைசேரியினால் 2026 ஆம் ஆண்டிற்கு ரூ. 236 மில்லியன் நிதி வழங்கப்பட்டுள்ளது.
- ஆபரணக் கைத்தொழிலுக்கு உரிமப்பத்திரங்களை வழங்குவதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கும் வகையில், 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டம் திருத்தப்படும்.
- இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகம், ஏற்றுமதி வசதிகள், ஆய்வுகூடச் சேவைகள் மற்றும் அனுமதிப்பத்திரச் சேவைகளை ஒரே இடத்திலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய சர்வதேச

இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக மையத்தை (International Gem and Jewellery Trade Hub) தாபிப்பதற்கு தேவையான காணிகளை சுவீகரிக்கும் பணிகள் இடம்பெற்று வருவதுடன், ஆரம்ப கட்ட சாத்தியவள ஆய்வொன்றை மொறட்டுவ பல்கலைக்கழகத்தினூடாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- தற்சமயம் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள கைத்தொழில் அமைச்சையும், அமைச்சின் கீழுள்ள ஏனைய எல்லா நிறுவனங்களையும் ஒரே கூரையின் கீழ் கொண்டுவரும் வகையில் நாரேன்பிட்டியில் கட்டிடமொன்றை அமைக்கும் பொருட்டு ரூ. 1,860 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

மூலதனச் சந்தை ஊடாக முதலீட்டை ஊக்குவித்தல்

- கொழும்புப் பங்குச் சந்தையுடன் இணைந்து முனைப்புடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை 18 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையில் சுமார் 0.7 வீதம் ஆகும். எனவே, "அறிந்து கொள்வோம், கற்றுக் கொள்வோம், முதலீடு செய்வோம்" என்ற நோக்குடன் "அனைவருக்கும் பங்கு" என்ற பெயரில் புதிய வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்படுகின்றது. பாடசாலைகளில் உயர்தரம் கற்கின்ற அதாவது தரம் 13 இல் கல்வி பயிலும், 18 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களை முனைப்புடன் பங்குச் சந்தையுடன் இணைத்துக் கொள்ளும் நோக்கத்துடன், முறையான தெரிவுசெய்யும் நடைமுறைக்கு அமைய, ரூ. 10,000 என்ற உச்ச வரம்பிற்கு கட்டுப்பட்டு பங்குத்தொகுதியொன்றை பெற்றுக்கொடுக்கும் கருத்திட்மொன்றை அறிமுகம் செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.
- பொருளாதாரத்திற்கும் தொழில்வாய்ப்பிற்கும் உயர் பங்களிப்பைச் செலுத்துகின்ற சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளை பங்குச் சந்தையில் பட்டியல்படுத்துவதை ஊக்குவிப்பதற்கான

பொறிமுறையொன்றை (SME Listing Support Mechanism) அறிமுகம் செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.

- மேற்படி முன்மொழிவுகள் சார்பில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் ரூ. 250 மில்லியன் நிதியை ஈடுபடுத்தும் என்பதுடன், இதற்கு மேலதிகமாக ரூ. 500 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.

கனிம வளங்கள்

நாட்டிலுள்ள கனிம வளங்களை இதுவரை சரியான முறையில் எமது பொருளாதாரத்திற்கு இணைத்துக்கொள்வதில் நாம் தோல்வியடைந்துள்ளோம். கனிம வளங்கள் சார்ந்த கைத்தொழில் கட்டமைப்பு ஒன்றை மேம்படுத்துவதற்காக எமது நாட்டில் பெரும் சாத்தியவளங்கள் காணப்படுகின்றன. அத்தகைய கனிம வளங்களின் சாத்தியவள ஆய்வு செய்வதும், கனிம வளங்கள் மூலம் கிடைக்கும் நன்மைகளை உள்நாட்டுப் பொருளாதாரத்துடன் இணைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் கனிம வளங்கள் தேசியக் கொள்கையூடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. புவிச் சரிதவியல் அளவீட்டு மற்றும் சுரங்கப் பணியகம் மூலம் கனிம வளங்களின் பூர்வாங்க சாத்தியவள ஆய்வுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்ற அதேவேளை, கனிம படிவுகளின் ஆய்வுகளுக்காக சர்வதேச ரீதியிலான நிபுணத்துவத் தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

- 102 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள கஹட்டகஹ கிராபைட் சுரங்கத்திலுள்ள கிராபைட் இருப்பு அளவு குறித்த ஆய்வு, புவிச்சரிதவியல் அளவீட்டு மற்றும் சுரங்கப் பணியகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படவுள்ளது. அத்தைகைய இருப்பு அளவை இனங்கண்டதன் பின்னர், கிராபைட் அகழ்வு மற்றும் பதனிடல் பணிகள் உள்ளிட்ட கிராபைட் பெறுமதி சேர்த்தல் கருத்திட்டத்திற்காகப் பொருத்தமான முதலீட்டாளர் ஒருவரை இனங்காண்பது தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

- லங்கா மினரல் சாண்ட் லிமிடட் கம்பனிக்கு கிழக்கு கரையோரத்தில் கனியமணலுடன் கூடிய 58 கிறிட் அளவுகளை ஒதுக்குவதற்காக அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. லங்கா மினரல் சாண்ட் லிமிடட் கம்பனி மூலம் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற கணிய மணலுக்கு பெறுமதி சேர்க்கும் கைத்தொழிலொன்றுக்கு முதலீட்டாளரொருவரை தெரிவு செய்யும் பொருட்டு அமைச்சரவையினால் இணக்கப்பேச்சுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.
- நாத்தாண்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள 40 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட சிலிக்கா மணல் படிவு தொடர்பிலான ஆய்வுகள் தற்பொழுதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொடர்புடைய கனிம வளங்கள் இருப்பதற்கான சாத்தியம் இனங்கண்டதன் பின், 2027 ஆம் ஆண்டில் பொருத்தமான முதலீட்டாளர் ஒருவரை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- வெல்லவாய பிரதேசத்தில் அமைந்துள்ள கொடிகம்பொக்க குவார்ட்ஸ் (Quartz / திரூவாணா) படிவு தொடர்பில் 28 கிறிட் கட்ட அலகுகளைக் கொண்ட பிரதேசமொன்று இனங்காணப்பட்டுள்ளது. குறித்த குவார்ட்ஸ் படிவை அகழ்வு செய்வது மற்றும் பெறுமதி சேர்த்தல் கருத்திட்டத்திற்காகப் பொருத்தமான முதலீட்டாளர் ஒருவரை இனங்காண்பதற்கு 2027 ஆம் ஆண்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

16. மீன்பிடிக் கைத்தொழில்

மீன்பிடிக் கைத்தொழில் நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்து, உள்நாட்டு தேசிய புரதத் தேவையின் பெரும்பகுதியை நிவர்த்தி செய்யும் மற்றும் மீன்பிடிச் சமூகத்தின் ஜீவனோபாயத்தை உயர்த்தும் பிரதான கைத்தொழிலொன்றாகும். நவீன தொழில்நுட்பம், விஞ்ஞானரீதியான முகாமைத்துவம் மற்றும் மீனவ சமூகத்தின் சேமநலன் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட நவீன அணுகுமுறை ஊடாக கடற்றொழில் துறையை மிகவும் உற்பத்தி விளைவுப்பெருக்கமுடைய மற்றும் நிலைபேறான

துறையாக மாற்றுயமைப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்கமைய, 300 மில்லியன் ஐ.அ.டொ. ஆக உள்ள எமது ஏற்றுமதி வருமானத்தை 2030 ஆம் ஆண்டளவில் 600 மில்லியன் ஐ.அ.டொ. வரை அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல், நாரா நிறுவனத்தின் ஊடாக மீன்பிடிக் கைத்தொழிலுடன் தொடர்புடைய புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதை வலுப்படுத்தல், நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலை ஊக்குவித்தல் உள்ளிட்ட மீன்பிடிக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக ரூ. 6,200 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- வட மாகாணத்தின் கடற்றொழில் துறைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள், நங்கூரமிடும் துறை மற்றும் பேசாலை மீன்பிடித் துறைமுகம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்காக ரூ. 5,000 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்யப்படுவதற்கு முன்மொழியப்படுகின்றது.
- சிலாபம், வெள்ளமங்கற மீன்பிடித் துறைமுக அபிவிருத்திப் பணிகளுக்காக ரூ. 300 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்யப்படுவதற்கு முன்மொழியப்படுகின்றது.
- கந்தறை மீன்பிடித் துறைமுக அபிவிருத்திப் பணிகளுக்காக ரூ. 1,500 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்யப்படுவதற்கு முன்மொழியப்படுகின்றது.
- பேலியகொட மீன் சந்தையானது தற்பொழுது முறையான கழிவு அகற்றும் முறையின்மை, போதுமானளவு குளிரூட்டும் வசதிகள் இல்லாமை, சுகாதார வசதிகள் போதாமை போன்ற பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளது. இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ரூ. 1,000 மில்லியனை பங்கு மூலதனமாக வழங்குவதற்கு முன்மொழியப்படுகின்றது. இந்நிலையத்தை புதிய வியாபார கட்டமைபொன்றின் கீழ் முகாமை செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
- மீன்பிடி வலை உபகரணங்களின் தயாரிப்பு மற்றும் திருத்தப் பணிகளை மேற்கொள்ளும் நோர்த் சீ நிறுவனத்திற்காக புதிய தொழில்நுட்ப வசதிகளை வலுப்படுத்துவதற்குத் தேவையான

இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கும், புதிய மீன்பிடி வலை உற்பத்தி மற்றும் திருத்த நிலையமொன்றை அமைப்பதற்கும் ரூ. 500 மில்லியன் நிதியை மூலதனமாக வழங்குவதற்க முன்மொழியப்படுகின்றது.

- தற்போது நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலுடன் தொடர்புடைய அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் பொலொந்தலாவ நீர்வாழ் உயிரின வளர்ப்பு நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூ. 300 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுவதற்கு முன்மொழியப்படுகின்றது.
- இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான விற்பனை நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூ. 200 மில்லியனை பங்குரிமை மூலதனமாக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்கு யோசனை முன்மொழியப்படுகின்றது.
- நன்னீர் நீர்த்தேக்கங்களில் கூடுகளுக்குள் மீன் வளர்ப்பு கூடிய விளைச்சலைத் தருகின்றதென முன்னோடிக் கருத்திட்டங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்தும் கூடுகளுக்குள் மீன் வளர்ப்பைப் பிரபல்யப்படுத்துவதற்காக மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ரூ. 250 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுவதற்குப் முன்மொழியப்படுகின்றது.
- மீன்பிடித்துறையில் தெரிவுசெய்யப்பட்ட பாரிய அளவிலான கருத்திட்டங்களை இலக்கு வைத்து அபிவிருத்தித் தேவைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் சாத்தியவள ஆய்வுகளை மேற்கொள்வதற்காக ரூ. 300 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- சமுத்திர ஆய்வுகள், வாழ்விடங்களை வரைபடமாக்கல், மீன் வளங்களை மதிப்பிடுதல், கண்காணிப்புத் தரவுகளைத் திரட்டல், ஆய்வுகூடப் பகுப்பாய்வு மற்றும் சுற்றாடல் முறைமைகளை மீள்நிறுவுவதினூடாக ஊடாக மீன் வள முகாமைத்துவத்திற்கான நிலைபேறான அபிவிருத்தித் கருத்திட்டங்கள் சார்பில் ரூ. 1,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடும் மீனவர் ஒருவர் இக்கைத்தொழிலில் ஈடுப்பட்டிருக்கும் போது ஏற்படும் அனர்த்தம் காரணமாக மரணமடையும் சந்தர்ப்பத்தில் வழங்கப்படும் நட்டஈட்டுத் தொகையை ரூ. 1 மில்லியனிலிருந்து ரூ. 2 மில்லியன் வரை அதிகரிப்பதற்குப் முன்மொழியப்படுகின்றது.

17. விவசாயத்துறை

கிராமிய மக்களின் பிரதான ஜீவனோபாயம் விவசாயத்துடன் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது. விவசாயத்தின் தொழிற்படையில் 23.9% உம் காணி பயன்பாட்டில் சுமார் 39% உம் காணப்படுவதுடன், அரச முதலீடுகளுக்காகவும் நிவாரணங்களுக்காகவும் கடந்த சில ஆண்டுகளில் ஆண்டுதோறும் ரூபா 200 பில்லியனுக்கும் அதிகமான தொகை ஈடுபடுத்தப்பட்ட போதிலும், தேசிய பொருளாதாரத்திற்கு அவர்களின் பங்களிப்பு 8.4% ஐ அண்மித்த பெறுமதியைக் காட்டுகின்றது. இந்தத் தரவுகளிலிருந்தே விவசாயிகளின் வாழ்க்கைப் போராட்டம் தெளிவாகிறது. இத்துறையை புரட்சிகரமான மாற்றத்திற்கு உட்படுத்தாது இந்த நெருக்கடியிலிருந்து மீள முடியாது.

- பாரிய அளவிலான விவசாய உற்பத்தி மற்றும் அவற்றின் தரத்தை உயர்த்தல், விவசாய பெறுமதிச் சங்கிலிகளின் செயல்திறனை மேம்படுத்தல், சந்தையை விரிவுபடுத்துவதற்காகத் தனியார் துறையின் முதலீடுகளை ஊக்குவித்தல் முதலான பணிகள் முன்னெடுக்கப்படும்.
- பயிரிடப்படாத அல்லது உற்பத்தி விளைவுப்பெருக்கம் குறைந்த வயல் காணிகளை சரியான மதிப்பீடொன்றின் மூலம் அடையாளம் காணப்பட்டதன் பின், களப்பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதற்கு அல்லது நிரந்தரப் பயிர்களை நடுவதற்கு அவ் வயல் காணிகளின் உரிமையாளர்களுக்குச் சுதந்திரம் வழங்குவதற்கு முன்மொழிகின்றேன். அக்குறித்த தெரிவுசெய்யப்பட்ட நிலங்களில் பயிரிடுதலை ஊக்குவிப்பதற்காக ரூபா 1,550 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- விவசாய உள்ளீடுகளை மொத்தமாகக் கொள்வனவு செய்தல், பீடை மற்றும் நோய் கட்டுப்பாட்டை ஒன்றாக மேற்கொள்ளல், நீர் வளங்களை உச்ச செயல்திறனுடன் பயன்படுத்துதல், சந்தையில் ஏற்படும் விலை ஏகபோகங்களுக்கு முகங்கொடுத்தல், உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காக தனித்தனியாகப் பயிரிடுவதற்குப் பதிலாகக் கூட்டாக "வெளிப்பரப்பு" அணுகுமுறையை அறிமுகப்படுத்தப்படும். இதன் ஆரம்பக் கட்டமாக ரூபா 400 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- கிராமிய விவசாய அபிவிருத்திக்கான கமநல சேவை நிலையங்களை, டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுதல், இயந்திர இருப்புக்களை ஏற்படுத்தல், விவசாய மக்களை வலுவூட்டல், சரியானதும் காலத்துக்குரியதுமான (real-time) தகவல்களைப் பரிமாறிக்கொள்ளக்கூடிய டிஜிட்டல் தளமொன்றை நிறுவுதல் போன்ற 'அனைத்துச் சேவைகளையும் வழங்கும் ஒரே மையமாக' (One-Stop Shops) மாற்றியமைக்கப்படும். இதனை 5 பிரதான விவசாய மாவட்டங்களில் முன்னோடிக் கருத்திட்டமாக ஆரம்பிப்பதற்கு ரூபா 250 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டில் நெல் உலர்த்தும் இயந்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டுள்ள மற்றும் ஏற்கனவே இயந்திரக் கொள்ளளவைக் கொண்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு, துரிதமாகச் செயற்பட்டு, நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான நெல்லைக் கொள்வனவு செய்து சந்தைக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகளை எளிதாக்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையின் கீழ் அவசியமான தொழிற்படு மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக முன்னுரிமை வழங்கி, கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரிசி உற்பத்திற்குத் தேவையான இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் தற்போது உணவுப் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 700 மில்லியனுக்கு மேலதிகமாக ரூபா 300 மில்லியன் தொகையை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.

- இரசாயன உரத்தையும் சேதனப் பசளையையும் ஒன்றாகப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல், பயிர் உற்பத்தி விளைவுப்பெருக்கத்தை விருத்தி செய்தல் மற்றும் மண்ணின் தரம் மற்றும் போசாக்கு நிலையை வலுப்படுத்தல் என்பவற்றுக்காக ஒருங்கிணைந்த தாவர போசாக்கு முகாமைத்துவ முறைமையொன்று (IPNM) தேவைப்படுகின்றது. இதற்காக 4 ஆண்டு கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்படுவதுடன், இதன் ஆரம்ப கட்டமாக 2027 ஆம் ஆண்டிற்கு ரூபா 47 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- உர மானியமானது நெற்செய்கைக்கு ஹெக்டயாருக்கு ரூபா 30,000 பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், இதற்காக ரூபா 44,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நெற்செய்கைக்காக, ஹெக்டயாருக்கான ரூபா 30,000 மானியம், வயல் நிலங்களில் பயிரிடப்படும் ஏனைய பயிர்களுக்கும் 2026/27 பெரும்போகத்திலிருந்து பெற்றுக்கொடுக்கப்படும்.
- கறுவா கைத்தொழிலின் உற்பத்தி விளைவுப்பெருக்கம் தரம் மற்றும் உலக சந்தைப் பிரவேசத்தை உயர்த்துவதை இலக்காகக் கொண்ட, முழுமையான பெறுமதிச் சங்கிலியை மேம்படுத்துவதற்காக ரூபா 400 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17.1 கால்நடை வளங்கள்

- தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையில் அடையாளம் காணப்பட்ட பண்ணைகளை "இனப்பெருக்கப் பண்ணைகளாக" அபிவிருத்தி செய்து பேணிச் செல்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. நிகவரெட்டிய பண்ணையில் கரவை பசுகள் மற்றும் எருமை மாடுகளுக்கும், ஹொரகெல பண்ணையில் பன்றிகளுக்கும், சிரிங்கபாத்த பண்ணையில் செம்மறியாடுகளுக்கும், பிரத்தியேகமான கருமந்தைகளை (Nucleus Herds) நிறுவுவதற்குத் தேவையான, உயர் மரபணு தரத்தைக் கொண்ட அடிப்படை இனப்பெருக்க விலங்கு

மந்தைகளைக் இறக்குமதி செய்வதற்காக ரூபா 1,800 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- மேல் மற்றும் வட மேல் மாகாணங்களை மையமாகக் கொண்டு கோழி இறைச்சி மற்றும் கோழி இறைச்சிசார்ந்த மேலதிக உபஉற்பத்திகளை வெளிநாட்டுச் சந்தைக்கு ஏற்றுமதி செய்வதற்காகப் பிரத்தியேகமான பொருளாதார வலையமொன்றை நிறுவுவதற்கான சாத்தியவள ஆய்வொன்றை மேற்கொள்ளும் பொருட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 57 மில்லியன் யூரோ நிதி செலவுசெய்யப்பட்டு, எனினும் நீண்ட காலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த மில்கோ படல்கம புதிய பால் பதனிடல் தொழிற்சாலையின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்காக ரூபா 3,000 மில்லியன் நிதி 2026 ஆம் ஆண்டில் பெற்றுக்கொடுக்கப்பட்டது. இப்பணிகளை நிறைவு செய்து மில்கோ தொழிற்சாலையை அங்கு நிறுவுவதற்காக 2027 ஆம் ஆண்டுக்காக ரூபா 3,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 2019 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட வேண்டிய இக்கருத்திட்டம், நீண்ட காலமாக இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் இயந்திரங்களுக்கும் நிர்மாணங்களுக்கும் சேதம் ஏற்படுதல், மேலதிக புனரமைப்புச் செலவுகள் ஏற்படுதல், இயந்திரப் பாகங்களின் விலை அதிகரித்திருத்தல் மற்றும் ஒப்பந்தகாரரால் தாமதக் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுதல் போன்ற பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. தற்சமயம் மில்கோ கம்பனி, ஒப்பந்தகாரரான டென்மார்க்கின் DESMI கம்பனியுடன், பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது

- புத்தளம், மன்னார் மற்றும் மட்டக்களப்பு உள்ளிட்ட மாவட்டங்களில் ஆட்டுப் பண்ணைகளைத் நிறுவுவதற்காக, அவ்விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காகத் தற்பொழுது ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 200 மில்லியனுக்கு மேலதிகமாக மேலும் ரூபா 300 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.

17.2 நீர்ப்பாசனத் துறை

விவசாய உற்பத்தியை உயர்த்தல், உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், கிராமிய மக்களின் ஜீவனோபாயத்தை வலுப்படுத்தல் மற்றும் காலநிலை மாற்றங்களின் மத்தியில் நீர் வளங்களை வினைத்திறனுடன் முகாமைசெய்தல் போன்றவற்றுக்காக பலமான நீர்ப்பாசன முறைமையொன்றை அபிவிருத்தி செய்து, பேணிச்செல்வது இன்றியமையாதது. அதற்கமைய இவ்வரவுசெலவுத் திட்டத்தினூடாக, நீர்ப்பாசன அபிவிருத்திகாக போதுமானதும் முன்னுரிமைப்படுத்தப்பட்டதுமான நிதி ஒதுக்கீடுகளை ஒதுக்கி ஏற்கனவே அமுலிலுள்ள, நீர்ப்பாசன அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்கும் புதிய கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் ரூபா 77,000 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- "டித்வா" அனர்த்தத்தினால் சேதமடைந்த அருவி, வாவி முறைமைகள் மற்றும் அதனுடனினைந்த சிறிய நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளையும் விவசாய வீடுகளையும் புனரமைப்பதற்காக ரூபா 21,000 மில்லியன் மதிப்பிடப்பட்டுள்ளது. குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள் டித்வா நிதி ஒதுக்கீடுகள் மூலம் 2026 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன், தேவையான மீதி நிதி ஏற்பாடுகள் 2027 ஆம் ஆண்டில் வழங்கப்படும்.
- யாழ்ப்பாண தீபகற்ப மக்களின் நீர்ப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண நீர்ப்பாசனக் கருத்திட்டம் தொடர்பில் சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், அது இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இக்கருத்திட்டங்கள் உள்ளடங்கலாக மேலதிக சாத்தியவள ஆய்வுகளுக்காக ரூபா 75 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- அனுராதபுரம், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் விவசாய மற்றும் சமூக அபிவிருத்திக்காக ஏற்கனவே நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள, கீழ் மல்வத்து ஓயா

கருத்திட்டத்தின் பணிகளைத் துரிதப்படுத்துவதற்காக ரூபா 7,500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் நீர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், வெள்ள இடர்களை மட்டுப்படுத்துவதற்கும், முந்தேனி ஆற்றுப் படுக்கை அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பிப்பதற்கும் ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.
- ஹம்பாந்தோட்டை கைத்தொழில் பேட்டைய அதனை சார்ந்த பிரதேசங்களின் நீர் காணப்படுவதற்காக சாத்தியம் 2040 ஆம் ஆண்டளவில் 115 மில்லியன் கனமீற்றராக இருக்கும். வீட்டு மற்றும் கைத்தொழில் தேவைகளுக்காக வருடமொன்றுக்கு ஏறத்தாழ 115 மில்லியன் கன மீற்றர் (MCM) மேலதிக நீர்த் தேவைப்பாடொன்று காணப்படுகின்றது. இந்தத் தேவைக்குத் தீர்வு காண்பதற்காக, ரக்வானை கங்கை, சமனலவெவ நீர்த்தேக்கத்தின் மேலதிக பயனுள்ள நீர் கொள்ளளவு மற்றும் கிரிந்தி ஓயா படுக்கைக்குக் காணப்படும் உமா ஓயா நீர் திருப்புதல் உள்ளிட்ட நீர் மூலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள அதேவேளை, அது தொடர்பில் ஒருங்கிணைந்த நீர்ச் சமநிலை மற்றும் பூர்வாங்க சாத்தியவள ஆய்வு ஒன்றை மேற்கொள்வதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.
- வேமெடில்ல நீர்த்தேக்கத்தின் மேலதிக நீரை குருநாகல் மாவட்டத்தின் மீ ஓயா படுக்கையை நோக்கித் திருப்புவதற்காக வயம்ப எல கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல், 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பழமையான ராஜாங்கனை உயர் நீர்ப்பாசன முறையை நவீனமயமாக்கல், இடைநிறுத்தப்பட்டுள்ள சியம்பலங்கமுவ ஓயாவிலிருந்து மகாகல்கமுவ ஓயா வரையிலான போஷக்க நீரேந்துக் கால்வாயின் பணிகளை நிறைவு செய்தல், கம்பஹா நகர வெள்ளப் பெருக்கை மட்டுப்படுத்தல் முதலான நீர்ப்பாசன கருத்திட்டங்களுக்கு ரூ. 5,000 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- வட மத்திய மகஎல கால்வாய்க் கருத்திட்டம் உள்ளடங்கலாக மகாவலி நீர்ப் பாதுகாப்பு மற்றும் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 19,500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மொனராகலை மாவட்டத்தின் நீர் தேவைகளைப் பூர்த்தி செய்வதை நோக்காகக் கொண்ட கும்புக்கன் ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டம் மற்றும் அம்பாறை மாவட்டத்தின் நீர் விநியோகத்தை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்ட ஹடஓயா நீர்த்தேக்க அபிவிருத்தித் கருத்திட்டங்களை மீள ஆரம்பிப்பதற்கும் வகையில் சாத்தியவள ஆய்வுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய நீர்ப்பாசனக் கருத்திட்டங்களின் ஆரம்பப் பணிகளுக்கு மேலதிகமாக ரூபா 200 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.

குளங்கள், அணைகள் மற்றும் கால்வாய் அணைக்கட்டுக்களைப் புனரமைத்தல்

- சிறிய அளவிலான நீர்ப்பாசன முறைகள் மூலம் நெல் மற்றும் உப உணவுப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான நீர் வழங்கல், நிலக்கீழ் நீர் மட்டத்தைப் பேணி வருதல், நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலைப் பேணிவருதல் என்பவற்றுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், அதேபோன்று கிராமிய மக்களின் நீர் நுகர்வுத் தேவைகளையும் பூர்த்தி செய்தல் என்பன மனித வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது. சிறிய நீர்ப்பாசன முறைகளை பலம் பொருந்தியதாக பேணிச்செல்வதற்கு இம்முறை வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ரூபா 2,000 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக மாகாண சபைகளின் கீழ் செயற்படும் குளங்கள், அணைகள் மற்றும் கால்வாய்களைப் புனரமைப்பதற்கும் பராமரிப்புப் பணிகளுக்கும் ரூபா 7,500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- நீர்ப்பாசன மகிமை - எமது உரிமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறிய நீர்ப்பாசன அபிவிருத்திக்காக ரூபா 2,500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அதேவேளை, டித்வா அனர்த்தத்தினால் சேதமடைந்த சிறிய நீர்ப்பாசன முறைகளைப் புனரமைப்பதற்காக ரூபா 1,500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவை உட்பட, சிறிய நீர்ப்பாசன முறைகளைப் பராமரிப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் நேரடியாக ரூபா 15,000 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17.3 காணி

- தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 'பிம்சவிய' நிகழ்ச்சித் திட்டத்தை மேலும் வலுப்படுத்துவதற்காக 2027 ஆம் ஆண்டிற்கு ரூபா 800 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- காணி உரித்துப் பதிவு, காணி ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் காணித் தகவல் முறைமைகளை நவீனமயமாக்குதல் என்பவற்றுக்கான நிகழ்ச்சித்திட்டங்களும் தொடர்ந்தும் செயற்படுத்தப்படும் என்பதுடன் அதற்காக ரூபா 140 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- அரசாங்க நில அளவைத் திணைக்களத்திற்குச் சொந்தமான வரைபடப் வன்பிரதிகளாகக் காணப்படும் 3.5 மில்லியன் காணித் துண்டுகளுக்குரிய திட்டங்களை டிஜிட்டல்மயமாக்கி, காணித் தகவல் முறைமையுடன் ஒன்ணைக்கும் நிகழ்ச்சித்திட்டமும் 2027 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

18. பெருந்தோட்டத் துறை

தற்பொழுது பெருந்தோட்டத் துறையினூடாக ஈட்டப்படும் 3 பில்லியன் டொலர் ஏற்றுமதி வருமானத்தை, 2030 ஆம் ஆண்டளவில் 5 பில்லியன் டொலராக உயர்த்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காக 2027 பெருந்தோட்டத் துறையின் அபிவிருத்திக்காக ரூபா 13,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தேயிலை உற்பத்திக்கு சுமார் 70% பங்களிப்பை வழங்கும் சிறு தேயிலைத் தோட்டத் துறையின் ஒட்டுமொத்த உற்பத்தித் திறனை உயர்த்துவதை இலக்காகக் கொண்டு, ஒருங்கிணைந்த அணுகுமுறையினூடாக தெற்கு, சப்ரகமுவ, வடமேல், மேல், ஊவா மற்றும் மத்திய மாகாணங்களை உள்ளடக்கும் வகையில் 500 தேயிலைக் கிராமங்களை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக ரூபா 730 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- பால் வெட்டப்படாமல் கைவிடப்பட்டுள்ள முதிர்ந்த இறப்பர் பயிர்களைப் புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 500 மில்லியனுக்கு மேலதிகமாக, பொருத்தமான நீர் முகாமைத்துவத் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் உற்பத்தித் திறனை உயர்த்தல், இறப்பர மரங்களின் வணிகரீதியான பயன்களை அடையாளம் காணும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் இறப்பர் கைத்தொழில் தொடர்பான ஆய்வுகூட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் என்பவற்றுக்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.
- உற்பத்தித்திறன் குறைந்த தென்னந் தோட்டங்களின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காகத் தென்னை புனர்வாழ்வு கருத்திட்டத்திற்கு ரூபா 2,500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- பனைக் கைத்தொழிலின் பெறுமதிச் சங்கிலியை மேம்படுத்தல், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி (SME) மேம்பாடு மற்றும் புத்தாக்கம் ஊடாக இலங்கையில் பனைக் கைத்தொழிலில் நிலைபேறான மாற்றத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்றை வடக்கு, கிழக்கு, தெற்கு (ஹம்பாந்தோட்டை மாவட்டம்) மற்றும் வடமேல் (புத்தளம் மாவட்டம்) ஆகிய மாகாணங்களை மையமாகக் கொண்டதாக நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- பெருந்தோட்ட ஊழியப்படையின் உற்பத்தித்திறனை உயர்த்தும் நோக்கத்துடன், வெளிக்கள ஓய்வறைகளை நிர்மாணித்தல், கழிவறை வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் பிரஜாசக்தி நிலையங்களைப் புனரமைத்தல் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக ரூபா 3,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.
- சிறு தேயிலைத் தோட்டங்களில் மீண்டும் தேயிலை பயிரிடுவதற்கும் தரிசு நிலங்களில் செடிகள் நடுவதற்கும் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு மானியம் வழங்குவதற்காக 2027ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் ரூபா 820 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.
- தேயிலைப் பயிர்ச் செய்கையில் உரமிடுவதைத் தொடர்ந்து செயற்படுத்துவதற்காக, சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் பெறும் ஒவ்வொரு உரப் பைக்கும் ரூபா 4,000 மானியம் வழங்குவதற்காக, ரூபா 5,000 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.
- இறப்பர் செய்கையாளர்களை ஊக்குவிக்கவும், புதிய மற்றும் மீள்நடுகை செய்வதற்கு மானியங்கள் வழங்குவதற்கும், பாரம்பரியமற்ற பகுதிகளில் இறப்பர் பயிர்ச் செய்கையைப் பிரபலப்படுத்தவும் ரூபா 650 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- இறப்பர் தோட்டங்களில் உரப் பாவனையை தொடர்ந்து மேற்கொள்வதற்காக, ஒரு உரப் பைக்கு ரூபா 4,000 மானித்தை வழங்குவதற்கு, ரூபா 1,000 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.
- தோட்டத் தொழிலாளர்களுக்கு கடந்த வருடம் வழங்கப்பட்ட நாளொன்றுக்கான ரூபா 200 ஊக்குவிப்புக் கொடுப்பனவை, 2027 ஆம் ஆண்டிலும் வழங்குவதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.
- பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளுடனான குத்தகை ஒப்பந்தங்கள் 2045 ஆம் ஆண்டில் காலாவதியாவதற்கு உள்ளன. அந்தக் குத்தகை ஒப்பந்தங்களை மீளாய்வு செய்து, தோட்ட உரிமையாளர்களினதும் ஊழியர்களினதும் உரிமைகள்

பாதுகாக்கப்படும் வகையிலும் அந்தத் தோட்டங்களின் விளைவுப்பெருக்கத்தை பகுப்பாய்வு செய்து, அந்த ஒப்பந்தங்களை மீளாய்வு செய்வதற்கு அமைச்சரவையினால், உத்தியோகத்தர் குழுவொன்றை நியமித்துள்ளது.

19. விளையாட்டுத் துறை

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான வெற்றிகளை ஈட்டிக்கொள்வதற்காக வீர வீராங்கனைகளின் பயிற்சிக்காகவும், ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்காகவும் பொது மக்கள் மத்தியில் விளையாட்டு கலாச்சாரத்தை கட்டியெழுப்பத் தேவையான பொது உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் திறன்களைக் கொண்ட நடுவர்கள் மற்றும் பயிற்சியாளர்களை உள்ளடக்கிய மனிதவளங்களை கட்டியெழுப்புவது தொடர்பில் நாம் கவனம் செலுத்துகின்றோம்.

- வீர வீராங்கனைகளின் திறமைகளை சர்வதேச மட்டத்திற்கு உயர்த்துவதற்காக, விளையாட்டு விஞ்ஞான முறைகள், உடற் தகைமைப் பயிற்சி, போசாக்கு ஆலோசனைகள், விளையாட்டு மருத்துவ சேவைகள் மற்றும் உளவியல் ரீதியாகத் தயார்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல் என்பவற்றின் பொருட்டு தேசிய உயர் செயலாற்றுகை நிலையமொன்று தாபிக்கப்படும். இதன் முதற்கட்டம் டொரின்டன் விளையாட்டரங்கை சார்ந்ததாக ஆரம்பிக்கப்படும் என்பதுடன், இரண்டாம் கட்டம் தியகம விளையாட்டுத் தொகுதிக்குள் நிறுவப்படும். இவற்றிற்காக ரூபா 300 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- சுகததாஸ தேசிய உள்ளக விளையாட்டுத் தொகுதியை அபிவிருத்தி செய்தல் மற்றும் நவீனமயமாக்கல், தேவையான விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் சுகததாச சர்வதேச விளையாட்டு மைதானத்தின் செயற்கை ஓடுபாதையை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,500 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- பாடசாலை மாணவர்களின் மற்றும் இளைஞர் சமூகத்தின் விளையாட்டுத் திறன்களை மேம்படுத்துவதற்கும்,

வயதுவந்தோர் தலைமுறையினரை விளையாட்டுத் துறைகளை நோக்கி ஈர்க்கும் நோக்கத்துடன் விளையாட்டு கலாச்சாரமொன்றை நிறுவுவதற்காக ரூபா 2,500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- வட மத்திய, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு சர்வதேச மட்டத்திலான விளையாட்டு வசதிகளின் பிரவேசத்தை அதிகரிப்பதற்காக அனுராதபுரம் விளையாட்டுத் தொகுதியில் 400 மீட்டர் செயற்கை ஓடுபாதை உள்ளிட்ட நிர்மாணப் பணிகளுக்காக தற்போது ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 50 மில்லியனை ரூ. 1,000 மில்லியன் வரை அதிகரிப்பதற்கு முன்மொழியப்படுகின்றது.
- தேசிய மட்டத்தில் உயர் விளையாட்டுத் திறன்களை வெளிப்படுத்தும் பாடசாலை மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக தனியார் மற்றும் அரச பல்கலைக்கழகங்களுக்கான பிரவேசங்களை அதிகரிப்பதற்கும் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கும் அரச மற்றும் தனியார் துறை ஊக்குவித்தல்கள் மேற்கொள்ளப்படும்.
- சர்வதேச போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்றெடுப்பவர்களுக்காக பாராட்டுப் பரிசுக் கொடுப்பனவுகளாக ஒலிம்பிக் தங்கப் பதக்கத்திற்காக ரூபா 100 மில்லியனும், உலக மென்வல்லுநர் மட்டத்தில் தங்கப் பதக்கத்திற்காக ரூபா 100 மில்லியனும், பொதுநலவாயப் போட்டிகளில் தங்கப் பதக்கத்திற்காக ரூபா 75 மில்லியனும், ஆசியத் தங்கப் பதக்கத்திற்காக ரூபா 50 மில்லியனும், சார்க் (SAARC) தங்கப் பதக்கத்திற்காக ரூபா 15 மில்லியனும் வீதம் வழங்குவதற்கு முன்மொழிகின்றேன். அதற்கு அமைவான முறையில் அத்தொடர்களில் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள் மற்றும் ஏனைய சர்வதேச போட்டிகளுக்காகவும் பாராட்டுப் பரிசுக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கும் முன்மொழிகின்றேன்.
- இளைஞர் யுவதிகளை அரசியல் மற்றும் சமூகத் தலைமைத்துவத்திற்காகப் பயிற்றுவிப்பதற்கும் பிராந்திய

மற்றும் தேசிய மட்டத்திலான தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளுடன் இணைத்துக்கொள்வதையும் நோக்கமாகக் கொண்டு, இளைஞர் அரசியல் தலைமைத்துவ கல்வி நிலையமொன்றை ரூபா 208 மில்லியன் மதிப்பீட்டுச் செலவில் தாபிப்பதற்காக 2027 ஆம் ஆண்டுக்காக ரூபா 77.5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இளைஞர் மத்தியில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்காகவும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காக ரூபா 45 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த யோசனைகளும் உள்ளடங்கலாக 2027 ஆம் ஆண்டுக்கு இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அபிவிருத்திப் பணிகளுக்காக ரூபா 8,500 மில்லியன் முதலீடு ஒதுக்கப்பட்டுள்ளது.

20. சமூகப் பாதுகாப்பு மற்றும் வலுவூட்டல்

சமூக அபிவிருத்தி மற்றும் சமூகப் பாதுகாப்புத் தொடர்பில் இலங்கை அடைந்துகொண்டுள்ள வெற்றிகள் பெரும்பாலான அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் உயர் மட்டத்தில் காணப்படுகின்றன. எனினும், வீட்டு சனத்தொகை கட்டமைப்பிலும் சமூக நடத்தையிலும் ஏற்படும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் காரணமாக நாட்டில் புதிய சவால்கள் பல தோற்றம் பெற்றுவருகின்றன. விசேடமாக, வீட்டு அங்கத்தவர்களின் எண்ணிக்கை குறைவடைதல், வயதானோர் சனத்தொகை அதிகரிப்பது மற்றும் பெண் தொழிற்படைப் பங்களிப்பு குறைந்த மட்டத்தில் காணப்படுதல் என்பன அவற்றுள் பிரதானமானவையாகும்.

- பொருளாதார இடர்களை குறைப்பதற்காக, வறுமை மற்றும் தீவிர வறுமை வகுப்பினருக்கு 'அஸ்வெசும' நன்மைகளைத் தொடர்ந்து வழங்கி அவர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக 2027 ஆம் ஆண்டிற்கு அஸ்வெசும உள்ளிட்ட சமூகப் பாதுகாப்புக் கொடுப்பனவுகளுக்காக ரூபா 230 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சிறுநீரக நோயாளிகளுக்காக வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவு ரூபா 10,000 இலிருந்து ரூபா 12,500 வரை ரூபா 2,500 இனால் அதிகரிக்கப்படுகின்றது.
- வலதுகுறைந்த நபர்களுக்காக வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவு ரூபா 10,000 இலிருந்து ரூபா 12,500 வரை ரூபா 2,500 இனால் அதிகரிக்கப்படுகின்றது.
- வறுமையை ஒழிப்பதற்கு அடிப்படைக் கவனம் செலுத்தப்பட்டு, பிரஜா சக்தி தேசிய இயக்கத்தின் கீழ், ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை நாடு முழுவதும் செயற்படுத்துவதற்கு ரூபா 25,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் உலக வங்கியினாலும் நிதி உதவி வழங்கப்படுகின்ற கருத்திட்டங்களின் உதவியுடன் வலுவூட்டும் முன்னோடிக் கருத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், அதேவேளை, சாத்திமான தகைமையுடைய குடும்பங்களைக் கிரமமாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 4,500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இடர்களுக்கு அகப்பட்ட பிள்ளைகளின் பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி மற்றும் உள நலத்தை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு குடும்பத்தை மையமாகக் கொண்ட அணுகுமுறையின் ஊடாக பிள்ளைகளின் பரிபூரண ஆளுமை விருத்திக்காக ரூபா 182 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இடர்களுக்கும் அனர்த்தங்களுக்கும் முகங்கொடுத்த பெற்றோரை இழந்த பிள்ளைகளை மையமாகக் கொண்ட மாற்றுப் பாதுகாப்பு கட்டமைப்பொன்றை நிறுவும் பொருட்டு ரூபா 102 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- வலது குறைந்தோருக்காக ஒவ்வொரு அமைச்சிலும், திணைக்களத்திலும் மற்றும் பிரதான அரச நிறுவனங்களிலும் வலதுகுறைந்தோரை வசதிக்குட்படுத்தும் நிலையமொன்று (Disability Inclusion Focal Point) தாபிக்கப்படும்.

- வலதுகுறைந்தோரின் அன்றாட வாழ்க்கையை எளிதாக்குவதற்குத் தேவையான தொழில்நுட்ப உபகரணங்கள், மருத்துவ அல்லது ஏனைய வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் இருக்கும் ஆட்களுக்கு அவ்வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 150 மில்லியன் நிதி வலதுகுறைந்தோர்களுக்கான செயலகத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஜனாதிபதி நிதியம் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புடன் மேலும் விரிவாக செயற்படுத்துவதற்கு நான் முன்மொழிகிறேன்.
- பிரவேசிக்கக் கூடிய டிஜிட்டல் அரச சேவைகளை தாபிப்பதற்காக அதாவது அனைத்து அரச டிஜிட்டல் சேவைகளும் W3C அணுகல் விவரக் குறிப்புகளுக்கு அமைவாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வது கட்டாயமாக்கப்படுகின்றது.
- உச்ச நீதிமன்ற உத்தரவை நடைமுறையில் செயல்படுத்தும் பொருட்டு, நாட்டில் உள்ள முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் நடமாடும் தேவைகளைக் கருத்தில் கொண்டு, அரசாங்க நிறுவனங்களில் பௌதீக அணுகலை உறுதி செய்வதற்காக, Clean Sri Lanka திட்டத்தின் மூலம் ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகிறேன். மேலும், தேவை கோரும் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் நிதி ஒதுக்கீடுகளைச் செய்வதை அத்தாச்சிப்படுத்துகின்றேன்.
- தேசிய முதியோர் செயலகத்தின் கீழ் செயற்படும் 'பன்னல வெல்கம் வில்லேஜ்' முதியோர் இல்லத்தை, முன்மாதிரி முதியோர் பாதுகாப்பு நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 100 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.
- 'ரிதியகம கலன ரந்தவும்' இல்லத்தில் வீடற்ற, யாசகர்களுக்காக புதிய நான்கு விடுதிகளும் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முறைமையொன்றையும் நிர்மாணிப்பதற்காக ரூபா 75 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.
- வலதுகுறைந்த பிள்ளைகளுக்காக பகல் பராமரிப்பு நிலையங்கள் நிர்மாணிக்கப்படும் என்பதுடன், வலது குறைந்த

பிள்ளைகளுக்காக போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு ரூபா 200 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

- அரச சார்பற்ற நிறுவனங்களால் நடாத்தித்செல்லப்படுகின்ற வலது குறைந்த நபர்களைப் பராமரிக்கும் நிலையங்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரச அனுசரணை வழங்குவதற்காக ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.
- உயர் கொள்ளளவைக் கொண்ட சிறுவர் இல்லங்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள்

- வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களினதும் அவர்களுடைய பிள்ளைகளினதும் அறிவை மற்றும் திறன்களையும், அதேபோன்று தாய்நாட்டுடன் காணப்படுகின்ற பிணைப்புகளையும், நாட்டின் எதிர்கால அபிவிருத்திப் பயணத்தில் ஒருங்கிணைக்க நாம் ஒரு புதிய அணுகுமுறையைக் கையாள வேண்டியுள்ளது. அதன் பிரகாரம், இலங்கை புலம்பெயர் சமூகத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் தலைமுறையினருக்காக "உலகளாவிய இலங்கை வாரிசுப் பிரசை" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு நாங்கள் முன்மொழிகிறோம். அதன்படி, இரட்டைக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரரின் வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் மூன்றாம் தலைமுறைப் பிள்ளைகளுக்கு எவ்விதக் கட்டணமுமின்றி இரட்டைக் குடியுரிமை வழங்க நாங்கள் முன்மொழிகின்றோம்.
- வெளிநாட்டுத் தொழிலாளர்களின் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ரூபா 50 இலட்சம் வரையான உயர் சலுகை வீட்டுட்டுக் கடன் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், ரூபா 30 இலட்சம் வரை 10% வட்டிச் சலுகையும் எஞ்சிய ரூபா 20 இலட்சத்திற்கு 5% வட்டிச் சலுகையையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

முதல் ரூபா 30 இலட்சத்திற்காக 6% பங்களிப்பை அரசாங்கம் மூலம் வழங்கப்படுவதற்கும், 4% பங்களிப்பை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மூலம் வழங்கப்படுவதற்கும், எஞ்சிய ரூபா 20 இலட்சத்திற்காக 3% பங்களிப்பை அரசாங்கத்தினால் வழங்குவதும், 2% பங்களிப்பை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் வழங்குவதற்கும் முன்மொழிகின்றேன்.

இந்த வட்டிச் சலுகை நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக 2027 ஆம் ஆண்டிற்கு அரசாங்கத்தின் பங்களிப்பாக ரூபா 1,000 மில்லியன் தொகையை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

21. அனர்த்த முகாமைத்துவம்

- ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையின் (JICA) நன்கொடையாகக் கிடைத்த, உயர் துல்லியமான வானிலை எதிர்வுகூறல்களுக்காக நவீன டொப்ளர் ரேடார் (Doppler Radar) முறைமையை நிறுவும் பணிகள் 2027 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும்.
- அனர்த்த நிலைமைகளின்போது பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகப் பாதுகாப்பு நிலையங்களை புனரமைப்பதற்கு ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- முன்னெச்சரிக்கையை பலப்படுத்துவதற்கு அவசியமான அனர்த்த எதிர்வினை உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- நாடு முழுவதும் செயற்படும் டிஜிட்டல் வானொலித் தொடர்பாடல் முறைமையொன்றை தாபிப்பதற்காக ரூபா 670 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- தற்பொழுதுள்ள 77 கரையோரம்சார்ந்த முன்னெச்சரிக்கை கோபுரங்களைப் புனரமைத்தல் மற்றும் 25 மாவட்டங்களில் வெள்ளம், மண்சரிவு மற்றும் சுனாமி அபாயங்களுடன் கூடிய

பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் 120 புதிய தரைக் கோபுரங்கள் அமைத்தல் மற்றும் பல்நோக்கு அனர்த்த முன்னெச்சரிக்கை தொடர்பாடல் முறைமையொன்றை நிறுவுதல் என்பவற்றிற்காக ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட முன்மொழிவு உள்ளடங்கலாக புதிய 13 அனர்த்த முகாமைத்துவ கருத்திட்டங்களுக்கு ரூபா 2,900 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- பிரதான அணைக்கட்டு முறைமைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சட்ட பாதுகாப்பின் பொருட்டு, அணைக்கட்டுப் பாதுகாப்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

22. சுகாதார சேவை

மத்திய அரசாங்கத்தினதும் மாகாண சபைகளினதும் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அனைத்து மருத்துவ முறைமைகள் ஊடாகவும், ஒவ்வொரு குடிமகனுக்கும் தேவையான தரமான சுகாதாரச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் பொதுச் சுகாதாரச் சேவையைப் பேணிச் செல்வதற்கும் மேம்படுத்துவதற்கும் மூலதனச் செலவுகளுக்காக ரூபா 131 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சுகாதாரப் பணியாளர்கள் நீண்ட காலமாக ஆளணிக்கு ஆட்சேர்ப்புக் செய்யப்படாததன் காரணமாக பெருமளவு வெற்றிடங்கள் காணப்பட்டன. சுகாதாரச் சேவையைத் தரமான முறையில் வழங்குவதற்குத் தேவையான மனித வளங்களாக காணப்படுகின்ற 1,797 மருத்துவர்கள், 303 சுதேச மருத்துவர்கள், 64 பல் மருத்துவர்கள், 3,441 தாதியர்கள், 952 குடும்பச் சுகாதாரச் சேவகர்கள் மற்றும் பல்வேறு பிரிவுகளுக்குமான 3,415 உதவிப் பணியாளர்கள் என்றவாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.
- சனத்தொகையின் 5,000 - 10,000 இற்கும் இடைப்பட்டோருக்கு சமீபமான, நோயாளர்களை மையமாகக் கொண்ட சுகாதாரச் சேவைகளை வழங்கும் குறிக்கோளுடன் 39 "ஆரோக்கிய நல

நிலையம்" முன்னோடிக் கருத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுவதுன், 2027 – 2029 காலப்பகுதியில் மாகாண சபைகளுடன் இணைந்து ரூபா 17,440 மில்லியன் முதலீட்டில், 1,000 நிலையங்களை அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காக 2027 ஆம் ஆண்டுக்காக ரூ. 3,600 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- அப்பிரதேசங்களின் மக்களின் கோரிக்கைகள் மற்றும் தேசிய வைத்தியசாலை மட்டத்திலான உகந்த சேவையைப் பெற்றுக்கொடுப்பதற்காக 20 மாவட்டப் பொது வைத்தியசாலைகளுள் மாகாண சபைகள் ஊடாக நிர்வகிக்கப்படுகின்ற மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, கம்பஹா மற்றும் அவிசாவலை ஆகிய மாவட்டப் பொது வைத்தியசாலைகளை மத்திய அரசாங்கத்திற்கு உள்வாங்குவதற்கு முன்மொழியப்படுகின்றது.
- தம்புத்தேகம தள வைத்தியசாலைக்கு நவீன வசதிகளுடன் கூடிய அவசர விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவை நிர்மாணிப்பதற்கு ரூபா 300 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.
- அனைத்து வைத்தியசாலைகளிலும் நோய்களை கண்டறியும் மற்றும் சிகிச்சைச் சேவைகளை உயர்த்துவதற்குத் தேவையான MRI, CT, Cath Lab உள்ளிட்ட முறையான ஆய்வின் மூலம் அடையாளம் காணப்பட்ட உயர் மட்டத்திலான உயிர் மருத்துவ உபகரணங்களின் தேவையை 03 ஆண்டுகளுக்குள் முழுமையாகப் பூர்த்தி செய்வதற்காக ரூபா 65,587 மில்லியன் நிதி ஏற்பாடு தேவைப்படுகின்றது. இதற்காக 2027 ஆம் ஆண்டிற்கு, ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 15,500 மில்லியன் ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக ரூபா 5,000 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.
- சுகாதாரச் சேவையில் 20 ஆண்டுகளுக்கு மேல் பழமையான 400 அம்பியுலன்ஸ் வண்டிகள் காணப்படுகின்றதுடன், இதில் 50% அம்பியுலன்ஸ் வண்டிகள் 25 ஆண்டுகளுக்கு மேல் பழமையானதாகும். தரமானதும் மற்றும் வினைத்திறன்

மிக்கதுமான சேவையொன்று மக்களுக்கு வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் பழைய அம்பியுலன்ஸ் வண்டிகளுக்குப் பதிலாக புதிய அம்பியுலன்ஸ் வண்டிகளை உள்வாங்குவதற்கு 2027 ஆம் ஆண்டிற்கு ரூபா 3,000 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன். இதற்கு மேலதிகமாக, ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியுடன் 25 அம்பியுலன்ஸ் வண்டிகளும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒருங்கிணைப்புடன் ஜப்பானிடமிருந்து நன்கொடையாக 20 புதிய அம்பியுலன்ஸ் வண்டிகளும் அடுத்த வருடம் இணைத்துக்கொள்ளப்படும்.

- 319 அம்பியுலன்ஸ் வண்டிகள் கொண்ட 1990 சுவசேரிய சேவையை விஸ்தரிப்பதற்காக ரூபா 1,725 மில்லியன் இந்திய உதவியின் கீழ் 100 புதிய அம்பியுலன்ஸ் வண்டிகள் 2027 ஆம் ஆண்டில் இணைத்துக்கொள்ளப்படும்.
- ரூபா 3,155 மில்லியன் செலவைக் கொண்ட கல்ஈரல் உள்ளிட்ட உறுப்பு மாற்று சிகிச்சை நிலையமொன்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் நிதிப் பங்களிப்புடன் நிறுவப்படும். இதற்கான ஆரம்பப் பணிகள் சார்பில் 2027 ஆம் ஆண்டில் ரூபா 50 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- டெங்கு தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக உலக நுளம்பு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் (World Mosquito Program (WMP)) தொழில்நுட்ப மற்றும் அரசாங்கத்தின் இணைநிதிப் பங்களிப்புடன் உயிரியல் அறிவியல் ரீதியான வொல்பெக்கியா (Wolbachia) டெங்கு காவிகளை ஒழிக்கும் முறையை நாட்டில் பரவலாக நடைமுறைப்படுத்துவதற்கு ரூ. 400 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- கண்பார்வைக் குறைபாடு காரணமாகக் கல்விக்கு ஏற்படும் தடைகளை மட்டுப்படுத்தும் வகையில் பாடசாலை மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்குவதற்கு ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.

- இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைச் சுகாதார பராமரிப்புச் சேவைகளை வழங்கும் வைத்தியசாலைகள் சார்ந்த்தாக தற்சமயம் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு மேலதிகமாக பதுளை மற்றும் மட்டக்களப்பு ஆகிய போதனா வைத்தியசாலைகள், மாத்தளை, நாவலப்பிட்டி ஆகிய மாவட்டப் பொது வைத்தியசாலைகள் மற்றும் புத்தளம் தள வைத்திசாலை ஆகியவற்றில் உத்தியோகபூர்வ விடுதிகள் உள்ளிட்ட புதிய பல கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்காக ரூபா 1,245 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மாத்தறை மாவட்டப் பொது வைத்தியசாலையை, கம்புருகமுவ கொட்டவில பிரதேசத்தில் மீள்நிறுவுதல், குருநாகல், களுபோவில மற்றும் குளியாப்பிட்டி போதனா வைத்தியசாலைகள், திருகோணமலைச் சித்த மருத்துவப் போதனா வைத்தியசாலை, மொனராகலை மற்றும் பொலன்னறுவை மாவட்டப் பொது வைத்தியசாலை, தேசிய தொற்று நோயியல் நிறுவனம், கம்பளை தள வைத்தியசாலை உள்ளிட்ட மருத்துவமனைகளில் அடையாளம் காணப்பட்டுள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கும் வைத்தியசாலை பணியாளர்களுக்காகத் தங்குமிட வசதிகளை ஏற்படுத்துவதற்கும் தேவையானவாறு வலைய மருந்துக் களஞ்சியங்களை தாபிப்பதுடன் தொடர்புடைய சாத்தியவள ஆய்வுகள் மற்றும் ஆரம்பத் திட்டங்களை 2027 ஆம் ஆண்டில் தயாரிக்கும் பொருட்டு ரூபா 510 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- ரோபோ தொழில்நுட்பம் சார்ந்த சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கு (Robotic Surgery) மருத்துவர்களைப் பயிற்றுவிப்பதற்காக ராகம மருத்துவ பீடத்திற்குள் நிலையமொன்றை தாபிக்கப்படுவதற்கு முன்மொழிகின்றேன். இந் நிலையத்தின் பணிகளுக்காக வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பயிற்சிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காக ரூபா 250 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

- 2030 ஆம் ஆண்டாகும் போது இந் நாட்டிலிருந்து விசர்நாய்க்கடி நோயை முற்றாக ஒழிக்கும் பொருட்டு, நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றுதல் மற்றும் நாய்களுக்கான கருத்தடைத் திட்டங்களை வினைத்திறனாக்குதல் என்பவற்றினூடாக "2030 இல் விசர் நாய்க்கடியற்ற இலங்கை" என்ற நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் கீழ் செயல்படுத்தப்படும் விசர்நாய்க்கடி நோய் ஒழிப்புத் திட்டத்தை, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியுடனும், உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளையும் பெற்றும், ஒருங்கிணைந்த வேலைத்திட்டமொன்றாக செயற்படுத்துவதற்கு முன்மொழியப்படுகின்றது. இது தொடர்பாகப் பணியாற்றி வரும் நிறுவனங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளை முறையாக ஒருங்கிணைத்து இதனை செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

23. சுற்றுலாத்துறை

இலங்கையின் சுற்றுலாத் தலங்களின் கவர்ச்சியானது, பன்முகத்தன்மை கொண்டதாக இருக்கின்றமை, இந்நாட்டின் சுற்றுலாத் துறையின் மிக முக்கியமான மற்றும் வலிமையான ஆற்றலாகும். சுற்றுலா என்பது நாட்டின் பொருளாதாரத்தை இயக்கி, அந்நியச் செலாவணியை ஈட்டி, வேலைவாய்ப்புகளை உருவாக்கும் ஒரு முக்கியத் துறையாகும். இவ்வாண்டு செப்தம்பர் மாதமாகும் போது சுற்றுலாப் பயணிகளின் வருகையால் ஈட்டப்பட்ட வருமானம் 2,245 மில்லியன் டொலராகும். எனவே, சுற்றுலாக் கைத்தொழிலின் மூலம் கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

- பசுமைமாறாத சிங்கராஜ மழைக்காட்டை மையமாகக் கொண்டு, தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில், காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களை உள்ளடக்கும் விதமாக, தெற்கு மூடுபனி முக்கோணக் (Southern Mist Triangle)

கருத்திட்டத்தின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கும், அதனை மேலும் வலுப்படுத்துவதற்கும் ரூ. 300 மில்லியன் நிதி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் நிதியிலிருந்து ஈடுபடுத்தப்படும்.

- இலங்கையின் முக்கிய சுற்றுலாத் தலங்களை உள்ளடக்கிய ஒரு மையப்படுத்தப்பட்ட ஈ-பற்றுச்சீட்டு முறையை நிறுவுவதற்காக, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் (SLTDA) வழங்கப்பட்ட ரூ. 133 மில்லியன் மூலதனப் பங்களிப்புக்கு மேலதிகமாக ரூ. 35 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.
- உலக வங்கியின் நிதியுதவியுடன், 77 மில்லியன் டொலர் செலவில், கொழும்பு கோட்டை சார்ந்ததாக சுற்றி அமைந்துள்ள வரலாற்று மற்றும் புராதனக் கட்டிடங்கள், அவற்றின் வரலாற்று விழுமியங்களைப் பாதுகாக்கும் வகையில் புனரமைக்கப்பட்டு, சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்யப்படும்.
- பொலன்னறுவையில் அமைந்துள்ள இந்திய உதவியுடனான மும்மொழிப் பாடசாலை வளாகத்தை, மும்மொழிக் கற்பித்தலை உள்ளடக்கிய ஹோட்டல் பாடசாலையாக அபிவிருத்தி செய்வதற்கும், பின்னவல ஹோட்டல் பாடசாலையை அபிவிருத்தி செய்வதற்கும் ரூ. 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.
- யாழ்ப்பாணம், மன்னார், கல்பிட்டி மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஒல்லாந்தர் கோட்டைகளின் வரலாற்றுப் பாரம்பரியத்தைப் பாதுகாத்து, பேணிப் பராமரிப்பதை உறுதி செய்வதன் மூலம், அவை அரச-தனியார் பங்குடமையின் (PPP) கீழ் சுற்றுலா அபிவிருத்தி நிலையங்களாக அபிவிருத்தி செய்யப்படும். இதற்காக, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் (SLTDA) குறைபயன்பாட்டு நிதியிலிருந்து ரூ. 240 மில்லியன் நிதியை ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
- சமுத்திர சுற்றுலாக் கைத்தொழிலை (Marine Tourism) ஊக்குவிக்கும் வகையில், சுற்றுலா சேவைகளை வழங்குவோருக்கு படகுகள் உட்பட தேவையான

உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, சலுகைக் கடன் திட்டத்திற்காக இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் (SLTPB) நிதியிலிருந்து ரூ. 500 மில்லியன் நிதியை ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- கொழும்புத் துறைமுகத்தில் உல்லாசப் பிரயாணிகள் கப்பல் சுற்றுலா (Cruise Tourism) முனையமொன்று நிறுவப்படும். இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்குச் (SLTDA) சொந்தமான நிதியிலிருந்து காலி, தங்காலை மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் சுற்றுலா பயணிகள் முனைய வசதிகளை நவீனமயப்படுத்தவும், சுற்றுலாப் பயணிகளுக்கான சேவைகளை விரிவுபடுத்தவும் ரூ. 240 மில்லியன் நிதி ஈடுபடுத்தப்படும்.
- இலங்கையை பாதுகாப்பான சுற்றுலா பயண முடிவிடமாக மேம்படுத்துவதற்காக, சுற்றுலா பொலிஸ் சேவையை மேலும் பலப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. விஷேட பயிற்சியளித்தல், பன்மொழி ஆற்றல் கொண்ட அதிகாரிகளைப் பணியில் அமர்த்துதல், முக்கிய சுற்றுலாத் தலங்களைச் சுற்றி விஷேட ரோந்துப் பிரிவுகளை நிறுவுதல் மற்றும் 24 மணி நேரமும் இயங்கும் சுற்றுலா அவசர உதவி தொலைபேசி அழைப்புச் சேவையொன்றையும், கையடக்க தொலைபேசி செயலியொன்றையும் அறிமுகம் செய்வதனூடாக சுற்றுலாப் பயணிகளுக்கு விரைவான மற்றும் வினைத்திறன்மிக்க பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்கு நாங்கள் முன்மொழிகிறோம்.

24. சுற்றாடல் முகாமைத்துவம்

நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு சூழல் சமநிலையைப் பேணுவது எமது கடமையாகும். காலநிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொண்டு, உயிர்ப் பல்வகைமையை பாதுகாத்த வண்ணம், பசுமைப் பொருளாதார அணுகுமுறையில் கவனம் செலுத்துவதன் மூலம், நாட்டின் இயற்கை வளங்களை வருங்கால சந்ததியினருக்கு பாதுகாப்பது எமது முதன்மையான பொறுப்பாகும்.

- வனவிலங்குத் துறையில் இருக்கின்ற முக்கியத்துவத்தை உணர்ந்து, நமது அரசாங்கம், அதன் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் சார்பில் வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களத்தின் சேவைகளை வலுப்படுத்தும் பொருட்டு, 313 வனவிலங்குப் பாதுகாவலர்களும் 3,451 மின்சார வேலிப் பராமரிப்பு உதவியாளர்களும் ஆட்சேர்ப்புச் செய்துள்ளனர். அத்துடன், 114 வனவிலங்கு தளக் காவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. வனவிலங்கு சேவைகளை வினைத்திறனுடன் வழங்குவதற்கு 2026 ஆம் வருடத்தில் 16 டபள் கப் வண்டிகள், 84 சிங்கள் கப் வண்டிகள், 181 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 09 டிராக்டர் வண்டிகள் உட்பட வாகனங்களும் உபகரணங்களும் களச் செயற்பாடுகளுக்காக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

- யானை-மனித மோதலை மட்டுப்படுத்தி, மனித உயிர்களையும் காட்டு யானைகளையும் பாதுகாக்கும் நோக்குடன், 2026 ஜூன் மாதத்தில் ஹந்தபானாகல, கொஹொலங்கல மற்றும் வெட்டஹிரகந்த யானை இடமாறல் இடங்கள் விடுவிக்கப்பட்டுள்ள அதேவேளையில், நாச்சாதூவ குளத்திற்கும் மகா கந்தராவ குளத்திற்கும் இடையில் அமைந்துள்ள யானை இடமாறல் இடத்தை வனவிலங்கு சரணாலயமாக பிரகடனப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- புதிதாக மின்சார வேலிகளை அமைப்பதற்கும், ஏற்கனவேயுள்ள மின்சார வேலிகளைப் புனரமைப்பதற்கும் ரூ. 250 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, வனவிலங்கு நிதியிலிருந்து ரூ. 200 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- காட்டு யானைகள் புகையிரதத்தில் மோதுவதால் ஏற்படும் விபத்துக்களைக் குறைப்பதற்காக, செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் வெப்ப உணர் கெமராக்களைப் பயன்படுத்தி முன்னோடிக் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், இந்த ஆண்டில் இவ்வாறு சம்பவிக்கும் மரணங்களின் எண்ணிக்கையை குறைத்துக்கொள்ள முடிந்துள்ளது. இதன்

பெறுபேறுகளின் அடிப்படையில், இந்தக் கருத்திட்டம் தேசிய அளவில் நடைமுறைப்படுவதற்கு என எதிர்பார்க்கப்படுகிறது.

- விலங்குகளின் சேமநலனைக் கருதி வன விலங்குகளுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவமனையொன்றை அமைப்பதற்கு, அனுராதபுர மாவட்டத்தின் நுவரகம் சரணாலயத்தில் 03 ஏக்கர் பரப்பளவு காணி அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனையை நிறுவுவதற்காக வனவிலங்கு நிதியிலிருந்து ரூ. 700 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
- அனைத்துப் பிரதேசங்களிலும் வழிதவறும் யானைக் குட்டிகள் தற்சமயம் உடவளவையில் அமைந்துள்ள அத் அத்துறு செவன யானைகள் சரணாலயத்தில் புனர்வாழ்வளிக்கப்பட்டு வருவதுடன், அவற்றை மிக நீண்ட தூரம் கொண்டு செல்ல வேண்டியிருப்பதால் அவற்றின் உயிருக்கு அச்சுருத்தல் ஏற்பட்டக்கூடியதாக காணப்படுகின்றது. எனவே, பொலன்னறுவை மாவட்டத்தில் 15 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய அத் அத்துறு செவன யானைகள் சரணாலயமொன்றை அமைக்கும் பொருட்டு மதிப்பீடு செய்யப்பட்ட ரூ. 5,000 மில்லியன் நிதி ஏற்பாட்டை கட்டம் கட்டமாக வனவிலங்கு நிதியத்திலிருந்து வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
- விபத்துக்கு உள்ளாகின்ற கடல் ஆமைகள் மற்றும் டொல்பின்கள் போன்ற கடல்வாழ் உயிரினங்களுக்கு சிகிச்சையளித்து புனர்வாழ்வளிப்பதற்கான நிலையம் ஒன்றை தொடன்தூவ பகுதியில் உள்ள 02 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கும் ஆரம்ப நடவடிக்கைகளுக்காக, ரூ. 50 மில்லியன் வனவிலங்கு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் உயிர்வாழ் உரிமையொன்றாக விளங்கும் காட்டு யானைகள் வளத்தைப் பாதுகாப்பதற்கும், ஏற்படும் தொந்தரவுகளைத் தடுப்பதற்கும், இது சம்பந்தமான சட்டக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- யானை-மனித மோதலின் காரணமாக வீடொன்றிற்கு ஏற்படும் சேதம் சார்பில் செலுத்தப்படுகின்ற இழப்பீட்டுத் தொகையை ரூ. 2 இலட்சத்திலிருந்து ரூபா 1 மில்லியன் வரையும், காட்டு

யானைகள் உட்பட பாதுகாக்கப்பட்ட விலங்குகளின் தாக்குதலின் காரணமாக உயிரிழக்கும் அல்லது முழுமையாக ஊனமுறும் ஒருவருக்கு செலுத்தப்படுகின்ற இழப்பீட்டுத் தொகையை ரூ. 1 மில்லியனிலிருந்து ரூ. 2 மில்லியன் வரையும், பகுதியளவு ஊனமுறும் ஒருவருக்கு செலுத்தப்படுகின்ற இழப்பீட்டுத் தொகையை ரூ. 150,000 இலிருந்து ரூபா 5 இலட்சம் வரையும், வீடு அல்லாத ஏனைய சொத்துக்களுக்கு செலுத்தப்படுகின்ற இழப்பீட்டுத் தொகையை ரூபா 2 இலட்சத்திலிருந்து ரூபா 5 இலட்சம் வரையும் அதிகரிப்பதற்கு முன்மொழியப்படுகின்றது.

- தாவர வனவிலங்கு பாதுகாப்பு கட்டளைச் சட்டம் திருத்தப்பட்டு, தற்போது காணப்படுகின்ற சிறைத் தண்டனைக்கு மேலதிகமாக, காட்டு யானையைக் கொல்வது, வேட்டையாடுவது, சுடுவது, காயப்படுத்துவது அல்லது பிடிப்பதற்கான ரூ. 150,000 முதல் ரூபா 5 இலட்சம் வரையான அபராதத் தொகையை ரூபா 5 இலட்சத்திலிருந்து ரூபா 10 இலட்சம் வரை அதிகரிப்பதற்கு முன்மொழியப்படுகின்றது. சட்டவிரோதமாக யானையை வைத்திருப்பதற்கான அபராதத்தை, தற்போதுள்ள ரூ. 150,000 இலிருந்து ரூ. 250,000 வரையான அபராதத் தொகையை ரூபா 5 இலட்சத்திலிருந்து ரூபா 10 இலட்சம் வரை அதிகரிப்பதற்கு 2005 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க அபராதங்கள் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.

- வனவிலங்கு சரணாலயங்களில் உள்ள குளங்கள் வறண்டு போவதன் மூலம் விலங்குகளுக்குத் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும். இந்த நிலைமைகளை எதிர்க்கொள்வதற்காக தற்போது புனரமைக்கப்பட வேண்டும் என வனவிலங்குத் திணைக்களத்தினால் அடையாளம் காணப்பட்டுள்ள குளங்களை 2027 ஆம் ஆண்டில் புனரமைப்புச் செய்வதற்காக வனவிலங்குப் பாதுகாப்பு நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்படும். அதேபோன்று, இதற்கு மேலதிகமாக ரூ. 90 மில்லியன் நிதி 2027 வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படும்.

- மேற்படி ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, எதிர்வரும் காலங்களில் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற எல்நினோ அனர்த்தத்தினால் எழக்கூடிய நிலைமைகளுக்கு முகங்கொடுக்க

ஏதுவாக முன்ஆயத்தமாக ரூ. 5,000 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.

- கடலோரச் சூழலைப் பாதுகாக்கும் பொருட்டு, எண்ணெய் கசிவுகளால் ஏற்படும் கடல் மற்றும் கடலோர மாசடைவிற்கு துரிதமாகப் பதிலளிக்கும் திறனை வலுப்படுத்துவதற்கு, ஜப்பானிய ஒத்துழைப்பின் கீழ் ரூ. 3,380 மில்லியன் பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்களைப் பெற்றுக்கொள்வதற்கான நிதி ஏற்பாடுகள் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளன.
- கிழக்குக் கரையோரத்தின் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை, புத்தளம் மாவட்டத்தின் கருக்கபனே பகுதியில் கடலோரப் பாதுகாப்பு மற்றும் சூழல் காற்றின் தரத்தைக் கண்காணிக்கும் வலையமைப்பை நிறுவுதல் உட்பட 10 புதிய நிலைபேறான சூழல் முகாமைத்துவக் கருத்திட்டங்களுக்காக ரூ. 800 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- கடுமையான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள மத்திய மலைநாட்டின் பாதுகாப்பு என்பது நமது தேசத்தின் எதிர்காலப் பாதுகாப்பாகும். அந்த நோக்கத்திற்காக, ஓர் ஒருங்கிணைந்த நீரேந்து முகாமைத்துவ அணுகுமுறையை தாபித்தல் மற்றும் மீளமைப்பு நடவடிக்கைகளுக்காக மேல் நீரேந்து பிரதேச முகாமைத்துவ அதிகாரசபை என்ற நிறுவனத்தை நிறுவுவதற்கு நான் முன்மொழிகிறேன். இதற்கான சட்டத்தை மிக விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்படுகின்ற பணிகளுக்காக 100 மில்லியன் டொலர் கடனுதவியைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

25. போக்குவரத்து

வினைத்திறன்மிக்க, வசதியான பொதுப் போக்குவரத்து சேவைகளை உறுதிசெய்வதற்காக, போக்குவரத்துத் துறையில் புதிய யுகம் ஒன்றை ஆரம்பிப்பது எமது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். அதன் பிரகாரம், புகையிரதம் மற்றும் பயணிகள் பேருந்து சேவைகளை நவீனமயப்படுத்துதல், போக்குவரத்து

வலையங்களுக்கிடையில் இணைப்பை வலுப்படுத்துதல் மற்றும் நிலைபேறான பொதுப் போக்குவரத்தை ஊக்குவித்தல் ஆகியவற்றுக்காக சாதனையாக ரூ. 95,000 மில்லியன் செலவிடப்படுகிறது.

- இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட, கொழும்பை மையமாகக் கொண்ட மெட்ரோ பேருந்து சேவையை, கண்டி, காலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
- மெட்ரோ பேருந்து சேவைக்கு இது வரையிலும் அரசாங்கம் முதலீடு செய்துள்ளது. ஏற்கனவே 120 இற்கும் மேற்பட்ட பேருந்துகள் இயக்கத்தில் உள்ளன. 2027 ஆம் ஆண்டில் மேலும் 50 பேருந்துகள் இந்த நிறுவனத்துடன் இணைக்கப்படவுள்ளன. இதற்கு மேலதிகமாக, மின்சாரத்தில் இயங்கும் பேருந்துகளை அறிமுகப்படுத்தவும் நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இதற்காக, சீன அரசாங்கத்திடமிருந்து 100 பேருந்துகள் நன்கொடையாக் கிடைக்கவுள்ளன. இந்தப் பேருந்துகளுக்கான டிப்போக்களை நிர்மாணித்தல், மின்னேற்றும் வசதிகளை வழங்குதல், பயிற்சியளித்தல் போன்ற பணிகளை அடுத்த ஆண்டு ஆரம்பிப்போம். இதற்காக ரூ 4,500 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மெட்ரோ பேருந்துகளை தனியார் துறையையும் ஈடுபடுத்துவதை ஊக்குவிப்பதற்கு, வீதி அனுமதிப்பத்திரங்களை வைத்திருப்பவர்களுக்கு தமது தற்போதுள்ள பேருந்துகளுக்குப் பதிலாக நவீன தாழ்தளப் பேருந்துகளைப் பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படும்.
- நெடுந்தூரப் பயணிகளுக்கு வசதியான மற்றும் பாதுகாப்பான சேவைகளை வழங்குவதற்காக, 600 குளிரூட்டப்பட்ட பேருந்துகளை இறக்குமதி செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- மலைநாட்டு குறுகிய வீதிகளைக் கொண்ட கிராமியப் பிரதேசங்களுக்குத் தேவையான 22 இருக்கைகளைக் கொண்ட 50 சிறிய பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு ரூ. 1,000

மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

- கிராமியப் பிரதேசங்களில் பயணிகள் சேவைக்குத் தேவையான, 33 இருக்கைகள் கொண்ட 200 சிறிய பேருந்துகளை கொள்வனவு செய்வதற்கு ரூ. 4,000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.
- இலங்கை போக்குவரத்து சபையில் டிஜிட்டல் பரிவர்த்தனை மற்றும் ஒருங்கிணைந்த முகாமைத்துவ முறைமை அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு ரூ. 200 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மிகவும் வினைத்திறன்மிக்க சேவையை வழங்குவதற்காக, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தை வேரஹெரவில் நிறுவுவதற்கு ரூ. 600 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.
- பொது மக்களுக்கு வினைத்திறன்மிக்க மற்றும் வெளிப்படைத்தன்மையைக் கொண்ட சேவைகளை வழங்கும் நோக்கில், மோட்டார் வாகனப் பதிவு மற்றும் உரிமைமாற்றச் செயல்முறைக்கான நவீன டிஜிட்டல் முறைமையை நிறுவுவதற்கு ரூ. 700 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மோட்டார் வாகன விபத்துக்களைக் குறைப்பதற்கும், வீதிப் பாதுகாப்பை உறுதி செய்யவும், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தையும் இலங்கை பொலிஸையும் ஒருங்கிணைத்து, ஒரு புதிய டிஜிட்டல் சாரதி திறன்குறைபாடு மதிப்பீட்டு முறையையும், வீதிப் பாதுகாப்பு அமுலாக்க முறையையும் தாபிப்பதற்கு ரூ. 1,500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- புகையிரத சேவைக்காக 5 புதிய புகையிரதங்களை கொள்வனவு செய்வதற்கு ரூ. 5,000 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- நீண்ட காலமாக முறையாகப் பராமரிக்கப்படாத புகையிரத நிலையங்களைப் பழுதுபார்க்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2027

ஆம் ஆண்டிற்கு ரூ. 2,000 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- திட்வா அனர்த்தத்தினால் சேதமடைந்த மலைநாட்டு புகையிரதப் பாதையை சீரமைப்பதற்காக, புகையிரதத் திணைக்களத்தின் வளங்கள் உச்ச செயல்திறனுடன் ஈடுபடுத்தப்பட்டு, கொழும்புக்கும் பேராதனைக்கும் இடையேயான புகையிரத சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.
- இந்திய அரசாங்கத்தின் கடன் உதவித் திட்டத்தின் கீழ், ரம்புக்கனையிலிருந்து பேராதனை வரையிலான புகையிரதப் பாதை, பேராதனையிலிருந்து கம்பொல வரையிலான மலையக புகையிரதப் பாதை மற்றும் மாத்தளை புகையிரதப் பாதை ஆகியவற்றை நவீன பொறியியல் தரங்களுக்கு ஏற்ப, மிகவும் பாதுகாப்பான மற்றும் நிலையான முறையில் புனரமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கண்டி வரையான புகையிரதத்தை 2027 ஆம் ஆண்டின் முதற் காலாண்டிற்குள் இயக்கக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் பிரகாரம், மலையக புகையிரதப் பாதையை முழுமையாகப் புனரமைத்து, 2027 ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்குள் பதுளை வரையிலான புகையிரத சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- இந்திய அரசாங்கத்தினால், டித்வா புயலால் சேதமடைந்த உட்கட்டமைப்புகளைப் புனரமைத்தல், வீடமைப்பு மற்றும் குடிநீர் வழங்கல் கருத்திட்டங்களைத் தயாரித்தல், மொரகஹகந்த பாலம் உட்பட 13 பாலங்களைப் புனரமைத்தல், முன்தயாரிப்புப் பாலங்களை நிர்மாணித்தல், மற்றும் சுகாதாரம், கல்வி உள்ளிட்ட துறைகளுக்கு உதவி வழங்கப்பட்டது.
- சீன அரசாங்கம், டித்வா புயலால் சேதமடைந்த பகுதிகளைச் புனரமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ், சேதமடைந்த 14 பாலங்களை மீண்டும் அமைப்பதற்கு மானியமொன்றைப் பெற்றுத்தர உடன்பட்டிருப்பதுடன், இதன்மூலம் கம்பஹா, கேகாலை, அம்பாறை, குருநாகல், பொலன்னறுவை மற்றும்

மட்டக்களப்பு மாவட்டங்களில் அமைந்துள்ள ஒன்பது பாலங்களை புனரமைப்பதற்கான நடவடிக்கை தயார் செய்யப்பட்டுள்ளன.

26. குடிநீர் வழங்கல்

மக்களுக்குத் தொடர்ச்சியாக சுத்தமான குடிநீரை தொடரந்து வழங்குதல், ஆரோக்கிய வசதிகளை விஸ்தரித்தல் மற்றும் கைத்தொழில் உட்பட பொருளாதார நடவடிக்கைகளுக்குப் போதுமான நீரை வழங்குதல் என்பவற்றிற்காக ரூ. 77,000 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், தனியார் முதலீடுகளைக் கோருவதற்கும் கவனத்தில் கொள்ளப்படும்.

- குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, நாகதீவு, வாழைச்சேனை, கோட்டே உள்ளிட்ட பகுதிகளில் 13 புதிய கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு ரூ. 5,190 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- குண்டசாலை - ஹாரகம ரூ. 34,368 மில்லியன் செலவில் அமையவிருக்கும் நீர் வழங்கல் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு 2027 ஆம் ஆண்டிற்கு ரூ. 1,800 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகிறேன்.
- எஹெலியகொட, ரூ. 4,775 மில்லியன் செலவில் அமையவிருக்கும் நீர் வழங்கல் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ரூ. 1,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகிறேன்.
- கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூனகரி மற்றும் பச்சிளைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியதாக ரூ. 41,140 மில்லியன் செலவில் பாரிய கிளிநொச்சி குடிநீர் வழங்கல் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு, ரூ. 1,800 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகிறேன்.
- பாரிய காலி நகர் நீர் வழங்கல் கருத்திட்டத்தை ரூ. 37,501 மில்லியன் செலவில் ஆரம்பிப்பதற்கு ரூ. 3,000 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ஹல்துமுல்லை - பெரகல நீர் வழங்கல் கருத்திட்டத்தை ரூ. 3,262 மில்லியன் செலவில் ஆரம்பிப்பதற்கு, ரூ. 700 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- யட்டிமஹன – மாஓயா குடிநீர் வழங்கல் கருத்திட்டத்திற்காக, ரூ. 22,158 மில்லியன் செலவில் கருத்திட்டத்தில், 2027 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு, ரூ. 300 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்களில் குடிநீர் தொடர்பில் காணப்படுகின்ற உவர்நீர் ஊடுருவல், அதிக கடினத்தன்மை (Hardness), அதிக கனிம உப்புகள் மற்றும் பாக்டீரியா கலப்படம் ஆகிய பிரச்சனைகளை படிப்படியாகத் தீர்ப்பதற்குத் தொடர்ச்சியாக நிதி ஏற்பாடுகள் செய்யப்படும். இதற்காக, இம்முறை ரூ. 1,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகிறேன்.
- தற்போதுள்ள குடிநீர் கருத்திட்டங்களின் கொள்ளளவை மேம்படுத்துதல் மற்றும் விநியோகத்தை விரிவுபடுத்துதல், அத்துடன் ஆரோக்கிய வசதிகளை அமைத்தல் உள்ளிட்ட கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு ரூ. 12,000 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- குளியாப்பிட்டி, பன்னலை, பிங்கிரியா, உடுபத்தாவ, திருகோணமலை மற்றும் கம்பளை -ஜெயமல்புர பிரதேசங்களை சார்ந்த்தாக கைத்தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்கான நீர் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான சாத்தியவள ஆய்வுகளுகளை மேற்கொள்வதற்கு ரூ. 250 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.
- நாடு முழுவதும் தற்போதுள்ள சமூக நீர் வழங்கல் திட்டங்களை மேம்படுத்துவதற்காக ரூ. 2,000 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ஆரோக்கிய வசதிகளை மேம்படுத்துவதையும் கழிவுநீரை முறையாக முகாமைசெய்வதையும் நோக்காகக் கொண்டு எல்ல, மொரட்டுவ மற்றும் ஏக்கலை கழிவுநீர் முகாமைத்துவ

கருத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ரூ. 1,740 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

27. வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி

பாதுகாப்பான இல்லமும் ஆரோக்கியமான நகர்ப்புறச் சூழலும் ஒரு தேசத்தின் முன்னேற்றத்திற்கும் மனிதவளத்தின் முன்னேற்றத்திற்கும் அடித்தளமாக விளங்குகின்றன. இதற்காக, பொருளாதார, சமூக மற்றும் பௌதீக அபிவிருத்தியை ஒருங்கிணைந்த முறையில் திட்டமிடுவதன் மூலம் இயற்கையுடன் கட்டியெழுப்பப்பட்ட சூழலைப் பாதுகாக்கும் அதேவேளையில், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது எமது எதிர்பார்ப்பாகும்.

- குறைந்த வருமானம் பெறுவோரின் வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, 'தமக்கான ஓர் இடம் - அழகான வாழ்க்கை' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 70,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ், 2027 ஆம் ஆண்டில் 10,000 புதிய வீடுகளை கட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு வீட்டிற்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ. 10 இலட்சத்திலிருந்து ரூ. 15 இலட்சம் வரை அதிகரிக்கப்படும். இதற்காக தற்போது ஒதுக்கப்பட்டுள்ள தொகையை ரூ. 15,000 மில்லியன் வரை அதிகரிப்பதற்கு முன்மொழியப்படுகின்றது.
- வட- கிழக்கில் நிலவிய மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த 13,000 குடும்பங்களை மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. அக் குடும்பங்களை 2 வருட காலப் பகுதிக்குள் மீள்குடியமர்த்தி முடிப்பதே எமது அரசின் இலக்காகும். இதற்காக ரூ. 6,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் ரூ. 4,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.
- மலையக மக்களின் வீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், இந்திய அரசின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்ட 10,000 வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் தொடர்ந்தும் துரிதப்படுத்தப்படும்.

- அபரண்சிமுல்ல, சேரக்குலிய, மங்களபுர, வவுனியாவின் கந்தசாமி மற்றும் நித்ய நகர், பீடியாபாம், பொலன்னறுவை, முல்லைத்தீவு, திஸ்ஸமகாராம, திபுலபிட்டிய, திம்புலாகல மற்றும் ஹென்னானிகல-தெற்கு போன்ற பகுதிகளில் தித்வா அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு ஆனால், தற்போதுள்ள அளவுகோல்களின் காரணமாக சொந்த வீடு கிடைக்கப்பெறாதவர்களுக்கு, வீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக ரூ.1,000 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.
- 2015 - 19 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட ரூ. 20,000, ரூ. 40,000 போன்ற சிறிய நிதியுதவிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட ஏராளமான வீடமைப்புக் கருத்திட்டங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டதனால், அந்த வீடுகளின் உரிமையாளர்களுக்குப் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது. பாதியிலேயே கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் மீதமுள்ள நிர்மாண நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்காக, தகுதிகளைப் பூர்த்தி செய்யும் பயனாளிகளுக்கு ரூ. 5 இலட்சம் வரையிலான நிதியுதவி வழங்குவதற்கு ரூ. 5,000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.
- திட்வா வீடமைப்புக் கருத்திட்டத்தின் கீழ் வீடுகளை நிர்மாணிப்பதற்காக, குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூ. 90,000 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
- நகர்ப்புறங்களில் குறைந்த வருமானம் பெறுவோர்களுக்காக 50,000 வீடுகள் தேவை எனக் கண்டறியப்பட்டுள்ளது. இவற்றில், 16,000 இற்கும் மேற்பட்ட வீடுகளின் நிர்மாணப் பணிகள் ஏற்கனவே முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருப்பதுடன், மேலும் 5,000 வீடுகளின் நிர்மாணப் பணிகள் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பகுதியளவு நிறைவடைந்துள்ள டொரிங்டன், கொலம்பகே மாவத்தை, கொலன்னாவை, பேலியகொடை, மொரட்டுவை, மகரகம மற்றும் தெமட்டகொடை வீடமைப்புக் கருத்திட்டங்கள் 2027 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படும். மீத்தொட்டமுல்லை மற்றும் குருநாகல் வில்கொட பகுதிகளில் புதிய வீடமைப்புத் தொகுதிகளின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கும் முன்மொழியப்படுகின்றது. இந்த அனைத்து

வீடமைப்புக் கருத்திட்டங்களுக்கும் ரூ. 26,820 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால், மாளிகவத்தை மற்றும் யக்கல பகுதிகளில் 2 புதிய நடுத்தர வருமான வீடமைப்புக் கருத்திட்டங்களை முன்விற்பனை முறையின் அடிப்படையில் 2027 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
- நகர அபிவிருத்திக்காக நகரத்தின் நாமம், சுற்றுலா நகர அபிவிருத்தி ஆகியவற்றின் பொருட்டு யாழ்ப்பாணம், மாத்தளை, ஹட்டன், மட்டக்களப்பு, சிலாபம், தம்புத்தேகம, வவுனியா, எஹலியகொடை, பதுளை மற்றும் மாத்தறை ஆகிய பத்து நகரங்களை முறையானதும் திட்டமிடப்பட்டதுமான நகரங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக ரூ. 2,700 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இதற்கு மேலதிகமாக, 19 நகரங்கள், அதாவது, திருகோணமலை, கந்தளாய், கல்முனை, தெஹிவளை, களுத்துறை, பாணந்துறை, மத்துகம, மஹரகம, இரத்தினபுரி, கேகாலை, பண்டாரவளை, எல்ல, காலி, அக்குரஸ்ஸ, குருநாகல், புத்தளம், நாத்தாண்டி, கிரிபத்கொடை மற்றும் நுவரெலியா ஆகிய நகரங்களின் அபிவிருத்தி பணிகளுக்கு ரூ. 65,000 மில்லியன் கருத்திட்ட மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக 2027 ஆம் ஆண்டுக்கு ரூ. 5,000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது.
- நகர்ப்புற தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள அபாயத்தைக் குறைப்பதற்காக, வடிகால் அமைப்பு முறைமைகளை வினைத்திறன் மிக்கவாறு பேணிச்செல்லல், வெள்ளப்பெருக்குச் சூழ்நிலைகளில் அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அதேபோன்று சிறிய கால்வாய்களையும் வடிகால் முறைமைகளையும் முறையாகப் பராமரித்தல் ஆகியவற்றிற்கான தேவை அதிகரித்துக் காணப்படுகின்றது. இதற்காக, ரூ. 1,250 மில்லியன் பெறுமதியான பல்நோக்கு

இயந்திரோபகரணங்களை இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதுடன், இதில் ரூ. 625 மில்லியன் நிதியை அரசாங்கத்தின் உரித்து மூலதனமாக பெற்றுக்கொடுப்பதற்கு முன்மொழியப்படுகின்றது.

- அரச துறையிலும், பகுதியளவிலான அரச துறையிலும் தனியார் துறையிலும் பணிபுரியும் குடும்பங்களினதும், தமது சொந்த வியாபாரங்களில் ஈடுபடும் குடும்பங்களினதும் வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, அரச, தனியார் துறை, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களை ஒன்றிணைத்து வீடுகளை வழங்குவதை ஊக்குவிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், அடுத்த 5 வருட காலப்பகுதியில் பிரதான நகரங்களில் 10,000 அடுக்குமாடிக் வீடமைப்பு அலகுகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

நகர வெள்ளக் கட்டுப்பாடு

- கொழும்பு நகரிலும் அதனை அண்டிய நகரங்களிலும் உள்ள பிரதான கால்வாய்கள் உரிய நேரத்திற்கு பராமரிக்கப்படாமை மற்றும் மழைநீர் வழிந்தோடுவதற்கு உள்ள கால்வாய்களின் கொள்ளளவு போதுமானதாக இல்லாமை என்பனவே இந்த வெள்ளப்பெருக்கிற்கு காரணமாக அமைந்துள்ளன. கொழும்பு மாநகர சார்ந்ததாக ஏற்கனவே வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட கொலன்னாவை மற்றும் ஒலியமுல்லை வெள்ளப் பெருக்குக் கட்டுப்பாடு கருத்திட்டங்களுக்கு மேலதிகமாக 2027 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள வத்தளை, களனி, பியகம ஆகிய பிரதேசங்களில் வெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்தும் நோக்குடன், முதுன்எல கருத்திட்டம், பிலியந்தலை மற்றும் கெஸ்பேவை மழைநீர் வடிகாலமைப்பு முறைமையை மேம்படுத்தும் கருத்திட்டம், கொழும்பு வடக்குப் பிரதேசத்தில் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்கான செபஸ்தியன் கால்வாய் புனரமைப்புக் கருத்திட்டம் மற்றும் கிருலபன கால்வாய் புனரமைப்புக் கருத்திட்டம் ஆகிய கருத்திட்டங்கள் முதன்மையானவை.

- அதேபோன்று ஹமில்டன் கால்வாயின் ஒரு பகுதியை அபிவிருத்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், கம்பஹா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலும் அதேபோன்று களுத்துறை மாவட்டத்தின் வாத்துவை மற்றும் மொல்லிகொட பிந்துனுஎல கருத்திட்டம், திக்வெல்லை, பேருவளை மற்றும் ரத்கம மழைநீர் வடிகாலமைப்பு முறைமையை மேம்படுத்தும் கருத்திட்டம் ஆகிய கருத்திட்டங்கள் 2027 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும்.
- கொழும்பு மற்றும் கொழும்பை அண்டிய நகரங்களில் இனங்காணப்பட்ட கால்வாய்களை புனரமைத்தல், பிலியந்தலை – கெஸ்பேவை கிளை வீதியை அண்டியதாக அமைந்துள்ள மழைநீர் வடிகாலமைப்பு முறைமையை மேம்படுத்தல் உள்ளிட்ட நகர வெள்ளப் பெருக்கு கட்டுப்பாடு மற்றும் சுற்றாடல் முறைமைகளை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்ட கருத்திட்டங்களின் பொருட்டு ரூ. 3,200 மில்லியன் நிதி ஒதுக்கப்படுகின்றது.
- அதேபோன்று, தற்சமயம் செயற்படுத்தப்படுகின்ற மல்வத்துஓயா கருத்திட்டத்தின் ஊடாக மன்னார் மாவட்டத்தின் வெள்ளப்பெருக்குப் பிரச்சினைக்கும் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும். மேலும், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் வெள்ளப்பெருக்குப் பிரச்சினையில் நேரடித் தாக்கத்தை செலுத்துகின்ற முந்தெனி ஆறு கருத்திட்டம் தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகளை அடுத்த வருடம் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கமைய, மழைநீர் வடிகாலமைப்பு முகாமைத்துவத்திற்காக ரூ. 7,700 மில்லியன் நிதி ஒதுக்கப்படுகின்றது.
- பேரே வாவியை நிலைபேறாக அபிவிருத்திசெய்தல் மற்றும் சுற்றுப்புற நிலப் பயன்பாடு தொடர்பில் விஞ்ஞான ரீதியான ஆய்வொன்றை மேற்கொண்டு அபிவிருத்தித் திட்டமொன்றை தயாரிப்பதற்கும், தற்சமயம் இனங்காணப்பட்டுள்ள அத்தியவசிய அபிவிருத்தி பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் ரூ. 900 மில்லியன் நிதி ஒதுக்கப்படுகின்றது.

- நகர வெள்ளப்பெருக்குக் கட்டுப்பாட்டிற்கு நிலைபேறான தீர்வொன்று தேவை என்பதை கடந்த வரவுசெலவுத் திட்டத்தின் போது நான் சுட்டிக்காட்டினேன். இதற்கு குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட கால திட்டங்களை வகுப்பதற்காக ரூ. 250 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது. இத்திட்டங்கள் தற்போது வகுக்கப்பட்டு வருகின்றன.

28. பொதுமக்கள் பாதுகாப்பு

- இலங்கை பொலிஸின் கடமைகளை டிஜிட்டல்மயப்படுத்தல், தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்தை அங்கசம்பூர்ணமாக நவீனமயப்படுத்தல், நாராஹேன்பிட்டி பொலிஸ் வைத்தியசாலை அபிவிருத்தி, அத்திடிய பொலிஸ் பயிற்சி நிறுவன அபிவிருத்தி, மிரிஹான பொலிஸ் விளையாட்டு கட்டிடத்தொகுதியை அமைத்தல், விஷேட அதிரடிப்படையின் கோனஹேன, குருநாகல், அரந்தலாவ, கேகாலை மற்றும் கிரிந்திவலை முகாம்களில் வசதிகளையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் உயர்ந்த மட்டத்திற்கு கொண்டுவருதல் என்பன சார்ப்பில் ரூ. 9,500 மில்லியன் நிதி ஒதுக்கப்படுகின்றது.
- வினைத்திறன்மிக்க சேவையை பொதுமக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், தற்சமயம் கொழும்பு நகரின் பல்வேறு இடங்களில் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடங்களில் பேணிச்செல்லப்படுகின்ற இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளையும் ஒரே கூரையின் கீழ் நிருவும் வகையில் புதிய நிர்வாக கட்டிடமொன்றை அமைப்பதற்கான சாத்தியவள ஆய்வொன்றை மேற்கொள்வதற்கும் திட்டங்களை வகுப்பதற்கும் ரூ. 200 மில்லியனை ஒதுக்குவதற்கு முன்மொழியப்படுகின்றது.
- கொழும்புக் கோட்டையில் மிகப் பழைமையான உடைந்த கட்டிடமொன்றில் பேணிச்செல்லப்படுகின்ற குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு, சைபர் குற்றங்கள் மற்றும் நிதிமோசடி தடுப்பு போன்ற தற்காலத்திற்குரியதாக மாற்றடைகின்ற குற்றச்செயல்கள் தொடர்பில் புலனாய்வுகளைச் செய்வதற்குத்

தேவையான நவீன வசதிகளுடன் கூடிய 15 மாடிகளைக் கொண்ட கட்டிடமொன்றை அமைப்பதற்கான சாத்தியவள ஆய்வொன்றை மேற்கொள்வதற்கும் திட்டங்களை வகுப்பதற்கும் ரூ. 500 மில்லியனை ஒதுக்குவதற்கு முன்மொழியப்படுகின்றது.

- 2027 ஆம் வருட ஜூன் மாதத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எமது நாட்டின் காலநிலை நிலவரங்களுக்கு ஏற்ற, நவீன தொழில்நுட்ப உபரணங்களை உள்ளடக்கிய புதிய சீருடையொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு யோசனை முன்வைக்கப்படுகின்றது.

- நச்சுப் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை, புனர்வாழ்வளித்து மீண்டும் அவர்களை சமூகமயப்படுத்துவது "முழு நாடும் ஒன்றாக" தேசிய நடவடிக்கையின் நீண்ட கால மற்றும் முக்கியமான நோக்கமாகும். இதற்காக சேனபுர மற்றும் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், ஆலோசனை மற்றும் சிகிட்சை சேவைகள் மற்றும் தொழிற்பயிற்சி வசதிகளை அங்க சம்பூரணமாக அபிவிருத்தி செய்தல் என்பவற்றிற்காக ரூ. 180 மில்லியன் நிதி ஒதுக்கப்படுகின்றது.

- குடிவரவு, குடியகழ்வு நடவடிக்கைகளை, தேசிய மற்றும் சர்வதேச கொள்கைகளுக்கும் தர நிர்ணயங்களுக்கும் ஏற்ப தேச எல்லைப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் வீசா நெருக்கடி மற்றும் ஒவ்வாமை காரணமாக தற்காலிகமாக தடுத்து வைக்கப்படுகின்ற வெளிநாட்டவர்களுக்கான வத்தளை தற்காலிக தடுப்பு நிலையத்தை சர்வதேச தர நிர்ணயங்களுக்கு ஏற்றவாறு வசதிகளுடன் கூடிய தடுப்பு நிலையமாக அபிவிருத்தி செய்தல், பிராந்திய செயற்பாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டு திருகோணமலையில் புதிய அலுவலக கட்டிடத்தொகுதியொன்றை நிறுவுதல் மற்றும் குடிவரவு, குடியகழ்வுப் பணிகளை டிஜிட்டல் மயப்படுத்தல் முதலான நடவடிக்கைகள் சார்பில் ரூ. 6,200 மில்லியன் நிதி ஒதுக்கப்படுகின்றது.

- முதலீடுகளின் அளவு மற்றும் உரிய ஏனைய அளவுகோள்களின் அடிப்படையில் முதலீட்டாளர்களுக்கு நிரந்தர குடியுரிமையை பெற்றுக்கொடுப்பதற்கான சட்டங்களை வகுக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

29. நீதித்துறை

ஒரு நாட்டின் சனநாயகத்தையும் சட்ட ஆதிக்கத்தையும் (Rule of Law) பிரதிபளிக்கும் அடிப்படையாக விளங்குவது, தாமதமின்றி நீதி நிர்வாகத்தை நிலைநாட்டும் ஆற்றலாகும். நீண்ட காலமாக இருந்துவந்த உட்கட்டமைப்பு வசதிகளின் பற்றாக்குறை, தொழில்நுட்ப விருத்தியின்மை மற்றும் கட்டமைப்பு ரீதியான தாமதங்கள் காரணமாக நீதித்துறையும் சிறைச்சாலைகள் துறையும் பாரிய அழுத்தத்திற்கு உட்பட்டுள்ளன. எனவே, நீதித்துறையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திய வண்ணம் நவீன தொழில்நுட்பங்களை ஒன்று சேர்த்து கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களை மேற்கொண்டு தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்கு யோசனை முன்வைக்கப்படுகின்றது.

- யாழ்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், நுவரெலியா, கேகாலை, கம்பஹா, களுத்துறை, கண்டி, கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள நீதிமன்றங்களின் வசதிகளை விஸ்தரித்து அபிவிருத்தி செய்வதற்கு ரூ. 5,115 மில்லியன் நிதி ஒதுக்கப்படுகின்றது.
- அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் பணிகளை பூரணமாக டிஜிட்டல்மயப்படுத்தும் பொருட்டு ரூ. 60 மில்லியன் நிதி ஒதுக்கப்படுகின்றது.
- நீதித்துறையின் வினைத்திறனுக்கு டிஜிட்டல்மயமாக்களின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக அமுல்செய்யப்படுகின்ற வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக உயர் நீதிமன்ற ஈ-கோப்பிடல் வாயில், கடதாசியற்ற (Paperless) வழக்கு விசாரணை, ஒருங்கிணைந்த வழக்கு முகாமைத்துவம் மற்றும் நிகழ்நிலை கொடுப்பனவுமுறை (e-CMS) என்பன ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வேலைத்திட்டம் உயர் நீதிமன்றத்தில் அமுல்செய்யும் பணிகள் தற்சமயம்

முற்றுப்பெற்றிருப்பதுடன், ஏனைய நீதிமன்றங்களிலும் அமுல்செய்வதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டின் சிறைச்சாலைகள் கட்டமைப்பினுள் கடுமையான நெரிசலொன்று ஏற்பட்டுள்ளது. 22 சிறைச்சாலைகளிலும் 14 வேலை முகாம்களிலும் தடுத்து வைக்கக்கூடிய ஆட்களின் எண்ணிக்கையான 16,500 என்ற கொள்ளளவையும் தாண்டி தற்சமயம் இரு மடங்காக அதிகரித்து சுமார் 36,500 கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இந்த நெரிசல் காரணமாகவும் போதைப்பொருள் அபாயம் காரணமாகவும் சிறைச்சாலைகளில் இடம்பெற்ற துர்ப்பாக்கிய சம்பவங்கள் காரணமாகவும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களும், அதேபோன்று கைதிகளும் மரணமடைந்தனர்.

- வெலிகட சிறைச்சாலை, மெகசீன் சிறைச்சாலை மற்றும் கொழும்பு ரிமாண்ட் சிறைச்சாலை உள்ளிட்ட கொழும்பு சிறைச்சாலைத் தொகுதியில் காணப்படுகின்ற கடுமையான நெரிசல் காரணமாக இச்சிறைச்சாலைத் தொகுதிகளை மில்லேவ பிரதேசத்தில் மீள்நிறுவும் பணிகளை ஆரம்பிக்கும் பொருட்டு இம்முறை வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் ரூ. 300 மில்லியன் நிதியை ஒதுக்குவதற்கு யோசனை முன்வைக்கப்படுகின்றது.
- காலி மரபுரிமை நகர அபிவிருத்தித் திட்டத்திற்கும் சுற்றுலா வலைய மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கும் ஏற்ப தற்போதைய காலி சிறைச்சாலையை அந்த இடத்திலிருந்து அகற்றி பூஸ்ஸா பிரதேசத்தில் மீள்நிறுவும் பொருட்டு இம்முறை வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் ரூ. 500 மில்லியன் நிதியை ஒதுக்குவதற்கு யோசனை முன்வைக்கப்படுகின்றது.
- ஏற்கனவே அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள வாரியபொலை மற்றும் வட்டரெக்க சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கும் கொள்ளளவை அதிகரிக்கும் வகையில் அச் சிறைச்சாலைகளை விஸ்தரிப்பதற்காக ரூ. 1,000 மில்லியன் நிதி ஒதுக்கப்படுகின்றது.

- மாத்தறை சிறைச்சாலையை, மாத்தறை கொடவிலவத்த பிரதேசத்தில் மீள்நிறுவும் பொருட்டு ரூ. 500 மில்லியன் நிதி ஒதுக்கப்படுகின்றது.

30. தேசிய பாதுகாப்பு

- பாதுகாப்புப் பிரிவுகளினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்த பாதுகாப்பு அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்தை நிறுவுவதற்காக ரூ. 250 மில்லியன் நிதி ஒதுக்கப்படுகின்றது.
- நிர்மாண பணிகள் சார்பில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட குழுக்கள் பாதுகாப்புப் படையிடம் காணப்படுகின்றன. அரசாங்கத்தின் பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்கும் இவர்களை ஈடுபடுத்திக்கொள்ளும் போது அதற்காக விஷேட கொடுப்பனவொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு யோசனை முன்வைக்கப்படுகின்றது.
- 2009 இற்கு முன் இராணுவப் படையைச் சேர்ந்த இராணுவ வீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் வகையில் தற்சமயம் தாய்க்கும் தந்தைக்கும் செலுத்தப்படுகின்ற ரூ. 750 மாதாந்தக் கொடுப்பனவை அதிகரிப்பதற்கும், இதனை 2027 ஜூலை மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கும், வேலைத்திட்டமொன்றை துரிதமாக வகுக்குமாறும் பாதுகாப்பு அமைச்சுக்கு முன்மொழியப்படுகின்றது.
- முப்படைகளில் இருக்கின்ற பொறியியலாளர்கள் உட்பட தொழில் நிபுணர்களை இணைத்து, அரச துறையில் நிர்மாணப் பணிகளுக்காக ஆலோசனைச் சேவைகள் வழங்கும் நிறுவனம் ஒன்று நிறுவப்படும். அரசாங்க கருத்திட்டங்களை திட்டமிடுதல், மேற்பார்வை மற்றும் கண்காணிப்புப் பணிகளின் போது ஆலோசனைச் சேவை நிறுவனம் என்ற வகையில் இந் நிறுவனம் செயற்படும்.
- பாதுகாப்பு அமைச்சின் டிஜிட்டல் மற்றும் சைபர் பாதுகாப்பு கட்டமைப்பை நவீனமயப்படுத்தல், டிஜிட்டல் தடயவியல் ஆய்வுகூடமொன்றை நிறுவுதல் மற்றும் தேச எல்லைப்

பாதுகாப்புத் தொழில்நுட்ப வசதிகளை அபிவிருத்தி செய்தல் முதலான பணிகள் முன்னெடுக்கப்படும். அத்துடன், இலங்கை இராணுவத்தின் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துவதற்கும் இலங்கை கடற்படையின் சமுத்திரப் பாதுகாப்பு மற்றும் அவதானிப்புத் திறன்களைப் பலப்படுத்தும் வகையில் புதிய ரோந்துப் படகுகள், டக் படகுகள் மற்றும் நவீன் ரேடார் கட்டமைப்புகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

31. கலாசார மற்றும் தேசியப் பாரம்பரியங்கள்

எல்லா இன மத மக்களும் ஒரே குடும்பமாக சகவாழ்வுடன் வாழ்வதினூடாக எமது தேசிய அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பாரம்பரியங்களை எதிர்கால சந்ததியினருக்கு அளிக்கும் வகையில் முறையாக பேணிப் பாதுகாப்பது எமது முக்கிய பொறுப்பாகும்.

இதற்காக, சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் பயன்படுத்தப்படுகின்ற முப்பரிமாண ஸ்கேனிங் (3D Laser Scanning) போன்ற டிஜிட்டல் தொழில்நுட்பங்களினூடாக வழிபாட்டுத்தளங்கள், வரலாற்று சிறப்புமிக்க தொல்பொருள் மற்றும் கலாசார அடையாளங்களை டிஜிட்டல் மயப்படுத்தி பேணிப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் இயற்கை அனர்த்தங்கள் அல்லது காலநிலைத் தாக்கங்களுக்கு மத்தியிலும் கூட தேசிய பாரம்பரியங்களின் சரியான முப்பரிமாண வடிவங்களை நிரந்தரமாக பேணிச்செல்லக் கூடியதாக இருக்கும்.

பல்வேறு இன மதங்களுடன் இணைந்த கலை அம்சங்களை ஊக்குவிக்கும் பொருட்டும் அபிவிருத்தி செய்யும் பொருட்டும் இம்முறை வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் ரூ. 7,000 மில்லியன் நிதி ஒதுக்கப்படுகின்றது.

- அநுராதபுரம், இலங்கையின் தனிச்சிறப்பு மிக்க வரலாற்று ரீதியிலானதும் தொல்லியல், சமய மற்றும் கலாசார பாரம்பரியங்கள் பின்னிப்பிணைந்த தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த புன்னிய பூமியாகும். இப்புன்னிய பூமி பௌத்த நாகரிகத்தின் வரலாற்று சிறப்புமிக்க பாரம்பரியத்தை

பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அதனால், தற்போதும் கூட முனைப்புடன் இயங்கும் மத நிலையமொன்றாக விளங்குகின்றது. எனவே, இதன் தொல்பொருள் பெறுமதியையும் சமய பெறுமதியையும் பாதுகாத்த வண்ணம் பக்தர்களுக்கும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளுக்கும் தேவையான வசதிகளை மேம்படுத்தல், வீதிகளைப் புனரமைத்தல், கழிவுப்பொருள் முகாமைத்துவம் உட்பட பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இந்நிகழ்ச்சித் திட்டத்தை மேற்பார்வை செய்வதற்கும் தேவையான வழிகாட்டல்களை வழங்குவதற்கும் தற்சமயம் பதில் கடமையாற்றும் அட்டமஸ்தான நாயக்க தேரரின் இணைத் தலைமைத்துவத்தின் கீழ் ஆலோசனைச் சபையொன்று நிறுவப்பட்டுள்ளது. இதற்காக மத்திய கலாசார நிதியத்தினூடாக 2027 ஆம் வருடத்திற்கு ரூ. 1,076 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுல்செய்யப்படுகின்ற அநுராதபுரம் புண்ணிபூமி அபிவிருத்திக் கருத்திட்டம் சார்பில் ரூ. 8,200 மில்லியன் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருப்பதுடன், அதற்கமைய 2027 ஆம் வருடத்திற்கு ரூ. 500 மில்லியன் நிதியை ஒதுக்குவதற்கு முன்மொழியப்படுகின்றது.

- 2026 இல் ஆரம்பிக்கப்பட்ட "யதிவர மாபிய" வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை 2027 ஆம் ஆண்டிலும் செயற்படுத்துவதற்காக வீடமைப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- திட்வா அனர்த்தத்தினால் சேதத்திற்குள்ளான 758 பௌத்த விகாரைகள், 272 இந்து மத வழிபாட்டித்தளங்கள், 199 இஸ்லாமிய மத வழிபாட்டுத் தளங்கள் மற்றும் 99 கிரிஸ்தவ மத வழிபாட்த் தளங்கள் என்றவாறு 1,328 மத வழிபாட்டுத் தளங்களின் புனரமைப்புப் பணிகளுக்காக அரசாங்கத்தினால் ரூ. 722 மில்லியன் நிதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக சேதமடைந்த இந்த 1,328 மத வழிபாட்டுத் தளங்களுள் 30 பௌத்த விகாரைகள் சார்பில் புத்தசாசன நிதியத்தில் இருந்து ரூ. 40 மில்லியனும் மத வழிபாட்டுத் தளங்கள் உட்பட தொல்பொருள்

தளங்களுக்கு மத்திய கலாசார நிதியத்திலிருந்து ரூ. 523 மில்லியனும், அநகாரிக தர்மபால பொறுப்பு நிதியத்தினூடாக இந்திய மகாபோதி சங்கத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட தொகையைப் பயன்படுத்தி ஒரு விகாரையும் என்றவாறு மேற்படி மத வழிபாட்டுத் தளங்கள் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

32. ஊடகத்துறை

- டிஜிட்டல் வசதிகளை அமுல்செய்தல், ஒளி / ஒலிபரப்புச் சேவை வசதிகளை மேம்படுத்தல் மற்றும் நவீன உபகரணங்களையும் தொழில்நுட்ப கருவிகளையும் கொள்வனவு செய்தல் என்பனவற்றிற்காக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு ரூ. 400 மில்லியனும், சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பிற்கு ரூ. 489 மில்லியனும் என்றவாறு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு மீண்டெழும் செலவினங்களுக்காக ரூ. 384 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- நவீன தொழில்நுட்பத்திற்கு சமாந்தரமாக ஊடகத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்கு பொருத்தமானவாறு ஊடகவியலாளர்களின் திறன்களை விருத்தி செய்வதற்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்கும் வகையில் உயர் கல்வி புலமைப் பரிசில்களை பெற்றுக்கொடுப்பதற்கும் ஊடகத் துறையின் தேவையான தொழில்நுட்ப பிரவேசத்திற்கு உதவியளிப்பதற்கும் ரூ. 100 மில்லியன் நிதி ஒதுக்குவதற்கு முன்மொழியப்படுகின்றது.

33. கிளீன் ஸ்ரீலங்கா

- பௌதீக சுத்தத்திற்கு மாத்திரம் மட்டுப்படாது, இலங்கை மக்களின் அன்றாட வாழ்வை சமூக சுற்றாடல் மற்றும் ஒழுக்க ரீதியாக நல்லதொரு திசையை நோக்கி மாற்றியமைப்பதை நோக்காகக் கொண்ட Clean Sri Lanka நிகழ்ச்சித் திட்டத்தினூடாக சமூகப் பிரிவின் கீழ் வாழ்க்கைத் தரம், கௌரவம், பாதுகாப்பு, சமமான அணுகுமுறை, உள்ளடக்கம், சமூக பங்களிப்பு, சமூக

ஒற்றுமை என்பவற்றை பலப்படுத்தல், சுற்றாடல் பிரிவின் கீழ் சுற்றாடல் பாதுகாப்பை பேணிப்பாதுகாத்தல், stewardship, உயிர் பல்வகைமை, பொறுப்புடன் வளங்களைப் பாவித்தலும் நிலைபேறான தன்மையை ஊக்குவித்தலும், ஒழுக்கநெறிப் பிரிவின் கீழ் பொறுப்பு, நேர்மை, ஒழுக்கம், நியாயத் தன்மை, வினைத்திறன் மற்றும் பொது வளங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுதலை பலப்படுத்தலாகும். இந் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு ரூ. 6,000 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- பசுமை வீதிகள், கிளீன் கொழும்பு, கிளீன் ஐலண்ட், கிளீன் சிட்டி, கிளீன் ஸ்ரீ லங்கா-அத்தம, கனவு பயணமுடிவு, புகையிரத நிலையங்களை நவீன மயப்படுத்தல் மற்றும் சிறந்த தரத்தைக் கொண்ட பொது துப்பரவேற்பாட்டு வசதிகள் போன்ற பௌதீக வசதிகளை வழங்குதலும், நிலைபேறான பராமரிப்பை வலுவூட்டல், யானை செறிவூட்டல் வலயங்கள் உட்பட சுற்றாடல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் மக்கள் பழக்க வழக்கங்கள், சமூக பங்களிப்பு, நிறுவன பொறுப்புக்களை ஊக்குவித்தல் முதலான நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும்.
- "பிவித்துரு புரவர" தேசிய கழிவுப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தற்சமயம் 32% என்ற மட்டத்தில் காணப்படுகின்ற கழிவுப்பொருள் சேகரிப்பை 2029 ஆம் ஆண்டளவில் 60% வரை அதிகரிப்பதற்கும் பாதுகாப்பான கழிவுப்பொருள் முகாமைத்துவத்தை ஊக்குவிப்பதற்கும் மற்றும் சுகாதாரப் பாதுகாப்புச் சூழலொன்றைக் கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இக் கருத்திட்டத்தை Clean Sri Lanka நிகழ்ச்சித்திட்டத்தினூடாக தெரிவு செய்யப்பட்ட 100 உள்ளூராட்சி மன்றங்களில் அமுல்செய்வதற்கு ரூ. 5,000 மில்லியன் நிதியை ஒதுக்குவதற்கு முன்மொழியப்படுகின்றது.
- வலுச்சக்தி அமைச்சின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்ட Clean Island கருத்திட்டத்தின் மூலம் நெடுந்தீவு, நைனாத்தீவு, அனலத்தீவு ஆகிய தீவுகள் ஒருங்கிணைந்த

அபிவிருத்தி மற்றும் மாற்றத்திற்கான மாதிரி தீவுகளாக அபிவிருத்தி செய்யப்படும்.

34. பொது நிருவாகமும் பொதுமக்கள் சேவையும்

- உள்ளூராட்சி மன்றங்களின் வருமானமீட்டல் திறனை அதிகரித்தல், நிலவும் வளங்களை விளைபயனுடன் மற்றும் நிதி நிலைபேறு தன்மையை பலப்படுத்தல் என்பனவற்றின் பொருட்டு நான்கு வருட கருத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும். இதன்மூலம் உள்ளூராட்சி மன்றங்களின் அத்தியவசிய சேவைகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், இதற்காக ரூ. 1,000 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- குருநாகல் மாநகர சபையினால் ஆரம்பிக்கப்பட்டு நிறைவு செய்ய முடியாமல் கைவிடப்பட்டுள்ள Capital Square கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு மாகாண சபை நிதியத்தில் இருந்து ரூ. 575 மில்லியன் நிதியை ஒதுக்குவதற்கு முன்மொழியப்படுகின்றது.
- மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தையும், பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு நிகழ்ச்சித் திட்டத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கு, மாவட்டமொன்றிற்கு ரூ. 2,000 மில்லியன் வீதம் ரூ. 50,000 மில்லியன் நிதியை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதனூடாக ரூ. 47,750 மில்லியன் நிதி மாவட்ட மட்டத்தில் இனங்காணப்பட்ட விஷேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன். எஞ்சிய ரூ. 2,250 மில்லியன் நிதி பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு பாராளுமன்ற உறுப்பினரொருவருக்கு ரூ. 10 மில்லியன் வீதம் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளன.
- கிராமி வீதி அமைப்பை அபிவிருத்தி செய்வதற்காக வீதிகளையும் அதேபோன்று பாலங்களையும் மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ.55,000 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக உள்ளூராட்சி

அமைச்சின் கீழ் கிராமிய மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் காணப்படுகின்ற கிராமிய பாலங்களை மேம்படுத்துவதற்காக ரூ. 5,500 மில்லியன்களும் மாகாண சபை வீதிகளைப் பராமரித்து புனர்நிர்மாணம் செய்வதற்காக ரூ.20,000 மில்லியன்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் தற்போது ஒதுக்கப்பட்ட ரூ. 80,000 மில்லியனுக்கு மேலதிகமாக மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டுடன் சுமார் ரூ,100,000 மில்லியன் தொகை கிராமிய வீதி அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

- பொதுமக்களுக்கு வினைத்திறன்மிக்கதும் தரமானதுமான அரச சேவையொன்றை வழங்கும் நோக்குடன் வவுனியா, புத்தளம் மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் புதிய மாவட்ட செயலகங்களை அமைக்கும் பொருட்டு ரூ. 1,100 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- பிரதேச மட்டத்தில் பொதுமக்கள் சேவையை சீரமைக்கும் வகையில் தெஹிஅத்தகண்டிய மற்றும் எலபாத புதிய பிரதேச செயலகங்களை அமைக்கும் பொருட்டு ரூ. 265 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- உள்ளூராட்சி மன்றங்களுக்கு சம்பளத்திற்கான நிதியை வழங்கும்போது தற்சமயம் தொழிற்படுகின்ற 20% இனாலும், 40% இனாலும் மட்டுப்படுத்தும் முறைமையின் காரணமாக ஏற்பட்டுள்ள சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு 2027 ஆம் வருடத்திலிருந்து நடைமுறைப்படுத்தக்கூடிய மிகப்பொருத்தமானதும் இலகுவானதுமான முறையொன்றை அறிமுகம் செய்வதற்கு முன்மொழியப்படுகின்றது. அதற்கமைய, 2027 ஆம் வருடத்திற்கு நிதி ரீதியாக மிகவும் பலவீன மட்டத்தில் காணப்படுகின்ற 46 உள்ளூராட்சி மன்றங்களுக்கும், அவ் உள்ளூராட்சி மன்றங்களின் பணியாளர்களின் சம்பளங்களுக்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டை 100% சம்பூர்ணமாக அரசாங்கத்தினால் உள்ளடக்குவதற்கு முன்மொழியப்படுகின்றது. ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் இந்த சதவீதங்களை மாற்றுவதற்கு முன்மொழிகிறேன். இந்த நிறுவனங்கள் சமர்ப்பிக்கின்ற

திட்டங்களின் அடிப்படையில் மூலதன நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒத்துழைப்பு வழங்குவதற்காக ரூ. 1,750 மில்லியன் நிதி ஒதுக்கப்படுகின்றது.

- அரச உத்தியோகத்தர்களின் வினைத்திறனை அதிகரித்தல், பொதுமக்களுக்கு தரமான சேவையொன்றை வழங்கும் வகையில் ஏற்கனவே, நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கேகாலை, நுவரெலியா மாவட்டச் செயலகங்களின் நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கும், நீர்கொழும்பு, ஹோமாகமை, களுத்துறை, பிடபெத்தர, அங்குனுகொலபெலஸ்ஸ, தெரனியகலை பிரதேச செயலகங்களின் நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கும் ரூ. 1,100 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- அரச நிறுவனங்களிலுள்ள மிகப் பழைமையான கணினி முறைமைகளுக்குப் பதிலாக புதிய கணினி முறைமைகளை பெற்றுக்கொடுப்பதற்கு ரூ. 4,500 மில்லியன் நிதி ஒதுக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக மேலும், ரூ. 2,200 மில்லியன் நிதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு முன்மொழியப்படுகின்றது.
- நாடளாவிய சேவைகள் தற்போது காணப்படுகின்ற பதவி உயர்வு முறைமைக்கு இணங்கியதாக நாடளாவிய சேவையல்லாத நிறைவேற்று சேவைகள் மற்றும் திணைக்களமய சேவைகள் காணப்படுகின்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு முன்மொழிகிறேன்.
- அரச நிறுவனங்களில் வினைத்திறன் மிக்கதும் தரமானதுமான அரச சேவையொன்றை பேணிச்செல்வதற்குப் போதுமான மனிதவளங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரச சேவை ஆட்சேர்ப்பு நடைமுறையை மீளாய்வு செய்த வண்ணம், பணியாட் தொகுதி முகாமைத்துவம் சம்பந்தமாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவினாலும் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினாலும், 148,940 பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு ஏற்கனவே அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதில் தற்சமயம்

சுமார் 40,000 ஆட்சேர்ப்புகள் முடிக்கப்பட்டுள்ளதுடன், இனிவரும் காலங்களில் மேலும் 110,000 ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளுவதற்கு நிதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் III கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தக் கருத்திட்டத்தை 2028 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளையில் அதற்காக ரூபா 6,800 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.
- செத்சிறிபாய கட்டம் IV கருத்திட்டத்தை பகல்நேர காப்பக நிலையத்தைக் கொண்டதாக நிர்மாணிப்பதற்கு பத்தரமுல்லை டென்சின் கொப்பேகடுவ மாவத்தையில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதியத்தைப் பயன்படுத்துவதன் மூலம் நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழிகிறேன்.

35. அரச துறையின் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதிய சம்பளங்கள்

கௌரவ சபாநாயகர் அவர்களே,

2025 ஆம் ஆண்டின் எமது முதலாவது வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் அரச துறையின் குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளத்தை ரூபா 15,750 இனால் அதிகரித்ததன் மூலமும் வருடாந்த சம்பள ஏற்றத்தின் பெறுமதியை 80% வரை அதிகரித்ததன் மூலமும் அடிப்படைச் சம்பளத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த சம்பளத்தை அதிகரிப்பதற்கு ரூபா 330 பில்லியன் செலவாகின்றது. இந்த சம்பளத் திருத்தம் 3 கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்ட அதேவேளை, அதன் இறுதிக் கட்டம் 2027 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அதற்காக வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் ரூபா 110 பில்லியன் ஒதுக்கப்படுகின்றது.

அதேவேளையில், பல்வேறு துறைகளில் அரச ஊழியர்களினால் தமது கடமையை நிறைவேற்றும் போது உறப்படவேண்டி ஏற்படுகின்ற அதுசார்ந்த செலவினங்கள் அதிகரிப்பதனைக் கவனத்தில் கொண்டு, தமது கொடுப்பனவுகளை திருத்துமாறு கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அந்த

கோரிக்கைகளையும், அதேபோன்று அரசாங்கத்தில் காணப்படுகின்ற நிதி வாய்ப்புகளையும் கவனத்திற் கொண்டு, இந்த வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் முன்னுரிமை வழங்கி கொடுப்பனவுகள் பலவற்றை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனைய கொடுப்பனவுகளைத் திருத்தும் கோரிக்கைகளையும் அரச நிதிசார் ஆற்றலைக் கவனத்திற் கொண்டு, அடுத்துவரும் வரவுசெலவுத் திட்டங்களில் கட்டம் கட்டமாக கவனத்திற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதன் பிரகாரம், பின்வருமாறு கொடுப்பனவுகளை திருத்துவதற்கு நான் முன்மொழிகிறேன்.

அரச சேவை நிறைவேற்றுதர அலுவலர்களுக்கான போக்குவரத்துக் கொடுப்பனவு

- பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 05/2016 இன் கீழ் உத்தியோகபூர்வ வாகனமொன்றுக்கு உரித்துடைய, ஆனால் உத்தியோகபூர்வ கடமையை நிறைவேற்றுவதற்குத் தங்களது சொந்த வாகனங்களைப் பயன்படுத்தும் நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கு, தற்போது மாதாந்தம் ரூபா 50,000 போக்குவரத்துக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. தனிப்பட்ட வாகனங்களை உத்தியோகபூர்வ கடமைகளுக்கு பயன்படுத்தும் போது பராமரிப்பு, பழுதுபார்த்தல் மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவுகளின் அதிகரிப்பைக் கவனத்திற் கொண்டு, வாகனம் உரித்துடைய அரச உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் வழங்குவதிலும் பார்க்க அவர்கள் தனிப்பட்ட வாகனமொன்றைப் பயன்படுத்துவது அரசாங்கத்திற்கு மிகவும் நிதி ரீதியான விளைபயன் அதிகமாக இருக்கின்றபடியினால் அதனை ஊக்குவிப்பதன் பயனாக தற்போது வழங்கப்படும் மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவை ரூ. 100,000 ஆக உயர்த்துவதற்கு முன்மொழியப்படுகிறது.
- முழுமையாக மின்சாரத்தின் மூலம் இயங்கும் தனிப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தும் உத்தியோகபூர்வ வாகனம் பெறத் தகுதியுடைய உத்தியோகத்தர்களுக்கு மின்சாரத்தின் மூலம் இயங்குகின்ற வாகனத்தைப் பயன்படுத்துவதனை

ஊக்குவிக்கும் நோக்கில், பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 13/2008(V) இற்கு அமைவாக செலுத்தப்படுகின்ற மாதாந்தக் கொடுப்பனவை 2027 ஜூலை முதல் 150% இனால் அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகிறேன்.

சுகாதாரத் துறையினருக்கான கொடுப்பனவு

- எமது மக்களின் சுகாதாரத்தையும் நல்வாழ்வையும் பாதுகாப்பதற்காக செய்யப்படுகின்ற முக்கியமான பணியைக் கவனத்திற் கொண்டு, மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவை (DAT) ரூபா 70,000 இலிருந்து ரூபா 95,000 வரை ரூபா 25,000 இனால் அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகிறேன்.
- தேசிய சுகாதார முறைமையினை வலுப்படுத்தும் பொருட்டு, தாதிகள், துணை மருத்துவ மற்றும் நிறைவுகாண் மருத்துவ சேவை அதிகாரிகளுக்கான மாதாந்த சிறப்புப் பணிக்கான கொடுப்பனவை ரூ. 6,000 இலிருந்து ரூ. 12,000 ஆகவும், இதர சுகாதாரப் பணியாளர்களுக்கான மாதாந்த சிறப்புப் பணிக்கான கொடுப்பனவை ரூ. 2,000 இலிருந்து ரூ. 4,000 ஆகவும் உயர்த்த நான் முன்மொழிகிறேன்.
- சுகாதாரத் துறைக்கான மேற்கண்ட கொடுப்பனவு அதிகரிப்பினை இரண்டு கட்டங்களாக வழங்க முன்மொழியப்பட்டுள்ளது. அதன்படி, இந்த கொடுப்பனவு அதிகரிப்பில் 50% 2027 ஜூலை முதலும், மீதமுள்ள 50%, 2028 இலும் வழங்கப்படும்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்களின் விரிவுரையாளர்களுக்கான கொடுப்பனவு

- உயர்கல்வியின் தரத்தை உயர்த்துவதிலும், ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதிலும், மனிதவளத்தை மேம்படுத்துவதிலும் பல்கலைக்கழக கல்விப் பணியாளர்கள் ஆற்றிவரும் முக்கியப் பங்கைக் கருத்திற் கொண்டு, அத்தகைய பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்த கல்வி உதவித்தொகையை ரூ. 25,000 அளவுக்கு உயர்த்த நான் முன்மொழிகிறேன். இந்த உயர்வில் 50% 2027 ஜூலையிலிருந்தும்,

மீதமுள்ள 50%, 2028 ஜூலை மாதத்திலிருந்தும் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- பல்கலைக்கழக கல்விசார் நடவடிக்கைகளுக்காக விசேட அறிவைக் கொண்ட வருகைதரு விரிவுரையாளர்களை கவர்ந்தீர்க்கும் பொருட்டு வருகைதரு விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை தற்போது காணப்படுகின்ற விகிதாசாரங்களுக்கு இணங்கியதாக மூன்று மடங்கினால் அதிகரிப்பதற்கு முன்மொழிகிறேன். அதன் பிரகாரம் தற்போது ஒரு மணித்தியாலத்திற்கு செலுத்தப்படுகின்ற விரிவுரைக் கொடுப்பனவை ரூ. 1,500 இலிருந்து ரூ. 4,500 ஆக அதிகரிப்பதற்கு முன்மொழிகிறேன். அதேபோன்று செய்முறைத் தேர்வுகளுக்காக வழங்கப்படும் மணிநேரக் கொடுப்பனவை ரூ. 600 இலிருந்து ரூ. 1,800 ஆக, உயர்த்த நான் முன்மொழிகிறேன்.
- தொழில் தேர்ச்சி கற்கை நடவடிக்கைகளுக்காக விசேட அறிவைக் கொண்ட வருகைதரு விரிவுரையாளர்களை தொழில் மற்றும் தொழிலநுட்ப நிறுவனங்களுக்கு கவர்ந்தீர்க்கும் பொருட்டு வருகைதரு விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை தற்போது காணப்படுகின்ற விகிதாசாரங்களுக்கு இணங்கியதாக 100% இனால் அதிகரிப்பதற்கு முன்மொழிகிறேன்.

முப்படையினர்களுக்கான உணவுக் கொடுப்பனவு

- முப்படை உறுப்பினர்களின் உணவுகளை வழங்குவதற்காக உறப்படுகின்ற செலவுகள் அதிகரிப்பதனைக் கவனத்திற்கொண்டு, அவர்களின் போசாக்குத் தேவையை பூர்த்திசெய்தல் மற்றும் நலன்புரி என்பவற்றை உறுதிப்படுத்துதல் ஆகிய நோக்கத்துடன், முப்டைகளிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படுகின்ற நாளாந்த உணவுக் கொடுப்பனவுகளை 2027 யூலை மாதம் முதல் ரூபா 315 இனாலும், ஏனைய உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படுகின்ற நாளாந்த உணவுக் கொடுப்பனவை ரூபா 332 இனாலும் அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகிறேன்.

இலங்கை பொலிஸ் அலுவலரின் உணவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவு

- பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தமது கடமையை நிறைவேற்றும் போது உறப்படவேண்டிய உணவு மற்றும் தங்குமிட செலவின அதிகரிப்பினைக் கவனத்திற்கொண்டு, அதனைத் தீர்ப்பதற்காக தற்போது செலுத்தப்படுகின்ற மாதாந்த உணவு மற்றும் தற்குமிட கொடுப்பனவை ரூபா 10,000 இனால் அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகிறேன்.

சிறைச்சாலை உ த்தியோகத்தர்களுக்கான இடர் கொடுப்பனவு

- சிறைசாலை அதிகாரிகள் தங்கள் கடமைகளை ஆற்றும்போது எதிர்கொள்ளும் கடினமான மற்றும் அதிக ஆபத்து நிறைந்த பணிச் சூழல்களைக் கருத்தில் கொண்டு, தற்போதைய மாதாந்த இடர் கொடுப்பனவை ரூ. 8,000 இலிருந்து ரூ. 16,000 ஆக, அதாவது 100% இனால் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- அதேபோல், சிறைச்சாலைசார் சேவையில் பணியாற்றும் அரசு ஊழியர்களுக்கு தற்போது வழங்கப்படும் கொடுப்பனவை ரூ. 2,250 இலிருந்து ரூ. 10,000 ஆக உயர்த்த நான் முன்மொழிகிறேன்.
- சிறைச்சாலை துறையில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு முன்மொழியப்பட்ட இந்தக் கொடுப்பனவுகளை 2027 ஜூலை மாதம் முதல் வழங்க நான் முன்மொழிகிறேன்.

கள உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு

- சமூகத்திற்கு அத்தியாவசியமான பொதுச் சேவைகளை நேரடியாக வழங்குவதில் கள அலுவலர்கள் ஆற்றிவரும் பங்களிப்பையும், அவர்களது களப்பணிகளுடன் தொடர்புடைய அதிகரித்து வரும் செலவுகளையும் கருத்திற் கொண்டு, கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்த பிரயாணக் கொடுப்பனவை ரூ. 1,600 இலிருந்து ரூ. 4,000 ஆகவும், மாதாந்த அலுவலக வாடகைக் கொடுப்பனவை நகர சபை எல்லைக்குள் ரூ. 3,000 இலிருந்து ரூ. 6,000 ஆகவும், பிரதேச சபை எல்லைக்குள் ரூ. 2,000 இலிருந்து ரூ. 4,000 ஆகவும் அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகிறேன்.

- அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்த பிரயாணக் கொடுப்பனவு ரூ. 300 இலிருந்து ரூ. 1,000 ஆகவும், மாதாந்த அலுவலக வாடகைக் கொடுப்பனவு நகர சபை எல்லைக்குள் ரூ. 1,000 இலிருந்து ரூ. 2,000 ஆகவும், பிரதேச சபை எல்லைக்குள் ரூ. 750 இலிருந்து ரூ. 1,500 ஆகவும் அதிகரிக்கப்படும்.
- சமுர்த்தி அதிகாரிகளுக்கான தற்போதைய மாதாந்த பிரயாணக் கொடுப்பனவை ரூ. 2,000 லிருந்து ரூ. 2,500 வரை, மாதாந்த அலுவலக வாடகைக் கொடுப்பனவை நகர சபை எல்லைக்குள் ரூ. 2,500 இலிருந்து ரூ. 5,000 வரை, பிரதேச சபை எல்லைக்குள் ரூ. 2,000 இலிருந்து ரூ. 4,000 ஆகவும் அதிகரிக்க முன்மொழிகிறேன்.
- கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி அதிகாரிகளுக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்த பிரயாணக் கொடுப்பனவை ரூ. 400 இலிருந்து ரூ. 1,000 வரை, மாதாந்த அலுவலக வாடகைக் கொடுப்பனவை நகர சபை எல்லைக்குள் ரூ. 3,000 இலிருந்து ரூ. 6,000 வரை, பிரதேச சபை எல்லைக்குள் ரூ. 2,000 இலிருந்து ரூ. 4,000 ஆகவும் அதிகரிக்க நான் முன்மொழிகிறேன்.
- கள உத்தியோகத்தர்களுக்கான மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு 2027 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து

நீதித்துறையில் கொடுப்பனவுகளின் திருத்தம்

மேல் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதித்துறை அலுவலருக்கான கொடுப்பனவுகள்

- நீதித் துறை அலுவலர்களின் தொழில்முறைப் பொறுப்புகள், பணியின் தன்மை மற்றும் பங்களிப்பு என்பவற்றைக் கருத்திற் கொண்டு, மேல் நீதிமன்ற நீதிபதிகள், சிறப்புத் தர நீதித்துறை அலுவலர்கள் மற்றும் பிற தரங்களிலுள்ள நீதித்துறை அலுவலர்களுக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்த தொழில்முறைக் கொடுப்பனவை ரூ. 25,000 ஆக அதிகரிக்க நான் முன்மொழிகிறேன். இந்த அதிகரிப்பில் 50% இனை 2027 ஜூலை மாதத்திலும், மீதமுள்ள 50% இனை 2028 ஆம் ஆண்டிலும் வழங்கப்படும்.

- உத்தியோகபூர்வ வாகனங்களைப் பெறத் தகுதியுள்ள அதிகாரிகளுக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்த பிரயாணக் கொடுப்பனவை 2027 ஜூலை முதல் ரூ. 50,000 இனாலும், மாதாந்த சாரதிக் கொடுப்பனவை ரூ. 25,000 இலிருந்து ரூ. 50,000 ஆகவும், உத்தியோகபூர்வ அல்லது குத்தகை அடிப்படையில் இல்லம் வழங்கப்படாத அதிகாரிகளின் குடியிருப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஏற்படும் அதிகரித்த செலவினங்களைக் கருத்தில் கொண்டு, மேல் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் பிற நீதிபதிகளுக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்த வீட்டு வசதிக் கொடுப்பனவை 100% இனாலும் அதிகரிப்பதற்கு முன்மொழிகின்றேன்.

சட்டமா அதிபர் திணைக்களத்திற்கான கொடுப்பனவு

- சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டமா அதிபர், சொலிசிட்டர் ஜெனரல் மற்றும் சிரேஷ்ட அரச வழக்கறிஞர் ஆகிய பதவிகளுக்கான மாதாந்த தொழில்சாரா கொடுப்பனவை ரூ. 25,000 ஆகவும், சிரேஷ்ட அரச வழக்கறிஞர் மற்றும் அரச வழக்கறிஞர் ஆகிய பதவிகளுக்கான தொழில்சாரா கொடுப்பனவை ரூ. 20,000 ஆகவும் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பில் 2027 ஜூலை மாதத்தில் 50% உம் மீதமுள்ள 50%, 2028 ஆம் ஆண்டிலும் வழங்கப்படும்.
- உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்துடைய அதிகாரிகளுக்கு வழங்கப்படும் மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவு ரூ. 50,000 வரையிலும், உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரிமையுள்ள அதிகாரிகளுக்கு வழங்கப்படும் மாதாந்த சாரதிக் கொடுப்பனவை ரூ. 25,000 இலிருந்து ரூ. 50,000 வரையிலும், தற்போது வழங்கப்படும் வீட்டு வாடகைக் கொடுப்பனவை 100% வரையிலும், 2027 ஜூலை முதல் அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகிறேன்.

சட்டவரைநர் திணைக்களத்திற்கான கொடுப்பனவு

- சட்டவரைநர் திணைக்களத்தில் சட்ட வரைநர், மேலதிக சட்ட வரைநர், பிரதி சட்டவரைநர் ஆகிய பதவிகளிலுள்ள அதிகாரிகளுக்கான விசேட கொடுப்பனவை ரூ. 25,000 ஆகவும்,

சிரேஷ்ட உதவி சட்ட வரைநர் மற்றும் உதவி சட்ட வரைநர் பதவிகளில் உள்ளவர்களுக்கான விசேட கொடுப்பனவை ரூ. 20,000 ஆகவும் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பில் 2027 ஜூலை மாதத்தில் 50% உம் மீதமுள்ள 50% இனை 2028 ஆம் ஆண்டிலும் வழங்கப்படும்.

- 2027 ஜூலை மாதம் முதல் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்துடைய அதிகாரிகளுக்கு வழங்கப்படும் மாதாந்த சாரதிக் கொடுப்பனவை ரூ. 10,000 இலிருந்து ரூ. 50,000 வரையிலும் அதிகரிக்கப்படும்.

நீதிமன்ற உதவிப் பதவியினருக்கான கொடுப்பனவு

- நீதித் துறை முறைமையின் திறன்மிக்க செயற்பாட்டைப் பேணுவதற்காக, நீதித் துறைசார்ந்த துணைப் பணியாளர்களின்பங்களிகப்பு, அவர்களின் பணிச்சுமை மற்றும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பொறுப்புகளைக் கருத்திற் கொண்டு, இவர்களுக்கு வழங்கப்படும் உரிய கொடுப்பனவுகளை 2027 ஏப்ரல் முதல் அதிகரிப்பற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் மாதாந்த கொடுப்பனவுகள்

- சுயாதீன ஆணைக்குழுக்களினதும் ஏனைய ஆணைக்குழுக்களினதும் தலைவர்கள் மற்றும் பிற உறுப்பினர்களின் மாதாந்தக் கொடுப்பனவுகள் 2018 முதல் திருத்தப்படாததாலும், அரச நிறுவனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசுடமை தொழில் முயற்சிகளின் தலைவர்கள், வேலைப் பணிப்பாளர்கள் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் மாதாந்தக் கொடுப்பனவுகள் 2015 முதல் அதிகரிக்கப்படாததாலும், அவர்கள் வகிக்கும் பொறுப்புகளைக் கருத்திற் கொண்டு, 2027 ஜூலை முதல் மாதாந்த கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகிறேன்.
- ஏனைய ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் ஏனைய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவுகள்

மேற்குறிப்பிட்ட வீதாசாரங்களுக்கு இணங்கியதாக திருத்தப்படுகின்றது.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

மேலே குறிப்பிடப்பட்ட இக்கொடுப்பனவுகளின் திருத்தம் தொடர்பான மேலதிகத் தகவல்கள் தொழில்நுட்பக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

அரச ஊழியர்களின் ஓய்வூதிய சம்பளத் திருத்தம்

கௌரவ சபாநாயகர் அவர்களே,

ஓய்வூதிய மீளாய்வு மற்றும் ஓய்வூதியம் பெறுநருக்கான நிவாரணம்

- இளைப்பாறிய அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதியத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளைப் படிப்படியாக அகற்றி, அனைத்து ஓய்வூதியம் பெறுநர்களுக்கும் நியாயமானதும் சமமானதுமான ஓய்வூதிய முறையை உறுதி செய்யும் நோக்கில், அரசாங்கம் கட்டம் கட்டமான ஓய்வூதிய மறுசீரமைப்புத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது.
- 2025 இல் எமது முதலாவது வரவுசெலவுத் திட்டத்தின் மூலம், 2020 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் ஓய்வூதியங்களை, 2020 ஆம் ஆண்டின் அடிப்படைச் சம்பள விகிதத்திற்கு மூன்று கட்டங்களாக மாற்றுவதற்கு வழிவகை செய்தது. இதில் முதல் மற்றும் இரண்டாம் கட்டங்கள் ஏற்கனவே நிறைவடைந்துவிட்டன. இறுதிக் கட்டத்தினை 2027 ஆம் ஆண்டில் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- நிலைபேறான அரச நிதி முகாமைத்துவத்தினைக் கருத்திற் கொண்டு, 2025 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும் புதிய அடிப்படைச் சம்பளத் திருத்தத்தின் காரணமாக, 2025 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கும், 2025 ஆம் ஆண்டில் அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறவிருப்பவர்களுக்கும் இடையிலான ஓய்வூதிய இடைவெளியைப் படிப்படியாகக் குறைத்து அகற்றுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

- 2025 இல் புதிய அடிப்படைச் சம்பளக் கட்டமைப்பின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள ஓய்வூதியத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் வரை, 2020 - 2024 ஆண்டுகளுக்கு இடையில் இளைப்பாரியவர்களுக்கு நிவாரணமாக, 2027 ஜூலை 01 முதல் மாதம் ஒன்றுக்கு 2,500 ரூபாவினை இடைக்காலக் கொடுப்பனவாக வழங்க நான் முன்மொழிகிறேன்.
- 2025 ஆண்டின் புதிய அடிப்படைச் சம்பளக் கட்டமைப்பின்படி மேற்கொள்ளப்படவுள்ள ஓய்வூதியத் திருத்தத்தினை, 2028 வரவுசெலவுத் திட்டத்திலிருந்து தொடங்கிப் பல கட்டங்களாகச் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட இந்தத் திருத்தம் சம்பந்தப்பட்ட ஓய்வூதியம் பெறுர்களுக்குச் செயற்படுத்தப்பட்டு, திருத்தப்பட்ட ஓய்வூதிய வழங்கல் தொடங்கியவுடன், 2020-2024 இற்கு இடையில் இளைப்பாறியவர்களுக்கு வழங்கப்படவிருந்த மாதந்த இடைக்காலக் கொடுப்பனவான ரூ. 2,500 வழங்குவது நிறுத்தப்படும்.
- முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 02/2025, 03/2025, 04/2025, 05/2025 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் கீழ் ஊதியம் நிர்ணயிக்கப்பட்ட அரச துறை ஓய்வூதியம் பெறுநர்களுக்கும் இந்த விதிகள் பொருந்தும்.
- இந்த நடவடிக்கைகள் அனைத்தினதும் ஒட்டுமொத்த நோக்கம், வெவ்வேறு காலங்களில் ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களிடையே காணப்படும் ஓய்வூதிய இடைவெளிகளைப் படிப்படியாகக் குறைப்பதும், அவர்களுக்கு நியாயமான இழப்பீடு வழங்குவதும், நீண்டகாலம் நிலைபேறான ஓய்வூதிய முறைமை ஒன்றினை உருவாக்குவதுமாகும்.

36. வரிக்கொள்கை முன்மொழிவுகள்

36.1 தனிப்பட்ட வருமான வரி நிவாரணத்தில் அதிகரிப்பும் தொடர் வரி வரம்புகளில் திருத்தமும்

கௌரவ சபாநாயகர் அவர்களே,

எமது அரசாங்கம் 2025 ஆண்டில் தனிநபர் வருமான வரி விலக்களிப்பு எல்லையை ரூ. 1.2 மில்லியனிலிருந்து ரூ. 1.8 மில்லியனாக அதிகரித்தது. தனிப்பட்ட வரி செலுத்துநர்களுக்கு ரூ. 3,500 இல் இருந்து ரூ. 20,500 வரையிலான மாதாந்த வரி நிவாரணத்தை வழங்கியது.

வரிசெலுத்துநர்களுக்கு மேலும் நிவாரணத்தை வழங்குவதற்கான தனிப்பட்ட வருமான வரி நிவாரணத்தை மேலும் அதிகரிப்பதற்கும் வரிவிதிக்கத்தக்க வருமான வரம்புகளை விரிவுபடுத்துவதன் மூலம் தனிப்பட்ட வருமான வரிக் கட்டமைப்பை திருத்துவதற்கும் நாம் முன்மொழிகின்றோம்.

மாதத்திற்கு ரூ. 100,000 ஆக இருந்த வரி விலக்கு வரம்பை, ரூ. 150,000 ஆக எங்களால் உயர்த்த முடிந்தது. இங்கு முன்மொழியப்பட்ட திருத்தங்கள் இதனை மேலும் ரூ. 162,500 ஆக உயர்த்தும். அதன்படி, மாதச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் ரூ. 162,500 வரை பெறும் ஒருவர் தனது சம்பளத்திற்கு வரி செலுத்தத் தேவையில்லை.

6% வரி விகிதங்கள் ஏற்புடையதாகின்ற வரி வரம்புகள் மாதத்திற்கு 70,833 ஆகக் காணப்பட்ட அதேவேளையில், அதன் பின்னர் வரி மட்டம் ரூ. 41,667 ரூபாவிலிருந்து மாதத்திற்கு 50,000 ரூபாவாக விரிவுபடுத்தப்படும். 6% விகிதத்திற்குப் பிறகு, 18% என்பதற்குப் பதிலாக 12% விகிதத்தைப் பயன்படுத்தி, வரி விகிதங்கள் 6%, 12%, 18%, 24%, 30% மற்றும் 36% என சரிசெய்யப்படும்.

இத் திருத்தங்கள் ரூ. 358,000 இலிருந்து ரூ.433,000 வரை அதிகூடிய ஏற்புடையதாகின்ற மாதாந்த வருமான அடிப்படை அளவை அதிகரிக்கின்ற அதேவேளை தனிப்பட்ட வரிசெலுத்துநர் ஒருவருக்கு ரூ. 750 தொடக்கம் ரூ.15,750 வரையிலான மேலதிக மாதாந்த வரி நிவாரணத்தை வழங்கும்.

அதற்கமைய, 2025 இல் அறிமுகப்படுத்தப்பட்ட வரி மறுசீரமைப்புக்களினதும் 2027 இற்காக முன்மொழியப்பட்ட திருத்தங்கங்களினதும் ஒன்றிணைந்த தாக்கத்தின் மூலம் எமது அரசாங்கத்தினால் வழங்கப்படும் மொத்த மாதாந்த வரி நிவாரணம் தனிப்பட்ட வரிசெலுத்துநர் ஒருவருக்கு ரூ. 4,250 இலிருந்து ரூ. 36,250 வரையாக உயர்வடைகின்றது.

36.2 முதலீட்டுச் சபை (BOI) அனுமதித்த ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட தயாரிப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொழில்முயற்சிகளுக்காக அதிகரிக்கப்பட்ட மூலதனக் கொடுப்பனவுகள்

கௌரவ சபாநாயகர் அவர்களே,

தனியார் துறை முதலீட்டை ஊக்குவித்தல், ஏற்றுமதி நோக்காகக் கொண்ட உற்பத்தியை தூண்டுதல் மற்றும் சுற்றுலாத்துறையை வலுப்படுத்தல் ஆகிய நோக்குடன் இலங்கை முதலீட்டுச் சபையுடனான முதலீடுகளின் கீழ் தொழிற்படுகின்ற தொழில்முயற்சிகளுக்கான முதலீட்டு ஊக்கத் தொகையொன்றாக அதிகரிக்கப்பட்ட மூலதனக் கொடுப்பனவுகளை அறிமுகப்படுத்துவதற்கு நாம் முன்மொழிகின்றோம்.

அதற்கமைய, ஐ.அ.டொலர் 3 மில்லியன் கொண்ட குறைந்தபட்ச தகைமை பெறுகின்ற முதலீட்டுடன் ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட தயாரித்தலில் அல்லது சுற்றுலா அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள முதலீட்டுச் சபை அனுமதித்த தொழில்முயற்சிகள் ஏற்கனவே காணப்படுகின்ற கொடுப்பனவு கட்டமைப்புக்குப் பதிலாக இயைபான தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்கு உட்பட்டு தகைமைபெறுகின்ற மூலதனச் செலவினத்தின் 200% இற்கு சமமான அதிகரிக்கப்பட்ட மூலதன கொடுப்பனவொன்றை தெரிவு செய்வதற்கு அனுமதிக்கப்படும்.

36.3 அப்பியாசக் கொப்பிகள் மற்றும் அச்சிடப்பட்ட நூல்களுக்காக பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) விலக்களிப்புகள்

கௌரவ சபாநாயகர் அவர்களே,

2024 சனவரி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் அச்சிடப்பட்ட நூல்களும் ஏனைய அச்சிடப்பட்ட பொருட்களும் பெறுமதிசேர்க்கப்பட்ட வரிக்கு உட்படுத்தப்பட்ட அதேவேளை அப்பியாசக் கொப்பிகள் அத்திகதிக்கு முன்னர் இருந்தே பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

கல்வியின் முக்கியத்துவத்தையும் அத்தியவசிய கல்விசார் பொருட்கள் சாதாரண விலைகளில் கிடைக்கப்பெறுவதற்கான தேவையினையும் அங்கீகரித்தும் இந்நிவாரணம் சமூகத்தின் பரந்த வகுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற அதேவேளை கல்வி, அறிவு மற்றும் வாசிப்பு என்பவற்றுக்கான அணுகளை ஊக்குவிக்கும் நோக்குடன் பாடப்புத்தகங்கள், சொல்லகராதிகள், கலைக்களஞ்சியங்கள், பிள்ளைகளுக்கான பட மற்றும் சித்திரம் வரைதல் புத்தகங்கள், கல்விசார் வெளியீடுகள் மற்றும் வேறு அச்சிடப்பட்ட நூல்கள், அப்பியாசக் கொப்பிகள் என்பவற்றை பெறுமதி சேர்க்கப்பட்ட வரியிலிருந்து விலக்களிப்பதற்கு நாம் முன்மொழிகின்றோம்.

36.4 திரையரங்கு நுழைவுச்சீட்டு மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரியைக் கணிப்பதற்கான அடிப்படையினை திருத்துதல்

திரைப்படத் தொழிற்றுறையில் நியாயமான மற்றும் சமத்துவமான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி பிரயோகத்தினை உறுதிசெய்யும் நோக்குடன் சினிமா நுழைவுச்சீட்டு விற்பனையிலிருந்து கிடைக்கின்ற பெறுமதி சேர்க்கப்பட்ட வரிப்பொறுப்புக்களை கணிப்பதற்கான அடிப்படையைத் திருத்துவதற்கு நாம் முன்மொழிகின்றோம்.

அதற்கமைய, திரைப்படத் தயாரிப்பாளர்கள், விநியோகத்தர்கள், தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன மற்றும் சினிமா திரையரங்கு தொழிற்படுத்துநர்கள் போன்றோரின் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிப் பொறுப்பானது முழு நுழைவுச்சீட்டு பெறுமதி மீது பெறுமதி சேர்க்கப்பட்ட வரியினைக் கணிப்பதை விடவும் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு தரப்பினராலும் பெற்றுக்கொள்ளப்படுகின்ற அல்லது அவர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற சினிமா நுழைவுச்சீட்டு வருவாயின் பங்கின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

36.5 'தகைமையுடைய ஏற்றுமதியாளர்களாக' புதிதாக பெறுமதி சேர்க்கப்பட்ட வரி பதிவுசெய்த ஏற்றுமதியாளர்களின் முந்திய தகைமையை வசதிப்படுத்தல்

கௌரவ சபாநாயகர் அவர்களே,

ஏற்றுமதி நோக்காகக் கொண்ட வியாபாரங்களை வசதிப்படுத்தும் நோக்குடன் புதிதாக பெறுமதி சேர்க்கப்பட்ட வரி பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்கள் தகைமையுடைய ஏற்றுமதியாளர்களாக (Eligible Exporter) அங்கீகரிக்கப்படுகின்ற பிரமாணத்தை திருத்துவதற்கு முன்மொழிகின்றேன்.

இவ் முன்மொழிவின் கீழ் புதிதாக பெறுமதி சேர்க்கப்பட்ட வரி பதிவுசெய்த ஆட்கள் முன்னைய பஞ்சாங்க ஆண்டு தொடர்பில் ஏற்கனவே உள்ள தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்யாது முன்னுறுகின்ற ஆறு மாத காலப்பகுதியில் அவர்களின் புரள்வில் 80% இற்கு மேல் ஏற்றுமதிகளிலிருந்து பெறுவிக்கப்பட்டுள்ளவிடத்து தகைமையுடைய ஏற்றுமதியாளர்களாக அங்கீகரிக்கப்படுவர்.

36.6 வெளிநாட்டு நாணய வழங்கல்கள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்காக இலங்கை மத்திய வங்கியின் குறிகாட்டி செலாவணி வீதத்தைப் பயன்படுத்தல்

கௌரவ சபாநாயகர் அவர்களே,

வெளிநாட்டு நாணயங்களில் பெயர்குறிக்கப்பட்ட வழங்கல்களை விலைமதிப்பிடுவதில் மிகுந்த வெளிப்படைத் தன்மை, ஒத்திசைவு மற்றும் நியாயம் என்பவற்றை உறுதிசெய்வதற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயத்தை இலங்கை ரூபாவாக மாற்றுவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் குறிகாட்டி செலாவணி வீதத்தை (Indicative Exchange Rate) பயன்படுத்துவதற்கு நாம் முன்மொழிகின்றோம். இச்செலாவணி வீதம் எவ்வாறு பிரயோகிக்கப்படும் என்பதை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் (CGIR) சுற்றறிக்கை மூலம் குறித்துரைப்பார்.

36.7 சர்வதேச போக்குவரத்துக் கப்பல்களுக்கு வழங்கப்படும் நீர்க்கல எரிபொருளுக்கு (Bunker Fuel) சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டினை விலக்களித்தல் (SSCL)

கௌரவ சபாநாயகர் அவர்களே,

சர்வதேச போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள கப்பல்களுக்கு நீர்க்கல எரிபொருள் வழங்குதல் இலங்கையின் கடல்சார் சேவை வழங்கலில்

முக்கிய கூறாகும். இத்தொழிற்றுறை மிக குறைந்த இலாப எல்லையுடன் கூடிய அதிக போட்டிமிக்க சர்வதேச சந்தையில் தொழிற்படுகின்றது.

தொழிற்றுறையின் போட்டித் தன்மையைப் பாதுகாத்து, பிராந்திய கடல்சார் மையமொன்றாக இலங்கையின் நிலையை வலுப்படுத்தும் நோக்குடன் சர்வதேச போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள கப்பல்களுக்கு வழங்கப்படும் நீர்க்கல எரிபொருள் மீதான சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டை விலக்களிப்பதற்கு முன்மொழிகின்றோம்.

36.8 பந்தயம் மற்றும் சூதாட்ட தொழிற்றுறைக்கு ஏற்புடைய வரிக்கட்டமைப்பை மீளாய்தல் மற்றும் சீரமைத்தல்

கௌரவ சபாநாயகர் அவர்களே,

அரசாங்கமானது பந்தயம் மற்றும் சூதாட்ட தொழிற்றுறைக்கான செயல்திறன் மிக்க ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பொன்றுக்கான நீண்டகால தேவையினை நிறைவுசெய்து பந்தய ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினைத் தாபித்து அதன் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

தற்போது செயற்பாட்டிலுள்ள ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பின் மூலம் இரட்டை அறவீடுகளையும் ஒத்திசைவின்மைகளையும் இல்லாதொழித்து, சர்வதேசத்திற்கு ஒத்திசைவான வரிக்கட்டமைப்பை அணிசேர்த்து மற்றும் அரசாங்க வருவாயைப் பாதுகாக்கின்ற அதேவேளை தொழிற்றுறையின் நிலைபேறான அபிவிருத்திக்கு ஆதரவளிக்கின்ற நியாயமான மற்றும் சமநிலையான அணுகுமுறையினை உறுதிசெய்யும் நோக்குடன் தொழிற்றுறைக்கு ஏற்புடைய வரிகள், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் பற்றிய அனைத்தையும் உள்ளடக்கிய மீளாய்வொன்றினை மேற்கொள்வதற்கு முன்மொழிகின்றோம்.

முன்மொழியப்பட்ட மீளாய்வானது நிர்வகிப்பதற்கும் இணங்கியொழுகுவதற்கும் எளிதாகவிருக்கின்ற, எளிமைப்படுத்தப்பட்ட, வெளிப்படையான மற்றும் ஒத்தியங்குகின்ற வரிக்கட்டமைப்பொன்றினை தாபித்தல் மீது கவனம் செலுத்தும்.

36.9 வரி நிர்வாகத்தை வலுப்படுத்தலும் வரி செலுத்துநர் இணக்கப்பாட்டினை வசதிப்படுத்தலும்

கௌரவ சபாநாயகர் அவர்களே,

வரி நிர்வாகத்தை வலுப்படுத்தல், சட்ட ரீதியான நம்பகத் தன்மையை மேம்படுத்துதல், மற்றும் வரிசெலுத்துநர் சட்டங்களுக்கு அமைவாக இணங்கி செயற்படுவதை வசதிப்படுத்தல் நோக்குடன் தற்போது வரிச்சட்டத்தின் சில பிரிவுகளில் காணப்படும் தெளிவின்மையை நீக்குவதற்கும் மாறி வருகின்ற வியாபார நடைமுறைகளுக்கும் புதிய நடைமுறை இயல்புகளுக்கும் பொருந்தும் வகையில் அப்பிரிவுகளை திருத்துவதற்கும் முன்மொழிகின்றேன்.

மேலும், தொழில்நுட்ப அல்லது நடைமுறைசார் தேவைப்பாடுகளுக்கு இணங்காமை காரணமாக சட்டபூர்வமான வரி மீளளிப்புகள் அல்லது உள்ளீட்டு வரி வரவுகள் வரி செலுத்துநர்களுக்கு மறுக்கப்படுதலை விளைவிக்கக்கூடிய சில கண்டிப்பான நடைமுறைகளை சீர்செய்கின்ற அதேவேளை அரசாங்க வருவாயினைப் பாதுகாப்பதற்கு போதுமான பாதுகாப்புக்களைப் பேணுவதற்கும் நாம் முன்மொழிகின்றோம்.

தன்னார்வ இணங்குவித்தலை ஊக்குவிக்கின்ற, வரிசெலுத்துநர்களின் சட்டபூர்வ உரித்துக்களைப் பாதுகாக்கின்ற அத்துடன் அரசாங்க வருவாயைப் பாதுகாக்கின்ற நியாயமான, வெளிப்படையான மற்றும் வினைத்திறன் மிக்க வரி நிர்வாக முறைமையொன்றினை தாபிப்பதற்கு இவ்வழிமுறைகள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

36.10 அத்தியவசிய உணவுப் பொருளுக்கான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினைத் திருத்துதல்

கௌரவ சபாநாயகர் அவர்களே,

அத்தியவசிய உணவுப் பொருட்களின் அதிகரிக்கின்ற விலைகளினால் ஏற்படும் வாழ்க்கைச் செலவு அழுத்தத்தை தளர்த்தும் நோக்குடன் இறக்குமதி செய்யப்படும் நெத்தலி மீது கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 100 இலிருந்து ரூ. 10 ஆகவும் மாசி மீது

கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 302 இலிருந்து ரூ. 10 வரையும், அரைத்த மற்றும் அரைக்கப்படாத செத்தல் மிளகாய்கள் மீது கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 50 இனால் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை குறைப்பதற்கு நாம் முன்மொழிகின்றோம்.

இந்த வரித் திருத்தங்கள் 2026 நவம்பர் 13 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

36.11 இறக்குமதித் தீர்வையினைப் படிப்படியாகக் குறைத்தல்

கௌரவ சபாநாயகர் அவர்களே,

இறக்குமதி வரிக்கட்டமைப்பை எளிமைப்படுத்தி, வர்த்தகம் தொடர்புபட்ட செலவுகளைக் குறைத்து பொருளாதாரத்தின் போட்டித்தன்மையை மேம்படுத்தும் நோக்குடன் அரசாங்கத்தின் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 800 தெரிவுசெய்யப்பட்ட இயைபுமுறைக் குறியீட்டு (HS) தொடர்கள் முழுவதும் ஏற்கனவே காணப்படுகின்ற செஸ் வீதத்தினை 25% இனால் குறைப்பதற்கு இறக்குமதித் தீர்வைகளைக் கட்டம் கட்டமான குறைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

குறித்துரைக்கப்பட்ட இயைபுமுறைக் குறியீட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்ட செய்தித்தாள் அச்சிடல் கடதாசி இறக்குமதிகள் மீதான ஏற்கனவேயுள்ள 10% துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டை (PAL) 2027 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் நீக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

36.12 உள்நாட்டு சீனிக் கைத்தொழிலுக்கு சந்தையில் போட்டியிடுவதற்கு ஆதரவளித்தல்.

உள்நாட்டு சீனிக் கைத்தொழிலைப் பாதுகாக்கும் பொருட்டு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சீனிக்கும் இறக்குமதி செய்யப்படும் சீனிக்கும் இடையில் காணப்படுகின்ற வரி முரண்பாடுகளைக் குறைத்து இரு தரப்பினர்களுக்கும் சமமான போட்டி வாய்ப்புக்களையும் நியாயமான போட்டிக்குரிய சூழலையும் ஏற்படுத்துவதற்கும் மிகவும் நடுநிலையான மற்றும் சமனான வரித் திட்டமொன்றை உறுதிப்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்படும் சீனியின் மீது விதிக்கப்பட்டுள்ள விசேட

வர்த்தகப்பண்ட வரியை கிலோகிராம் ஒன்றுக்கு ரூ.10 இனால் அதிகரிப்பதற்கு முன் மொழிகிறேன்.

36.13 சுற்றுலா அபிவிருத்தி அறவீட்டினை நீக்குதல்

கௌரவ சபாநாயகர் அவர்களே,

சுற்றுலா தொழிற்றுறை மீதான வரிச்சுமையைக் குறைத்து, அதன் போட்டித் தன்மையை மேம்படுத்தி, சுற்றுலா அபிவிருத்திக்காக நிலைபேறான நிதியிடலை உறுதி செய்யும் நோக்குடன் சுற்றுலா தாபனங்களின் புரள்வு மீது தற்போது விதிக்கப்படும் சுற்றுலா அபிவிருத்தி அறவீட்டினை நீக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

சுற்றுலா ஊக்குவிப்பு மற்றும் அபிவிருத்திக்கு தொடர்ச்சியான நிதியிடலை உறுதி செய்வதற்கு எதிர்காலத்தில் பொருத்தமான நிதி ஏற்பாடு ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதுவரை, இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையின கோரிக்கைகளின் அடிப்படையில், தேவையான நிதியை திறைசேரி வழங்கும்.

36.14 மதுவரி கட்டளைச் சட்டத்தில் திருத்தங்கள்

வருமான நிர்வாகத்தை மேம்படுத்தும் நோக்கில், பல நூற்றாண்டுகள் பழமையான மது வரி கட்டளைச் சட்டத்திற்குப் பதிலாக புதிய மது வரிச் சட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்த 2025 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டது.

இருப்பினும், புதிய சட்டமொன்று அறிமுகப்படுத்தப்படும் வரை, இந்தச் சிக்கலான நடைமுறைகளை மேலும் எளிமையாக்கவும், தற்பொழுதுள்ள மது வரிச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவரவும் நாங்கள் முன்மொழிகிறோம்.

37. கடன்பெறுகை வரையறை

2027 ஆம் நிதியாண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் கடன்பெறுகை வரையறை, பின்னிணைப்பு IV இல் வழங்கப்பட்டுள்ளது. தொடர்புடைய செலவின முன்மொழிவு பற்றிய சுருக்கம் பின்னிணைப்பு II இல் தரப்பட்டுள்ளது. மேலும், 2024 ஆம்

ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் கீழ், வரவுசெலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின்போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களும் இங்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

38. 2027 டித்வா அழிவு புனருத்தாபனத்திற்கான குறைநிரப்பு மதிப்பீடு

டித்வா சேதங்களைப் புனரமைப்பதற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட ரூ. 500 பில்லியன் குறைநிரப்பு மதிப்பீட்டிலிருந்து, மத்திய கிழக்கில் நிலவும் யுத்தச் சூழல் மற்றும் ஏனைய காரணங்களால், இதுவரை பயன்படுத்தப்படாத தொகையை 2027 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடாக வழங்குவதற்கு நான் முன்மொழிகிறேன். டித்வா புனரமைப்புப் பணிகளை முறையாக நிறைவு செய்வதற்கு, 2027 ஆம் ஆண்டில் மேலும் ரூ. 260 பில்லியன் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு செய்யப்படவேண்டியுள்ளது.

அதன்படி, இங்கு நான் சமர்ப்பித்துள்ள 2027 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்திற்கு மேலதிகமாக, பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, டித்வா புனரமைப்புப் பணிகளுக்கான செலவினம் குறித்த குறைநிரப்பு மதிப்பீடொன்றினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முன்மொழிகிறேன்.

இன்றைய வரவுசெலவுத்திட்ட உரைக்குப் பின்னர் இந்த குறைநிரப்பு மதிப்பீட்டைச் சமர்ப்பிக்க நான் முன்மொழிகிறேன்.

39. முடிவுரை

கௌரவ சபாநாயகர் அவர்களே,

எமது வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள் வெறும் அறிக்கையாக மாத்திரம் நின்றுவிடப் போவதில்லை. இம்முன்மொழிவுகள் இத்தேசத்தில் நடைமுறை ரீதியாக செயற்படுத்தக் கூடியவையேயாகும். ஆகையால், சகல புதிய முன்மொழிவுகளுக்கும் தெளிவாக பொறுப்புக் கூறக்கூடிய நிறுவனம், பெறுபேற்றுக் குறிகாட்டிகள், தேசிய முன்னுரிமை, நிதிப்

பாய்ச்சல் திட்டம் மற்றும் பொதுமக்களுக்கு இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடிய வெளிப்படைத்தன்மையைக் கொண்டதாக அமைந்திருக்கும்.

பிரசைகளின் கௌரவத்தைப் பாதுகாக்கின்ற, பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற, ஊழியத்திற்கு பொருத்தமான பெறுமதியைத் தருகின்ற, அறிவிற்கு வாய்ப்புகளை உருவாக்குகின்ற, இயற்கை வளங்களை எதிர்கால சந்ததிகளுக்கு பேணிக்காக்கின்ற ஒரு நாட்டையே கட்டியெழுப்ப முயற்சிக்கின்றோம்.

எதிர்கொள்கின்ற சவால்களை வெற்றி கொண்டு, பொருளாதார உறுதிப்பாட்டை கட்டியெழுப்பிய எமது அடுத்த இலக்கானது, 2027 இல் முன்னோடியான மாற்றத்திற்குரிய காலப் பகுதியினை ஆரம்பிப்பதேயாகும். அதற்கு உங்கள் அனைவரினதும் ஒன்றிணைந்த சக்தியும் பங்களிப்பும் எமக்குத் தேவைப்படுகின்றது.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

நவீன உலகில், முற்போக்கான சித்தாந்தப் புரட்சிகள், மக்களின் அறிவார்ந்த தீர்ப்புகள், மற்றும் எதிர்காலத்திற்கு ஏற்ற முன்னேற்றகரமான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றால் அரசாங்கங்கள் கவிழ்க்கப்படுகின்றன. இருப்பினும், எமது மாற்றுக் கட்சியோ இன்னும் கற்பனைரீதியான சித்தார்ந்தங்களைப் பற்றிக்கொண்டு, பிற்போக்குத்தனமான சிந்தனையிலிருந்து விடுபட முடியாமல் தவிக்கிறது.

அரசியல் என்பது, களத்தில் இறங்கி மக்களிடம் சென்று செய்யவேண்டியதே ஒழிய, இரவில் மயானங்களில் நூல் கட்டுவதோ; பாராளுமன்றத்தில் வசை பாடிச் செய்வதோ அல்ல.

அதேபோன்று, எதையும் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்றும், விவேகத்துடன் ஆராய வேண்டும் என்றும் சுட்டிக்காட்டிய புத்தபெருமான், (கேசபுத்த நகரவாசிகளுக்கு) காலாமயர்களுக்கு உபதேசித்த காலாம சூத்திரத்தைப் படித்து, குருட்டு நம்பிக்கைக்கு எதிராக புத்தபெருமான் செய்த புரட்சியைப் புரிந்து கொள்ளுங்கள். மூடநம்பிக்கைகளுக்கு எதிராக அவர்

போதித்த அக்கன்ன சூத்திரத்தையும், பொய் மந்திரங்களுக்கு எதிராக அவர் போதித்த கேவட்ட சூத்திரத்தையும் படித்து, புத்த பெருமான் செய்த கருத்தியல் புரட்சியைப் புரிந்து கொள்ளுங்கள்.

ஆற்றின் அடுத்த கரைக்கு செல்ல வேண்டுமானால் இந்தக் கரையில் இருக்கும் ஒருவன், நீந்தாமலும் படகைப் பயன்படுத்தாமலும், ஆற்றின் மறுகரையை அடைய, "மறுமுனையே இங்கே வா, இங்கே வா" என்று ஆற்றின் அடுத்த கரையிடம் பிரார்த்தித்தால் அந்தக் கரை இங்கே வருமா? என்று தேவிஜ்ஜ சூத்திரத்தில், புத்தபெருமான் வினவுகின்றார்.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

எமது தாய்நாட்டிற்காக எமக்கு மிகவும் தெளிவான, முன்னேற்றகரமான மற்றும் அபிமானமிக்க ஒரு கனவு உள்ளது. இந்நாட்டை வெறும் ஒரு தீவாக மட்டும் வைத்திருக்காமல், அறிவும், திறன்களும் நவீன தொழில்நுட்பமும் நிறைந்த, ஆசியாவில் மட்டுமல்ல, உலகிலேயே மிகவும் முன்னேறிய நாடுகளில் ஒன்றாக மாற்றுவதே எமது எதிர்பார்ப்பாகும்.

இன்று, அதற்காக நாம் வலுவானதொரு வேலைதிட்டத்தை செயற்படுத்தி வருகிறோம். நாடு முழுவதும் உள்ள எமது இளைஞர்களுக்கும் பிள்ளைகளுக்கும் நவீன தொழில்நுட்பம், விஞ்ஞானம் மற்றும் உலகளாவிய அறிவு என்பவற்றை வழங்கி, அவர்களை முழுத் திறன்கொண்ட, முன்னேற்றமடைந்த பிரசைகளாக மாற்றும் பணியைத் தொடங்கியுள்ளோம்.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

நாங்கள் பொருளாதார ரீதியாக முன்னேறிய ஒரு நாட்டை மாத்திரமின்றி, உலகின் முன்னே இலங்கையர்களுக்கு ஒரு புதிய பிரதிவிம்பத்தையும் உருவாக்க விரும்புகிறோம். இலங்கையரை உலகில் கல்வியறிவு பெற்ற, அறிவார்ந்த, நாகரிகமான, மரியாதைக்குரிய மற்றும் நம்பகமான குடிமக்களாக திகழச்செய்வதற்கே நாம் கனவு காண்கிறோம். நாம் சிறிய நாடாக இருந்தபோதிலும், எமது மனிதவளம் தனித்துவமான அறிவுத்திறன் கொண்டது என்பதை உலகிற்குப் பறைசாற்ற விரும்புகிறோம். தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றும், அர்ப்பணிப்புடன்

உழைக்கும், புதிய சிந்தனைகளை உருவாக்கும், சவால்களுக்குத் தீர்வுகாணும், மேலும் உலகத்துடன் தோலோடு தோல் சேர்ந்து முன்னேறக்கூடிய மக்கள் தலைமுறை எங்களிடம் உள்ளது என்பதை உலகிற்கு நிரூபிக்க விரும்புகிறோம். நாங்கள் கட்டியெழுப்ப முயற்சிப்பது இலங்கைக்கான புதிய ஒரு பொருளாதாரத்தை மட்டுமல்லாமல், உலக அரங்கில் இலங்கையர்களுக்கு புதிய அங்கீகாரத்தையும், புதிய கௌரவத்தையும், புதிய அபிமானத்தையும் உருவாக்குவதற்காகும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

அரசாங்கத்தை விமர்சியுங்கள். எமது கொள்கைகளைக் கேள்விக்குள்ளாக்குங்கள். எங்களுடையதை விடச் சிறந்த மாற்றுத் திட்டத்தை முன்வையுங்கள். அவ்வாறு செய்வதற்கான உங்கள் சனநாயக உரிமையை நாம் முழுமையாக அங்கீகரிக்கிறோம்.

ஆனால், வசைபாடல்களுக்குப் பதிலாக மாற்று கொள்கைகளையும், சூனியத்துக்குப் பதிலாக ஆக்கப்பூர்வமான தீர்வுகளையும், யாகக் கிரியைகளுக்குப் பதிலாக அறிவுபூர்வமான விவாதங்களையும் இந்நாட்டின் அரசியலுக்குக் கொண்டு வாருங்கள்.

எமது நாட்டு மக்கள் தொழில்நுட்பத்திலும் அறிவாற்றலிலும் முன்னேறிச் செல்லும்போது, எமது நாட்டின் எதிர்கட்சி அரசியல் மாத்திரம் அவற்றைப் புறக்கணித்துப் பின்னோக்கிச் செல்லக் கூடாதல்லவா? உலகில் நாம் கட்டியெழுப்ப முயற்சிக்கும் நாகரிகமான, அறிவொளிபெற்ற மற்றும் அபிமானம் மிக்க இலங்கையர் என்ற அடையாளத்திற்கு இசைவான ஒரு அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவது என்பது அரசாங்கத்திற்கு மட்டுமல்ல, எதிர்கட்சியினதும் அடிப்படைப் பொறுப்பாகும் என்பதை இத்தருணத்தில் நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

இந்நாட்டின் அறிவார்ந்த குடிமக்களைப் போல நீங்களும் ஞானம் பெறுங்கள்! அரசாங்கத்தை மாற்ற உங்களுக்கு உரிமை உண்டு. ஆனால், நீங்கள் எங்களை விடச் சிறந்தவர்களாக இருந்தால் மட்டுமே இந்நாட்டு மக்கள் அந்த தீர்மானத்தை எடுப்பார்கள். அதுவரை, உங்கள் கனவுகள் வெறும் கனவுகளாகவே இருக்கும்.

இந்நாட்டின் புத்திசாலித்தனமான மக்கள் மீண்டும் ஒருபோதும் அந்த இருளில் கால்பதிக்க மாட்டார்கள்.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

வருங்கால சந்ததியினருக்கு நாம் விட்டுச்செல்ல வேண்டியது எமது கட்சி வாத விவாதங்கள் அல்ல, மாறாக அவர்கள் நம்பிக்கையுடன் எதிர்காலத்தை பொறுப்பேற்கக் கூடிய ஒரு சுபீட்சமிக்க நீதியான நாடுதான்.

எனவே, "இலங்கையர்" என்பதை நாம் பெருமையுடன் உச்சரிக்கும் ஒரு பெயராக மட்டுமல்லாமல், உலகம் முழுவதும் கௌரவத்துடன் ஏற்றுக்கொள்கின்ற ஒரு பெருமிதமான பெயராகவும் ஆக்குவோம்.

அந்த நோக்கத்திற்கான எமது வாக்குறுதியை வெறும் வார்த்தைகளால் மட்டுமல்லாமல், செயல்களாலும் நிரூபிப்போம்.

இன்று, அனைத்து அரசியல் கட்சிகளையும், அனைத்துத் தரப்பினரையும், உலகில் எங்கெல்லாம் வாழும் ஒவ்வொரு இலங்கையரையும் திறந்த மனதுடன் அழைக்கிறோம். வாருங்கள், இந்த நாட்டின் எதிர்காலத்தைக் கட்டமைப்பதில் நாமும் பங்கெடுப்போம்! நாம் அனைவரும் ஒரே மாதிரியாக சிந்திக்க வேண்டியதில்லை. நாம் அனைவரும் ஒரே கருத்தைக் கொண்டிருக்க வேண்டியதில்லை. ஆனால், நமது வேறுபாடுகளை விட நமது நாடு பெரியது. நமது தனிப்பட்ட இலக்குகளை விட எமது பிள்ளைகளின் எதிர்காலம் மிகவும் பெறுமதிமிக்கது. எனவே, எமது அறிவையும், திறமைகளையும், வலிமையையும் ஒன்றிணைப்போம். நாம் உடன்படக்கூடிய இடத்திலிருந்து ஆரம்பிப்போம். ஒருவரையொருவர் முந்திச் செல்வதற்கல்லாது, நம் தாய்நாட்டை எம் அனைவருக்கும் மேலாகக் கொண்டு செல்ல ஒன்றிணைவோம்!

இறுதியில், நாம் எம் பிள்ளைகளுக்கு விட்டுச்செல்ல வேண்டியது, ஒருவருக்கொருவர் எவ்வளவு மேலானவர்களாக இருந்தோம் என்ற கதையை அல்ல. நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து இந்த நாட்டை எவ்வளவு உயரத்துக்கு உயர்த்தினோம் என்ற கதையை ஆகும்.

அந்தக் கதையின் வெற்றி ஒரு நபருக்கு மட்டும் சொந்தமானதாக இருக்காது. அது ஒரு கட்சிக்கு மட்டும் சொந்தமானதாக இருக்காது. அது ஒரு தலைமுறைக்கு மாத்திரம் சொந்தமானதாக இருக்காது.

அத்தகைய வெற்றி இந்நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் சொந்தமானது.

அந்த வெற்றிக்கு ஒரே ஒரு பெயர்தான் இருக்க வேண்டும் - அது இலங்கை என்பதாகும்!

இறுதியாக, இந்த வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் தளராத அர்ப்பணிப்புடனும் விடாமுயற்சியுடனும் பணியாற்றிய நிதி அமைச்சின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும், திறைசேரியின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்களின் தொழில்வான்மையும், அர்ப்பணிப்பும், கடமையுணர்வும் இந்த விரிவான மற்றும் தொலைநோக்குடைய வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு ஏதுவாக அமைந்தன. அரசாங்கத்தின் பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சிநிரல்களையும் தேசிய அபிவிருத்தி இலக்குகளையும் நாம் கூட்டாக முன்னெடுத்துச் செல்லும் இவ்வேளையில், இந்த முன்மொழிவுகளைச் சரியான நேரத்திலும் திறம்படவும் நடைமுறைப்படுத்துவதற்கும், உறுதிசெய்வதற்கும் நிதி அமைச்சின் அலுவலர்கள் என்ற வகையில், உங்களின் தொடர்ச்சியான ஆதரவையும் அர்ப்பணிப்பையும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

நன்றி

பின்னிணைப்பு I

வருமான தாக்கத்தின் சுருக்கம் - 2027

வருமான அளவீடு	வருடாந்த வருமான தாக்கம் (ரூ. மில்)	பயன்வலுத் திகதி
விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிற்கான திருத்தம்	950	நவம்பர் 2026
துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு	(350)	சனவரி 2027
வருமான வரித்திருத்தங்கள்	(16,000)	ஏப்ரல் 2027
செஸ் வரியினை கட்ட ரீதியாக நீக்குதல் – இரண்டாம் கட்டம்	(10,000)	ஏப்ரல் 2027
பெறுமதிசேர் வரித் திருத்தம்	(2,975)	ஏப்ரல் 2027
சுற்றுலா அபிவிருத்தி அறவீட்டினை இல்லாதொழித்து விமானமேறுதல் அறவீட்டிலிருந்து சுற்றுலா அபிவிருத்தி நிதிக்கு 2.50 ஐ.அ.டொலரினை மாற்றுதல்.	(40)	ஏப்ரல் 2027
மொத்த வருமான அதிகரிப்பு/(நட்டம்)	**(28,415)**	
2027 இற்கான வருமான தாக்கம் (ரூ. மில்லியன்)	**(21,150)**	

பின்னிணைப்பு II

2027ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட உரையில் முன்வைக்கப்பட்ட புதிய செலவின முன்மொழிவுகளின் சுருக்கம்

தொடர் இல.	செலவின முன்மொழிவு	முன்மொழியப்பட்ட வருடாந்த ஒதுக்கீடு (ரூ . மில்லியன்)	
		மீண்டெழும்	மூலதனம்
கல்வி			
1	மாகாண சபைப் பாடசலைகளில் டிஜிட்டல் நிலைமாற்ற கருத் திட்டத்தைச் செயல்படுத்துதல்		3,000
2	பொலன்னறுவ மற்றும் பின்னவல இல் உள்ள ஹோட்டல் பாடசாலைகளின் மேம்பாடு		500
3	பாடசாலைகள் மாணவர்களுக்குக் கண்ணாடிகள் வழங்குதல்		100
4	பயிற்சி ஆசிரியர்களுக்கான மாதாந்த உதவித்தொகை ரூ . 20,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.	1,800	
5	பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான கல்வி உதவித்தொகை மற்றும் வருகை விரிவுரையாளர்களுக்கான கொடுப்பனவுகளில் அதிகரிப்பு.	2,000	
6	பிரிவேனா மாணவர் உதவித்தொகையில் அதிகரிப்பு	600	
7	தம்ம பாடசாலைகளின் ஆசிரியர்களின் கொடுப்பனவு உயர்வு	600	
சுகாதாரம்			
8	வைத்தியசாலைகளுக்கான மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு		5,000
9	வைத்தியசாலைகளுக்கான அம்புலன்ஸ்கள் கொள்வனவு		3,000
10	மாகாண வைத்தியசலைகளின் மேம்பாடு (தம்புத்தேகம)		300

தொடர் இல.	செலவின முன்மொழிவு	முன்மொழியப்பட்ட வருடாந்த ஒதுக்கீடு (ரூ . மில்லியன்)	
		மீண்டெழும்	மூலதனம்
11	அறுவைச் சிகிச்சைக்கு ரோபோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்		250
12	சுகாதாரத் துறையில் முன்மொழியப்பட்ட கொடுப்பனவுகளின் அதிகரிப்பு	16,200	
போக்குவரத்து			
13	கொழும்பு புறநகர் ரயில் மின்மயமாக்கல்		80,000
14	மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் குருநாகல் - கலேவெல பகுதி		30,000
15	ருவன்புர அதிவேக நெடுஞ்சாலை		27,000
16	மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் இணைப்புப் பாதைகள்		8,500
17	கிராமப்புற மற்றும் மலைப்பிதேசங்களுக்காக 250 சிறிய பேருந்துகள் கொள்வனவு		5,000
18	மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அலுவலகம் வெரஹரவுக்கு இடமாற்றம் செய்யப்படுதல்		600
19	வடமேல் மாகாண சபைக்கு மூலதன உதவி		575
20	கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அணுகலை வழங்கும் பாதை வலையமைப்பை மேம்படுத்துதல் மற்றும் இதர பயணிகள் வசதிகளை வழங்குவதற்கான சாத்தியக்கூறு ஆய்வை நடத்துதல்		200
21	சிகிரியா உள்நாட்டு விமான நிலையத்தின் மேம்பாடு		100
சிறந்த வாழ்க்கைத்தரம் / ஒரு கண்ணியமான வாழ்க்கை			
22	மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்		47,750
23	நகரங்களின் அபிவிருத்தி		5,000
24	திடக்கழிவு முகாமைத்துவம் (பிவிதுரு) புரவார)		5,000
25	பாரிய கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டம்		1,800
26	குண்டசாலை-ஹரகம நீர் வழங்கல் திட்டம்		1,800
27	எஹலியகொட நீர் வழங்கல் திட்டம்		1,000

தொடர் இல.	செலவின முன்மொழிவு	முன்மொழியப்பட்ட வருடாந்த ஒதுக்கீடு (ரூ . மில்லியன்)	
		மீண்டெழும்	மூலதனம்
28	யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்களுக்கான நீர் வழங்கல் திட்டம்		1,000
29	அனுராதபுர விளையாட்டு கட்டிடத்தொகுதி		950
30	வெள்ளக் கட்டுப்பாட்டிற்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்		625
31	அனுராதபுரத்தில் உள்ள புனித தலங்களின் அபிவிருத்தி		500
விவசாயம்			
32	மீன்பிடி நங்கூரமிடும் தளங்களின் கட்டுமானம் மற்றும் பேசாலை மீன்பிடித் துறைமுகத்தை மேம்படுத்துதல்		5,000
33	எல் நினோ இடர் தணிப்பு மற்றும் அவசரகால எதிர்வினை		5,000
34	முன்டெனியாறு நீர்த்தேக்கத்தின் கட்டுமானம்		1,000
35	பேலியகொட மீன் சந்தையின் மேம்பாடு		1,000
36	வடகடல் மீன்பிடி வலைத் தொழிற்சாலையின் புனரமைப்பு		500
37	ஆடு வளர்ப்புக்கு சாத்தியமுள்ள மாவட்டங்களில் பண்ணைகளின் விரிவாக்கம்		300
38	பொலந்தலாவ மீன்வளர்ப்பு மையத்தின் கட்டுமானம்		300
39	கூண்டு மீன் வளர்ப்பு		250
40	நீர்ப்பாசனத் துறையில் சாத்தியக்கூறு ஆய்வுகளை விரைவுபடுத்துதல்		200
41	மீன்வள உற்பத்திப் பொருள் சந்தைப்படுத்தல் வலையமைப்பின் நவீனமயமாக்கல்		200
42	தேயிலை பயிர்ச் செய்கைக்கான உரம்		5,000
43	இரப்பர் பயிர்ச் செய்கைக்கான உரம்		1,000
44	மீன்பிடிக் கைத்தொழில் சார்ந்த தொழில்முயற்சியார்களுக்காக வட்டி சலுகைக் கடன் திட்டம்	1,000	
வீடமைப்பு			
45	வீடமைப்பு திட்டங்களின் கீழ் பகுதியளவு கட்டப்பட்ட வீடுகளின் கட்டுமானம் நிறைவு		5,000

தொடர் இல.	செலவின முன்மொழிவு	முன்மொழியப்பட்ட வருடாந்த ஒதுக்கீடு (ரூ . மில்லியன்)	
		மீண்டெழும்	மூலதனம்
46	வடக்கு மற்றும் கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கான வீடுகள் கட்டுமானம்		4,000
47	குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கான வீடமைப்பு திட்டத்தை விரைவுபடுத்துதல்		2,000
48	அனர்த்த்த்தால் சேதமடைந்த, ஆனால் தொடர்புடைய திட்டத்தின் கீழ் வராத வீடுகளை நிர்மாணித்தல்		1,000
49	புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான சலுகை வீமைப்பு கடன் திட்டம்	1,000	
அமைதியான மற்றும் நியாயமான சமூகம்			
50	மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோருக்கான அணுகல்		1,000
51	அதிகப்படியான கொள்ளளவில் இயங்கும் சிறுவர் இல்லங்களின் மேம்பாடு		500
52	காலி சிறைச்சாலையின் இடமாற்றம்		500
53	புதிய சிறை மற்றும் தலைமையகக் கட்டிடம், மில்லேவ		300
54	பொலீஸ் தலைமையகக் கட்டுமானம் தொடர்பான முதற்கட்டப் பணிகள்		200
55	அரச சாரா தொண்டு நிறுவனங்களாகச் செயல்படும் மாற்றுத்திறனாளிகள்/சிறுவர்களுக்கான பராமரிப்பு இல்லங்களுக்கு மூலதன உதவி		100
56	முப்படை வீரர்கள், பொலீஸ் அதிகாரிகள் மற்றும் சிறை அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் அதிகரிப்பு	34,800	
57	மாற்றுத் திறனாளிகள், சிறுநீரக நோயாளிகளுக்கான உதவித்தொகை அதிகரிப்பு	7,100	
58	நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளில் அதிகரிப்பு	1,500	
பொது சேவை			
59	டிஜிட்டல் பொருளாதார நிலைமாற்றம்		10,000

தொடர் இல.	செலவின முன்மொழிவு	முன்மொழியப்பட்ட வருடாந்த ஒதுக்கீடு (ரூ . மில்லியன்)	
		மீண்டெழும்	மூலதனம்
60	பொது சேவைகளின் டிஜிட்டல் நவீனமயமாக்கல்		2,200
61	இலங்கை சுங்க கண்காணிப்பு உபகரணங்கள்		1,000
62	பத்திரிகையாளர்களுக்கான கல்வி மற்றும் தொழில்நுட்ப ஆதரவு		100
63	அலுவலக வாகனங்களுக்குப் பதிலாக போக்குவரத்து கொடுப்பனவு வழங்குதல்	7,000	
64	கிராம அலுவலர்கள் மற்றும் கள அதிகாரிகள் ஆகியோருக்கான கொடுப்பனவுகளில் அதிகரிப்பு	3,000	
65	2020-2024 ஓய்வூதியதாரர்களுக்கான இடைக்கால உதவித்தொகை	4,000	
66	அரச நிறுவன சபைகள் / ஆணைக்குழு உறுப்பினர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளில் திருத்தம்	300	
பொருளாதார சேவைகள்			
67	இயந்திர நெல் உலர்த்தலை எளிதாக்குதல்		300
68	மூலதனச் சந்தை மேம்பாட்டுத் திட்டங்கள்		500
69	சூரிய சக்தியைச் சேமிக்கக்கூடிய மின்கலன்களுக்கான மானியங்கள்	3,500	
70	பெண் தலைமைக் குடும்பங்களின் முன்னேற்றத்திற்கான சலுகை வட்டி கடன் திட்டம்	200	
71	வீடு சார்ந்த சுற்றுலா தங்குமிட வசதிகள் அபிவிருத்தி சலுகை வட்டி கடன் திட்டம்	100	
72	Re-MSME Plus சலுகை வட்டி கடன் திட்டம்	200	
73	கிராமிய தொழில்முயற்சி அபிவிருத்தி சலுகை வட்டி கடன் திட்டம்	200	

பின்னிணைப்பு III

வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளின் சுருக்கம் – 2027

ரூ. பில்லியன்

	2025 (தற்காலிக)	2026 திருத்தப்பட்ட மதிப்பீடுகள்	2027 வ.செ.தி.	2027 வ.செ.தி. (குறைநிரப்புடன்)
மொத்த வருமானம் மற்றும் மானியம்	**5,486**	**5,981**	**6,180**	**6,180**
மொத்த வருமானம்	**5,449**	**5,951**	**6,150**	**6,150**
வரி வருமானம்	**5,049**	**5,478**	**5,687**	**5,687**
வருமான வரி	1,139	1,311	1,341	1,341
பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள்	3,198	3,454	3,592	3,592
வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகள்	712	713	754	754
வரியல்லாத வருமானம்	**400**	**473**	**463**	**463**
மானியங்கள்	**36**	**30**	**30**	**30**
மொத்தச் செலவினம்	**6,230**	**7,309**	**7,673**	**7,933**
மீண்டெழும்	**5,232**	**5,848**	**5,934**	**5,944**
சம்பளங்களும் வேதனாதிகளும்	1,164	1,289	1,410	1,410
ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	335	370	409	409
வட்டி	2,501	2,617	2,643	2,643
மானியங்களும் மாற்றல்களும்	1,233	1,572	1,472	1,482
பொது முதலீடு	**1,016**	**1,480**	**1,750**	**2,000**
ஏனைய	**(18)**	**(19)**	**(11)**	**(11)**
வருமான மிகை (+)/ பற்றாக்குறை (-)	**217**	**103**	**216**	**206**
ஆரம்ப மிகை (+)/பற்றாக்குறை (-)	**1,756**	**1,289**	**1,150**	**890**

	2025 (தற்காலிக)	2026 திருத்தப்பட்ட மதிப்பீடுகள்	2027 வ.செ.தி.	2027 வ.செ.தி. (குறைநிரப்புடன்)
வரவுசெலவுத்திட்ட மிகை (+)/ பற்றாக்குறை (-)	**(745)**	**(1,328)**	**(1,493)**	**(1,753)**
மொத்த நிதியளிப்பு	**745**	**1,328**	**1,493**	**1,753**
மொத்த வெளிநாட்டு நிதியளிப்பு	**142**	**200**	**110**	**110**
வெளிநாட்டு கடன்பெறுகைகள் - மொத்தம்	567	700	700	700
படுகடன் மீள் கொடுப்பனவு	(424)	(500)	(590)	(590)
மொத்த உள்நாட்டு நிதியளிப்பு	**602**	**1,128**	**1,383**	**1,643**
வங்கியல்லா பெறுகைகள் (தேறிய)	496	1,128	1,383	1,383
வங்கி கடன் பெறுகைகள், பிற (தேறிய)	106	-	-	260
மொத்த வருமான மற்றும் மானியங்கள் / மொ.உ.உ (%)	**16.7**	**16.6**	**15.8**	**15.8**
மொத்த வருமானம்/ மொ.உ.உ (%)	**16.6**	**16.5**	**15.8**	**15.8**
வரி வருமானம்/ மொ.உ.உ	15.4	15.2	14.6	14.6
வரியல்லா வருமானம்/ மொ.உ.உ (%)	1.2	1.3	1.2	1.2
மானியங்கள்/ மொ.உ.உ (%)	**0.1**	**0.1**	**0.1**	**0.1**
மொத்த செலவினம்/மொ.உ.உ (%)	**19.0**	**20.3**	**19.7**	**20.3**
மீண்டெழும் செலவினம்/ மொ.உ.உ (%)	16.0	16.2	15.2	15.2

	2025 (தற்காலிக)	2026 திருத்தப்பட்ட மதிப்பீடுகள்	2027 வ.செ.தி.	2027 வ.செ.தி. (குறைநிரப்புடன்)
வட்டியல்லாத/ மொ.உ.உ (%)	8.3	9.0	8.4	8.5
வட்டி/ மொ.உ.உ (%)	7.6	7.3	6.8	6.8
பொது முதலீடு/ மொ.உ.உ (%)	3.1	4.1	4.5	5.1
வருமான மிகை (+)/பற்றாக்குறை (-) மொ.உ.உ (%)	0.7	0.3	0.6	0.5
ஆரம்ப மிகை (+)/பற்றாக்குறை (-) மொ.உ.உ (%)	5.4	3.6	2.9	2.3
வரவுசெலவுத்திட்ட மிகை (+)/ பற்றாக்குறை (-)மொ.உ.உ (%)	**(2.3)**	**(3.7)**	**(3.8)**	**(4.5)**

நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் தயாரிக்கப்பட்டது

பின்னிணைப்பு IV

மொத்த கடன்பெறுகைத்தேவைப்பாடு – 2027 (கணக்கீட்டு பரிமாற்றங்களுக்கான ஏற்பாடு)

விடயம்	ரூ.பில்.
அரசாங்க படுகடன் பெறுகைகள் தவிர்ந்த பெறுகைகள்	6,230
மொத்த ஆரம்ப செலவினம்	**5,070**
மீண்டெழும்	3,320
மூலதனம்	1,750
படுகடன் மீள் கொடுப்பனவுகள்	**4,850**
வட்டிக் கொடுப்பனவுகள்	2,643
படுகடன் மீள் கொடுப்பனவுகள்	2,207
முற்பணக் கணக்குகளுக்கான ஏற்பாடுகள்	**10**
அரசாங்க பிணையங்களின் பேரேடு/காசுப் பெறுமதி திருத்தம்	100
அரசாங்க கணக்குகளில் பதிவு செய்யவேண்டிய மொத்த கடன்பெறுகைத் தேவைப்பாடு	**3,800**

நிதித் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் தயாரிக்கப்பட்டது

குறிப்பு: டித்வா தொடர்பான செலவினங்களுக்கான ரூ.260 பில்லியன் குறைநிரப்பு மதிப்பீடு 2027 கிடைப்பனவிலுள்ள காசு ஏற்பாட்டினூடாக நிதியளிக்கப்படும்.

பின்னிணைப்பு V

தொழில்நுட்பக் குறிப்புகள்

பாகம் I – வரி விதிப்பு

1. வருமானவரி (2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கான திருத்தங்கள்)

1.1 தனிப்பட்ட வருமானவரி

1.1.1 ஆண்டு தனிப்பட்ட வருமானவரி நிவாரணம் ரூ.1.80 மில்லியனிலிருந்து 1.95 மில்லியனாக உயர்த்தப்படும்.

1.1.2 தனிப்பட்டவர்களின் வருமான வரி வீதக் கட்டமைப்பு பின்வருமாறு திருத்தப்படும்:

நடப்பு		திருத்தப்பட்டது	
வரிவிதிக்கத்தக்க வருமானம்	**வீதம்**	**வரிவிதிக்கத்தக்க வருமானம்**	**வீதம்**
ரூ. 1,000,000 வரை	6%	ரூ. 850,000 வரை	6%
அடுத்த ரூ.500,000	18%	அடுத்த ரூ.600,000	12%
அடுத்த ரூ.500,000	24%	அடுத்த ரூ.600,000	18%
அடுத்த ரூ.500,000	30%	அடுத்த ரூ.600,000	24%
மீதி	36%	அடுத்த ரூ.600,000	30%
-	-	மீதி	36%

1.2 முதலீட்டுச்சபை அனுமதிக்கப்பட்ட தொழில்முயற்சிகளுக்கான அதிகரிக்கப்பட்ட மூலதனக் கொடுப்பனவு

ஏற்றுமதியை நோக்காகக் கொண்டு தயாரித்தலில் அல்லது சுற்றுலா அபிவிருத்தியில் குறைந்தபட்சம் ஐ.அ.டொலர் 3 மில்லியனை முதலிடுகின்ற முதலீட்டுச் சபை அனுமதித்த தொழில்முயற்சிகள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு தகைமைபெறும் மூலதன செலவினத்தின் 200 சதவீதத்திற்கு சமமாக அதிகரிக்கப்பட்ட மூலதனக் கொடுப்பனவைத் தெரிவுசெய்வதற்கு அனுமதிக்கப்படும்;

- தயாரிப்பு மற்றும் சுற்றுலா (விடுதிகள் தவிர) விடயத்தில், முதலீடானது 3 ஆண்டுகளுக்குள் செய்யப்பட வேண்டும்;

- விடுதிகளுக்கான முதலீடானது 5 ஆண்டுகளுக்குள் செய்யப்பட வேண்டும்;

- நான்காம் அட்டவணையின் கீழ் ஏற்கனவேயுள்ள மூலதனக் கொடுப்பனவு அல்லது இரண்டாம் அட்டவணையின் கீழ் அதிகரிக்கப்பட்ட மூலதனக் கொடுப்பனவு அதிகரிக்கப்படாது.

1.3 "மூலதனச் சொத்து" வரைவிலக்கணத்தின் நோக்கெல்லையை விரிவுபடுத்தல்

மூலதன ஈட்டல் வரி நோக்கெல்லையினுள் பின்வரும் சொத்துக்களை உள்ளடக்குவதற்கு 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 195 ஆம் பிரிவின் கீழ் "மூலதனச் சொத்து" பற்றிய வரைவிலக்கணம்:

- மறைகுறிநாணயங்கள் உள்ளடங்கலாக டிஜிட்டல் மற்றும் மெய்நிகர் சொத்துகள்;
- வர்த்தகப் பெறுமதியினைக் கொண்டிருக்கின்ற தொலைத்தொடர்பாடல்கள், ஒலிபரப்பு மற்றும் வேறு அதனையொத்த உரிமங்கள் மற்றும் உரிமைகள்;
- இரத்தினக் கற்கள், ஆபரணம், அரும் உலோகங்கள் மற்றும் வேறு விதித்துரைக்கப்பட்ட நாணய அடிப்படை அளவை விஞ்சுகின்ற பெறுமதிமிக்க அசையக்கூடிய.

2. பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டத்திற்கான திருத்தங்கள்)

2.1 நூல்களுக்கு மற்றும் அச்சிடப்பட்ட பொருட்களுக்கு விலக்களிப்பு

சுங்க நோக்கங்களுக்கான இயைபுமுறை பண்ட விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட நூல்கள் மற்றும் அச்சிடப்பட்ட பொருட்களின் இறக்குமதி அல்லது வழங்கல் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியிலிருந்து பின்வருமாறு விலக்களிக்கப்படும்:

இயைபுமுறைக் குறியீடு	விவரணம்
4820.20	அப்பியாசக் கொப்பிகள்
4901.99.10	அச்சிடப்பட்ட நூல்கள்
4901.91	சொல்லகராதிகள், கலைக்களஞ்சியங்கள்
4903.00	பிள்ளைகளின் பட, வரைதல் அல்லது வர்ணம் தீட்டல் புத்தகங்கள்
4901.10	தனி கடதாசியில் உள்ள அச்சிடப்பட்ட பொருள்
4904.00.10	இசை நூல்கள் அச்சிடப்பட்ட இசை
4904.00.90	நூல் வடிவத்தில் உள்ளவை தவிர்ந்த அச்சிடப்பட்ட இசை

2.2 விலக்களிப்பை அகற்றுதல்

பின்வரும் பொருட்களுக்கு ஏற்புடைய பெறுமதி சேர்க்கப்பட்ட விலக்களிப்பு அகற்றப்படும்.

இயைபுமுறைக் குறியீடு	விவரணம்
0511.91.20	உவர் இறால் முட்டைகள்
1404.90.93	தேங்காய்த் தும்புச்சோறு

2.3

திரைப்பட நுழைவுச்சீட்டுகள் மீதான பெறுமதிசேர் வரி கணிப்பின் அடிப்படையினைத் திருத்துதல்

திரைப்படத் தயாரிப்பாளர்கள், விநியோகத்தர்கள், தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன மற்றும் சினிமா திரையரங்கு தொழிற்படுத்துநர்கள் போன்றோரின் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிப் பொறுப்பானது ஒவ்வொரு தரப்பினராலும் பெற்றுக்கொள்ளப்படுகின்ற அல்லது கையகப்படுத்தப்படுகின்ற சினிமா நுழைவுச்சீட்டு வருவாயின் தொடர்புடைய பங்கின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். பெறுமதி சேர்க்கப்பட்ட வரிப் பொறுப்பை கணிப்பதற்கான அடிப்படையானது கழியாட்டவரிக்குப் பின்னர் ஆனால் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கு முன்னர் நுழைவுச் சீட்டு பெறுமதியினை பிரயோகிப்பதற்கு திருத்தம் செய்யப்படும்.

2.4 "தகைமையுடைய ஏற்றுமதியாளர்" பற்றிய வரைவிலக்கணத்தின் திருத்தம்

"தகைமையுடைய ஏற்றுமதியாளர்" சொற்பதத்தின் வரைவிலக்கணம் முன்னுறுகின்ற 06 மாத காலப்பகுதியில் அவர்களின் புரள்வின் 80 சதவீதத்திற்கு மேல் ஏற்றுமதிகளிலிருந்து பெறுவிக்கபட்டுள்ளவிடத்து, தகைமையுடைய ஏற்றுமதியாளர்களாக புதிதாக பெறுமதி சேர்க்கப்பட்டவரி பதிவு செய்யப்பட்ட ஆட்களை அங்கீகரிப்பதற்கு திருத்தம் செய்யப்படும்.

2.5 வெளிநாட்டு நாணயத்திற்காக மேற்கொள்ளப்படுகின்ற வழங்கல்கள் மீது பெறுமதி சேர்க்கப்பட்டவரிக்கான செலாவணி வீதத்தை குறித்துரைத்தல்.

பெறுமதிசேர்க்ப்பட்டவரி நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயத்தை இலங்கை ரூபாவாக மாற்றுவதில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் குறித்துரைக்கப்படக் கூடிய இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் குறிகாட்டி செலாவணி வீதம் பிரயோகிக்கப்படும்.

2.6 இலத்திரனியல் வரிவிலைப் பட்டியல்களின் செல்லுபடி

டிஜிட்டல் அல்லது இலத்திரனியல் விலைப்பட்டியல்கள் கடதாசி அடிப்படையிலான விலைப்பட்டியல் போன்று ஒரே மாதிரியான சட்டரீதியான பெறுமதியுடையதாக அங்கீகரிக்கப்படும். இலத்திரனியல் விலைப்பட்டியல்களின் வடிவம், விபரங்கள், தொழில்நுட்ப மற்றும் நடைமுறைசார் தேவைப்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் ஊடாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் குறித்துரைக்கப்படும்.

3. சமூகப்பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (2022 இன் 25 ஆம் இலக்க சமூகப்பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டுச் சட்டத்திற்கான திருத்தங்கள்

கப்பல்களுக்கான நீர்க்கல எரிபொருள் வழங்கல் மீதான விலக்களிப்பு

சர்வதேச போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள கப்பல்களுக்கு வழங்கப்படும் நீர்க்கல எரிபொருளை சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடிலிருந்து வெளிப்படையாக விலக்களிப்பதற்கு திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

4. பந்தயம் மற்றும் சூதாட்ட தொழிற்றுறைக்கு ஏற்புடைய வரிக்கட்டமைப்பை எளிமைப்படுத்தல்

நிர்வகிப்பதற்கும் இணங்கியொழுகுவதற்கும் இலகுவானதாகவிருக்கும் விதத்தில் பந்தயம் மற்றும் பணச்சூதாட்டத் தொழிற்றுறைக்கு எளிமைப்படுத்தப்பட்ட, வெளிப்படையான மற்றும் ஒத்தியங்கும் வரிக்கட்டமைப்பொன்றினைத் தாபிப்பதற்கு 1988 இன் 40 ஆம் இலக்க பந்தயம் மற்றும் பணச்சூதாட்ட அறவீட்டுச் சட்டத்திற்கும் ஏனைய தொடர்புடைய வரிச் சட்டங்குளுக்கும் திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

5. விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுத் திருத்தம்

சில அத்தியவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதி மீது ஏற்புடைய விசேட வியாபாரப் பண்ட அறவீடு 2026 நவம்பர் 13 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பின்வருமாறு திருத்தம் செய்யப்படும்:

- நெத்தலிக்கருவாடு மற்றும் மாசிக்கருவாடு கிலோ கிராம் ஒன்றுக்கு விசேட வியாபாரப் பண்ட அறவீடு ரூ. 10 இனால் குறைக்கப்படும்.;
- அரைத்த மற்றும் அரைக்கப்படாத செத்தல் மிளகாய் கிலோ கிராம் ஒன்றுக்கு விசேட வியாபாரப் பண்ட அறவீடு ரூ. 50 இனால் குறைக்கப்படும்.
- சீனிக்கான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை கிலோகிராம் ஒன்றுக்கு ரூபா 10 இனால் அதிகரித்தல்.

6. துணைத் தீர்வைகளைக் கட்டங்கட்டமாகக் குறைத்தல்

துணைத் தீர்வைகளைக் கட்டங்கட்டமாக அகற்றும் பாகமாக பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

6.1 துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டை நீக்குதல்

2027 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் செய்தித்தாள் அச்சிடும் கடதாசி மற்றும் சூரிய சக்தி மின்சார சேமிப்புக்காகப் பயன்படுத்தப்படும் பற்றரிகள் இறக்குமதி மீது துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு நீக்கப்படும்.

6.2 செஸ்

800 இயைபுமுறை குறியீட்டு தொடர்கள் முழுவதும் செஸ் வீதங்கள் 25% தால் குறைக்கப்படும்.

7. வரி நிர்வாகத்தை வலுப்படுத்தலும் வரிசெலுத்துநர் இணங்குவித்தலை வசதிப்படுத்தலும்.

7.1 கொடுக்கல்வாங்கல்கள் மீதான ஏற்கனவே இருக்கின்ற நியதிச்சட்ட கட்டுப்பாட்டுடன் வரிசெலுத்துநர் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அனுமதிக்கப்பட்ட கணக்காளர் ஒருவரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவரின் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படும்.

7.2 கம்பனி கூட்டிணைப்புகளில் / ஒன்றுசேர்த்தல்களில் சாத்தியமான வரித் தவிர்ப்பை முறியடிக்கின்ற அதேவேளை உண்மையான கூட்டிணைப்புகள் முறையற்று பாதிக்கப்படுவதில்லை என்பதை உறுதிசெய்வதற்கு தவிர்த்தலுக்கு எதிரான விதிகள் அறிமுகப்படுத்தப்படும்.

7.3 மூல பெறுநர் அரசசாரா அமைப்பினால் வரி கொடுப்பனவு செய்யப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கான சான்றினை சமர்ப்பித்தலுக்குட்பட்டு அரசசாரா அமைப்புகளுக்கிடையில் நன்கொடைகளின் இரட்டை வரி விதிப்பை தடுப்பதற்கு ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்படும்.

7.4 கொடுப்பனவு இடத்தை தொடர்புபடுத்துவதன் மூலம் இணையவழி விளம்பரப்படுத்தல், இணையத்தில் சேமிப்புச் சேவைகள் உள்ளடங்கலாக தொலைவு மற்றும் டிஜிட்டல் சேவைகளிலிருந்து பெறுவிக்கப்படும் வருமான மூலத்தை நிர்ணயிப்பதற்கும் இதன் மூலம் அவர்களின் வருமான வரிப் பரிகாரத்தில் தெளிவை உறுதிசெய்வதற்கும்

2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 73 ஆம் பிரிவு திருத்தம் செய்யப்படும்.

7.5 பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு அத்துடன் ஐக்கிய நாடுகள் மாதிரி வரிச் சமவாயங்களில் பயன்படுத்தப்படும் கலைச்சொற்களுடன் ஒத்திசைவாகவிருப்பதற்கு "வரி ஏய்ப்பு மற்றும் தவிர்ப்பைத் தடுத்தல்" இனைக் கொண்டு "அரசிறை ஏய்ப்பைத் தடுத்தல் பொருளை மாற்றீடு செய்வதன் மூலம் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 75 (5) ஆம் பிரிவு திருத்தம் செய்யப்படும்.

7.6 சேவைக் கட்டணங்கள் மற்றும் காப்புறுதிக் கட்டுப் பணங்கள் மீதான 14 சதவீத பிடித்து வைத்தல் வரி, இலங்கையில் நிரந்தர தாபனமொன்றினைக் கொண்டிருக்காத வதியாத ஆட்களுக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளுக்கு மாத்திரம் ஏற்புடையதாகின்றது என்பதைத் தெளிவுபடுத்துவதற்கு உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 85(1ஆ) பிரிவு திருத்தம் செய்யப்படும்.

7.7 கொவிட் 19 நோய்த் தொற்றுக் காலப்பகுதியில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரித் திரட்டுகளை சமர்ப்பிப்பதில் தாமதம் காரணமாக முன்னர் அனுமதிக்கப்படாத உள்ளீட்டு வரிக் கோரிக்கைகள், அக்காலப்பகுதிக்கான நிலுவையாகவிருக்கின்ற திரட்டுகள் 2026 யூலை 31 அன்று அல்லது அதற்கு முன்னர் செல்லுபடியாக கோவைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அங்கீகரிப்பதன் வாயிலாக தகைமையுடைய வரிசெலுத்துநர்கள் மூலம் கோருவதற்கு அனுமதிக்கப்படும்.

7.8 வெளிநாட்டு வரி அதிகாரிகளிடமிருந்து கிடைக்கப்பெறும் தகவல்கள், சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுக்கு அத்துடன் தொடர்புடைய வெளிநாட்டு அதிகாரியின் சம்மதத்துடன் மாத்திரம் வெளிப்படுத்தப்படுவ தென்பதை உறுதி செய்வதற்கு உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் அந்தரங்கத்தன்மை ஏற்பாடுகள் திருத்தம் செய்யப்படும்.

7.9 கீழ் வருவனவற்றுக்காக பெறுமதிசேர் வரிச் சட்டத்திற்கு அவசியமான திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படும்:-

- பெறுமதிசேர் வரி திரட்டு சமர்ப்பித்தல் திகதியை பொருட்படுத்தாது உள்ளீட்டு வரியைக்கோருவதற்கு உள்நாட்டு கொள்வனவுகளுக்காக 12 மாதங்களையும் இறக்குமதிகளுக்காக 24 மாதங்களையும் கொண்ட ஒரேசீரான காலப்பகுதியை அனுமதித்தல்.

- உள்ளீட்டு வரிக் கோரிக்கையுடன் தொடர்புடைய ஏற்பாடுகளின் சிங்கள மற்றும் ஆங்கில உரைப்பகுதிகளுக்கிடையிலான வேறுபாடுகளை சீர்செய்தல்.

- உள்ளீட்டு வரிக் கோரிக்கைகளின் காலத்துடன் கூடிய வரவு மற்றும் பற்றுக் குறிப்புகளை வழங்குவதை ஒருங்கே இணைத்தல் மற்றும் வரி விலைப் பட்டியல்கள் விநியோகிக்கப்படாதவிடத்து வரிச் சீராக்கங்களை ஏற்பாடு செய்தல்.

- வெளிநாட்டு செலாவணியற்ற அடிப்படையில் நடாத்தப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்கள், வரி விலைப்பட்டியலை ஈடுபடுத்தாத கொடுக்கல்வாங்கல்கள், பெறுமதி சேர்க்கப்பட்ட வரி விலக்குகளிலிருந்து தோன்றுகின்ற விளைவுகள் மற்றும் ஏனைய தொடர்புபட்ட கருமங்கல் பற்றிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரிப் பரிகாரத்தை தெளிவுபடுத்தல்.

சுற்றுலா அபிவிருத்தி அறவீட்டை நீக்குதல்

8.

2003 இன் 25 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் சுற்றுலா அபிவிருத்தி அறவீடு 2027 ஏப்ரல் 01 தொடக்கம் நீக்கப்படும்.

9. திருத்தங்கள் நடைமுறைக்கு வரும் திகதி

இத்தொழில்நுட்ப குறிப்பில் அல்லது தொடர்புடைய வரிச் சட்டவாக்கத்தில் வேறுவகையில் விசேடமாகக் குறிப்பிட்டாலன்றி இதில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் 2027 ஏப்ரல் 01 திகதிக்கு முன்னர் நடைமுறைக்கு வரும்.

10. விடயஞ்சார் சீரமைப்புகளும் நிர்வாக ஏற்பாடுகளும்

வருவாய் நிர்வாகத்தை சீரமைத்து சில பொருள்மயக்கங்களையும் உத்தேசிக்கப்படாத விளைவுளையும் (மொழிபெயர்ப்புகளிலுள்ள வேறுபாடுகள் உள்ளடங்கலாக) சரிப்படுத்தும் பொருட்டு 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம், 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி .சேர்க்கப்பட்ட வரிச் சட்டம் , 2022 இன் 25 ஆம் இலக்க சமூகப்பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டுச் சட்டம் 1988 இன் 40 ஆம் இலக்க பந்தயம் மற்றும் பணச்சூதாட்ட அறவீட்டுச் சட்டம், நிதிச் சட்டங்கள் மற்றும் நிதி (திருத்தம்) சட்டங்கள், 2011 இன் 23 ஆம் இலக்க வரி மேன்முறையீடுகள் ஆணைக்குழுச் சட்டம் மற்றும் 2011 இன் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் ஆகியவற்றின் தொடர்புடைய ஏற்பாடுகளுக்கு அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

பின்னிணைப்பு VI

தொழில்நுட்ப குறிப்பு - அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவை திருத்துதல்

1. ஆயுதம் தாங்கிய படையினரின் உணவுக் கொடுப்பனவைத் திருத்துதல்

2027 யூலை மாதத்திலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக ஆயுதம் தாங்கிய படையினர்களில் தகைமை பெற்றுள்ள அலுவலர்களின் உணவுக் கொடுப்பனவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது:

உத்தியோகத்தர் வகுதி	தற்போது வழங்கப்படும் நாளாந்த உணவுக் கொடுப்பனவு (ரூபா)	திருத்தப்பட்ட நாளாந்த உணவுக் கொடுப்பனவு (ரூபா)
பணியமர்த்தப்பட்ட அலுவலர்கள்	1,161.56	1,476.37
ஏனைய தரத்தைச் சேர்ந்தவர்	967.53	1,299.70

2. பொலிஸ் உத்தியோகத்தர்களின் உணவு மற்றும் தங்குமிட கொடுப்பனவைத் திருத்துதல்

2027 யூலை மாதத்திலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக இலங்கைப் பொலிஸில் தகைமை பெற்றுள்ள ஆளனியினர்களுக்கு செலுத்தப்படுகின்ற உணவு மற்றும் தங்குமிட கொடுப்பனவு பின்வருமாறு ரூ.10,000 இனால் அதிகரிக்கப்படும்:

உத்தியோகத்தர் வகுதி	தற்போதய மாதாந்தக் கொடுப்பனவு (ரூபா)	திருத்தப்பட்ட மாதாந்தக் கொடுப்பனவு (ரூபா)
நிறைவேற்றுத் தரம் (உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் முதல் பொலிஸ்மா அதிபர் வரை)	34,800	44,800
பரிசோதகர் தரம் (உதவி பொலிஸ் பரிசோதகர் முதல் பிரதான பொலிஸ் பரிசோதகர் வரை)	31,800	41,800
கனிஷ்ட தரம் (பொலிஸ் காவலர் முதல் சார்ஜன்ட் மேஜர் வரை)	28,800	38,800

3. கள உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவைத் திருத்துதல்

2027 ஏப்ரல் மாதத்திலிருந்து செயன்வலுப்பெறும் விதமாக பின்வரும் கள உத்தியோகத்தர்களுக்காக செலுத்தப்படுகின்ற மாதாந்த பயணச்செலவு கொடுப்பனவு மற்றும் அலுவலக வாடகைக் கொடுப்பனவு என்பன திருத்தப்படுகின்றன:

உத்யோகத்தர் வகுதி	திருத்தப்பட்ட மாதாந்த பயணச் செலவுக் கொடுப்பனவு (ரூபா)	திருத்தப்பட்ட அலுவலக வாடகைக் கொடுப்பனவு (ரூபா)	
		நகர சபை அதிகார எல்லை	பிரதேச சபை அதிகார எல்லை
கிராம உத்தியோகத்தர்	4,000	6,000	4,000
அபிவிருத்தி உத்தியோகத்தர்	1,000	2,000	1,500
விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்	1,000	6,000	4,000
சமுர்த்தி உத்தியோகத்தர்	2,500	5,000	4,000

4. நீதித் துறையில் தொழில்முறைசார் கொடுப்பனவைத் திருத்துதல்

மேல் நீதிமன்ற நீதிபதிகளினதும் நீதிமன்ற அலுவலர்களினதும் தொழில்முறைசார் கொடுப்பனவு பின்வரும் விதமாக திருத்தப்படுகின்றது:

உத்யோகத்தர் வகுதி	தற்போது வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவு (ரூ.)	திருத்தப்பட்ட மாதாந்தக் கொடுப்பனவு (ரூ.)	மாதாந்த அதிகரிப்பு (ரூ.)
மேல் நீதிமன்ற நீதிபதி	75,000	100,000	25,000
நீதிமன்ற அலுவலர்கள் (விசேட தரம்)	65,000	90,000	25,000
நீதிமன்ற அலுவலர்கள் (ஏனைய தரங்கள்)	55,000	80,000	25,000

மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு அதிகரிப்பில் 50%, 2027 யூலை மாத்த்திலிருந்தும் எஞ்சிய 50%, 2028 ஆம் ஆண்டிலும் வழங்கப்படும்.

5. சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்ட அலுவலர்களின் தொழில்சாரா கொடுப்பனவு

சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்ட அலுவலர்களின் மாதாந்த தொழில்சாரா கொடுப்பனவு பின்வரும் விதமாக திருத்தப்படுகின்றது:

பதவிப் பெயர்	தற்போது வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவு (ரூ.)	திருத்தப்பட்ட மாதாந்தக் கொடுப்பனவு (ரூ.)	மாதாந்த அதிகரிப்பு (ரூ.)
சட்டமா அதிபர்	150,000	175,000	25,000
சொலிசிற்றர் ஜெனரல்	140,000	165,000	25,000
சிரேட்ட மேலதிக சொலிசிற்றர் ஜெனரல்	135,000	160,000	25,000
மேலதிக சொலிசிற்றர் ஜெனரல்	130,000	155,000	25,000
சிரேட்ட பிரதி சொலிசிற்றர் ஜெனரல் / சிரேட்ட அரச சட்டத்தரணி	115,000	140,000	25,000
பிரதி சொலிசிற்றர் ஜெனரல் / அரச சட்டத்தரணி	100,000	125,000	25,000
சிரேட்ட அரச வழக்கறிஞர் / சிரேட்ட உதவி அரச சட்டத்தரணி	75,000	95,000	20,000
அரச வழக்கறிஞர் / உதவி அரச சட்டத்தரணி	50,000	70,000	20,000

மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு அதிகரிப்பில் 50%, 2027 யூலை மாத்த்திலிருந்தும் எஞ்சிய 50%, 2028 ஆம் ஆண்டிலும் வழங்கப்படும்.

6. சட்ட வரைநர் திணைக்களத்தின் விசேட கொடுப்பனவு பின்வரும் விதமாகத் திருத்தப்படுகின்றது.

சட்ட வரைநர் திணைக்களத்தின் அலுவலர்களின் மாதாந்த விசேட கொடுப்பனவு பின்வரும் விதமாக திருத்தப்படுகின்றது:

பதவிப் பெயர்	தற்போதைய மாதாந்தக் கொடுப்பனவு ரூ.	திருத்தப்பட்ட மாதாந்தக் கொடுப்பனவு (ரூ.)	மாதாந்த அதிகரிப்பு (ரூ.)
சட்ட வரைநர் /மேலதிக சட்ட வரைநர்/ பிரதி சட்ட வரைநர்	7,000	32,000	25,000
சிரேட்ட உதவி சட்ட வரைநர் / உதவி சட்டவரைநர்	3,000	23,000	20,000

7. நீதிமன்ற உதவிப் பதவியினர்களுக்கான கொடுப்பனவைத் திருத்துதல்

2027 யூலை மாதத்திலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக நீதிமன்ற சேவையின் உதவி பதவியினர் வகுதிக்காக செலுத்தப்படுகின்ற மாதாந்தக் கொடுப்பனவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது.:

வகுதி	தற்போதைய மாதாந்த கொடுப்பனவு	திருத்தப்பட்ட மாதாந்தக் கொடுப்பனவு (ரூபா)
நொத்தாரிசு மற்றும் அஸ்கீசி செயற்பாட்டாளர் – போக்குவரத்துக் கொடுப்பனவு	7,500	10,000
நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் மற்றும் சுருக்கெழுத்தாளர்	1,000	5,000
அஸ்கீசி செயற்பாட்டாளர் மற்றும் நீதிமன்ற ஆணை நிறைவேற்றுநர் கொடுப்பனவு - நீதிமன்ற பதிவாளர்	600	3,000
அஸ்கீசி செயற்பாட்டாளர் மற்றும் நீதிமன்ற ஆணை நிறைவேற்றுநரின் உதவி பதவியினர்களுக்கான கொடுப்பனவு	300	2,000

8. சுயாதீன ஆணைக்குழுக்களினதும் ஏனைய ஆணைக்குழுக்களினதும் மாதாந்த கொடுப்பனவைத் திருத்துதல்

2027 யூலை மாதத்திலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்களுக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுகின்ற மாதாந்தக் கொடுப்பனவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

பதவி	தற்போது வழங்கப்படுகின்ற மாதாந்தக் கொடுப்பனவு (ரூபா)	திருத்தப்பட்ட மாதாந்தக் கொடுப்பனவு (ரூபா)
தலைவர்	135,000	200,000
ஏனைய உறுப்பினர்கள்	90,000	140,000

ஏனைய ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்காக வழங்கப்படுகின்ற மாதாந்தக் கொடுப்பனவை மேற்குறிப்பிட்ட விகிதாசாரத்திற்கு உட்பட்டு திருத்தப்படுகின்றது.

9. அரசுக்குச் சொந்தமான அரச தொழில்முயற்சிகளுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகளைத் திருத்துதல்

2027 யூலை மாதத்திலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக 2015 யூன் 17 ஆந் திகதிய அரச தொழில்முயற்சி சுற்றறிக்கை இல. 03/2015 இல் நிறுவனங்களை வகுப்பாக்கம் செய்துள்ள விதத்தின்படி, அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான கம்பனிகளின் தலைவர்கள், நிறைவேற்று பணிப்பாளர்கள் மற்றும் செயற்பாட்டு பணிப்பாளர்கள் ஆகியோருக்கு

வழங்கப்படுகின்ற மாதாந்தக் கொடுப்பனவு பின்வரும் விதமாக திருத்தப்படுகின்றது;

வகுதி	உப வகுதி	மாதாந்தக் கொடுப்பனவு (ரூபா)	
		தலைவர்	நிறைவேற்றுப் பணிப்பாளர் / செயற்பாட்டுப் பணிப்பாளர்
கிரமமுறை முறை	A	150,000	125,000
	B	120,000	100,000
பதவியுயர்வுக்குரியது	A	140,000	120,000
	B	120,000	100,000
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி	-	120,000	100,000
கல்வி சார்	B	120,000	100,000
ஏனைய அரச தொழில் முயற்சியாளர்கள்	A	200,000	140,000
	B	150,000	120,000
	C	125,000	100,000
	D	120,000	100,000
	E	120,000	100,000

பின்னிணைப்பு VII

2027 மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள பிரதான மூலதனக் கருத்திட்டங்களின் சுருக்கம்

தொடர் இல.	கருத்திட்டம்	ஒதுக்கீடுகள் (ரூபா. மில்லியன்)
கல்வி		
1	கல்விக்கான மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	2,000
2	பொதுக் கல்வியின் டிஜிட்டல் ரீதியான நிலைமாற்றம்	4,000
3	பாடசாலை ஆய்வுகூடங்களின் அபிவிருத்தி மற்றும் நவீனமயப்படுத்தல்	510
4	களனி பல்கலைக்கழகத்தின் வர்த்தக மற்றும் முகாமைத்துவ பீடத்தின் கட்டுமானம்	500
5	உயர்கல்வி தொடர்பான முன்மொழியப்பட்ட கருத் திட்டங்களுக்கான ஆயத்த நடவடிக்கைகள்	500
6	தொழில்நுட்பக் கல்விப் பல்கலைக்கழகத்தில் கல்வி மற்றும் மாணவர் வசதிகள்	800
7	தொழில்நுட்பக் கல்லூரிகளைச் சிறப்பு மையங்களாக மேம்படுத்துதல்	1,500
சுகாதாரம்		
8	சுவ செரிய ஆம்புலன்ஸ் சேவையின் திறன் மேம்பாடு	1,985
9	"ஆரோக்யா" நலன்புரி மையங்கள்	3,600
போக்குவரத்து		
10	மெட்ரோ மின்சார பஸ் அபிவிருத்தி கருத்திட்டம்	4,500
11	போக்குவரத்துத் துறை தொடர்பான முன்மொழியப்பட்ட கருத் திட்டங்களுக்கான ஆயத்த நடவடிக்கைகள்	500
12	டிஜிட்டல்சாரதி டி- மெரிட் புள்ளியிடல் மற்றும் வீதிப் பாதுகாப்பு செயற்படுத்துகைத் தளம்	1,500
13	புகையிரத நிலைய நவீனமயமாக்கல் மற்றும் தரப்படுத்தல்	2,000
14	வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் வாகனப் பதிவு மற்றும் மாற்றல் முறைமை	700
15	பாணந்துறை - நாம்பபான - இரத்தினபுரி (A008) வீதியில் இங்கிரியவிலிருந்து இரத்தினபுரி வரை மேம்படுத்துதல்	2,800

தொடர் இல.	கருத்திட்டம்	ஒதுக்கீடுகள் (ரூபா. மில்லியன்)
16	கண்டி தபால் நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள கண்டி பல்மாதிரி போக்குவரத்து முனையத்தின் நுழைவாயிலில், புகையிரதப் பாதைக்கு மேலாக மேம்பாலம் அமைத்தல்	1,200
17	கிரான் மற்றும் பொண்டுகல்சேனை பாலங்களின் கட்டுமானம்	600
18	B120 மற்றும் B470 சாலைகளுக்கு இடையே தொடர்பை ஏற்படுத்தும் வகையில், அங்கம்பிட்டிய - நவால பாலத்திற்கான அணுகு சாலைகளை மேம்படுத்துதல்	500
19	கொக்கிளாய் கலப்புக்குக் குறுக்கே பாலம் மற்றும் ஆற்றிடைப் பாதை நிர்மாணித்தல்	600
20	அலவ்வ மற்றும் முத்தெட்டுகல புகையிரதக் கடவைக்கு மேலாக மேம்பால நிர்மாணம்	700
21	வீதிகளை அகலப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் (புதிய நிகழ்ச்சித் திட்டம்)	4,000
22	கிராமிய வீதி (புதிய நிகழ்ச்சித் திட்டம்)	4,000
23	கொழும்புத் துறைமுகத்தில் கப்பல் முகாமைத்துவ அமைப்பை மாற்றீடு செய்தல் மற்றும் கடல்சார் வழிகாட்டல் ஆதரவு அமைப்பை நவீனமயமாக்கல்	575
கண்ணியமான வாழ்க்கை		
24	இரத்தினபுரி நகர அபிவிருத்திக்காக அரச விடுதிகளை இடமாற்றம் செய்தல்	1,000
25	குறைந்த வருமானம் கொண்ட மக்களுக்காக மீதொட்டமுல்லையில் இரண்டு வீட்டுத் தொகுதிகளையும், குருநாகல், வில்கொடவில் ஒரு வீட்டுத் தொகுதியையும் அமைத்தல்	5,200
26	நகர மேம்பாட்டுச் செயல்பாடுகள் தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் ஆய்வுகள்	500
27	தெஹிவளை மெட்ரோ பேருந்து முனையம் மற்றும் வசதி மையம்	500
28	தெய்யந்தரையில் பேருந்து நிலையம், சிறுவர் பூங்கா மற்றும் ஆரம்பப் பாடசாலையை மேம்படுத்துதல்	750
29	மா-ஓயா ஆற்றின் மேல் நீரோட்டத்திலிருந்து நீரைச் சேகரிப்பதற்கு யடிமஹன பகுதியில் நீர்த்தேக்கம் அமைத்தல்	300
30	பெரிய காலி நீர் வழங்கல் திட்டம்	3,000
31	ஹல்தும்முல்ல - பெரகல நீர் வழங்கல் திட்டம்	700
32	குலியாபிட்டிய நீர் வழங்கல் திட்டம் – சாத்தியக்கூறு ஆய்வு	250

தொடர் இல.	கருத்திட்டம்	ஒதுக்கீடுகள் (ரூபா. மில்லியன்)
33	வாழைச்சேனை நீர் வழங்கல் திட்டம்	300
34	மத்திய மேல் நீர்ப்பிடிப்புப் பகுதி சூழலியல் மறுசீரமைப்பு மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம்	600
35	முதுன் எல மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுத் திட்டம்	500
36	கலு பாலமவில் வெள்ளத் தணிப்புக்காகக் கதவில் பொருத்தப்பட்ட பம்புகளை நிறுவுதல்	600
37	பெல்லன்வில பூங்கா, கிம்புலாவல மற்றும் ஜப்பான் நட்புறவு நடைபாதைகள், கிருலப்பன கால்வாய், புனித செபாஸ்டியன் கால்வாய்கள் ஆகியவற்றின் நிலைபேறுதன்மை மற்றும் சுற்றுச்சூழல் பெறுமானத்தை மேம்படுத்துதல்	590
38	கண்டி மாநகர வருமானமல்லா நீர் குறைப்பு மற்றும் புனரமைப்புக் கருத் திட்டம்	500
39	அவசரகால எதிர்வினை மற்றும் முன் எச்சரிக்கை திறனை வலுப்படுத்துதல்	500
40	பல்முனை அபாய எச்சரிக்கை தொடர்பாடல் முறைமையை நிறுவுதல்	500
41	அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய அளவிலான டிஜிட்டல் வானொலி தொடர்பாடல் முறைமையை நிறுவுதல்	670
42	அனர்த்தத்தை தாங்கும் திறன்கொண்ட பாதுகாப்பு மையங்களின் புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டம்	1,000
விவசாயம்		
43	தேசிய களப் பயிர் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்	800
44	இனப்பெருக்கத்திற்காக 2,000 செம்மறி ஆடுகளை இறக்குமதி செய்தல்	1,000
45	மேம்பட்ட யாயா மூலம் நெல் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டம்	400
46	கிவுல் ஓயா நீர்த்தேக்கத் திட்டம்	2,000
47	வாரி மஹிம – நமது பாரம்பரிய நிகழ்ச்சித் திட்டம்	2,500
48	கீழ் மல்வத்து ஓயா – பல்துறை அபிவிருத்தி கருத்திட்டம்	7,500
49	மாதுரு ஓயா வலது கரை அபிவிருத்தி கருத்திட்டம்	1,500
50	உள்ளூர் நிதியின் கீழ், காலநிலை மீள்திறன் பல கட்ட அணுகுமுறையின் மீதமுள்ள பணிகளை நிறைவு செய்தல்	3,055
51	நவீனமயமாக்கப்பட்ட நீர்ப்பாசனம் மூலம் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துதல்	600

தொடர் இல.	கருத்திட்டம்	ஒதுக்கீடுகள் (ரூபா. மில்லியன்)
52	மஹாகிதுல உள்ளீட்டுச் சுரங்கப்பாதைக் கருத் திட்டம்	600
53	500 தேயிலைக் கிராமங்களை நிறுவுதல்	730
54	மீன்வள ஆராய்ச்சி, புத்தாக்கத் தொழில்நுட்பம் மற்றும் வணிகமயமாக்கல்	600
55	தேசிய மீன்வளத் தர உறுதிப்பாடு, பாதுகாப்பு மற்றும் ஆய்வுகூட வலையமைப்புக் கருத்திட்டம்	770
56	முன்மொழியப்பட்ட மீன்வளத் துறை தொடர்பான கருத் திட்டங்களுக்கான ஆயத்தப் பணிகள்	300
வீடமைப்பு		
57	பழைய வீமைப்புக் கருத் திட்டங்களில் உள்ள கட்டிடங்கள், பொது வசதிகள் மற்றும் கழிவுநீர் அமைப்புகளைப் புதுப்பித்தல்	2,000
58	ஆராம்யா பிளேஸில் முன்மொழியப்பட்ட மீள்குடியேற்ற வீடமைப்பு கருத்திட்டம்	2,145
59	மோதலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான மீள்குடியேற்றம் / நிரந்தர வீடுகள்	6,000
அமைதியான மற்றும் நீதியான சமூகம்		
60	மாத்தறை சிறைச்சாலையை மாத்தறை கொட்டவிலவத்த பகுதிக்கு இடமாற்றம் செய்தல்	500
61	வாரியபொல விளக்கமறியல் சிறைச்சாலையை விரிவாக்குதல்	500
62	வட்டரக்க சிறைச்சாலை வளாகத்தை நிர்மாணித்தல் - இரண்டாம் கட்டம்	500
63	நீதித்துறையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்	800
64	தேசிய பொலிஸ் பயிற்சிக் கல்லூரியினை அபிவிருத்திசெய்தல்	200
65	குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கான நிர்வாகக் கட்டிடத்தை நிர்மாணித்தல்	500
66	நாரஹேன்பிட்ட பொலிஸ் விடுதி வளாகம் மற்றும் தங்குமிடக் கட்டிடத்தை நிர்மாணித்தல்	500
67	இலங்கை பொலீஸ் தொடர்பாடல் வலையமைப்பை நவீனமயமாக்குதல்	900
68	குடியேற்றக் குடியகல்வு தற்காலிகத் தடுப்பு நிலையத்தை நிறுவுதல்	500

தொடர் இல.	கருத்திட்டம்	ஒதுக்கீடுகள் (ரூபா. மில்லியன்)
69	குடியேற்றக் குடியகல்வு திணைக்களத்தின் தற்போதைய அமைப்புகளை மேம்படுத்துதல்	750
70	குடியேற்றக் குடியகல்வு திணைக்களத்தின் எல்லைப் பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்துதல்	1,000
அரசதுறை சேவை		
71	செத்சிரிபாய - மூன்றாம் கட்டம்	6,800
72	தெஹித்தகண்டிய மற்றும் எலபத (Elapatha) ஆகிய இடங்களில் புதிய பிரதேச செயலகங்களை அமைத்தல்	265
73	வவுனியா, புத்தளம் மற்றும் அனுராதபுரம் ஆகிய இடங்களில் புதிய மாவட்ட செயலக் கட்டிட தொகுதிகளை அமைத்தல்	1,100
74	உள்ளூராட்சி அமைப்புகளின் வருவாய் மேம்பாட்டுத் திட்டம்	1,000
75	டிஜிட்டல்மயமாக்கல், அது தொடர்பான கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறைகளில் முன்னோடி நிறுவனங்களை வலுப்படுத்துதல்	1,400
76	டிஜிட்டல் அரசாங்க மாற்றம்	9,490
77	டிஜிட்டல்மயமாக்கலுக்கான அணுகலை எளிதாக்குதல் மற்றும் தேவையான திறனை வளர்த்தல்	2,700
பொருளாதார சேவை		
78	தபால் தலைமையகத்தின் அபிவிருத்தி	200
தேசிய பாதுகாப்பு		
79	பாதுகாப்பு அமைச்சின் டிஜிட்டல் மற்றும் சைபர் உட்கட்டமைப்பு	740
80	இலங்கை கடற்படை துறைமுக நடவடிக்கைகளை மேம்படுத்துதல்	1,100
81	இலங்கை கடற்படையின் கடல்சார் திறன்களை மேம்படுத்துதல்	1,490
82	04 எண்ணிக்கையிலான ரோந்துப் படகுகள் நிர்மாணம்	525
83	எண்ணெய் கசிவை எதிர்கொள்ளும் திறன்களை வலுப்படுத்தல்	3,380
எரிசக்தி		
84	நான்கு மின் விநியோகக் கட்டுப்பாட்டு நிலையங்களை நிறுவுதல்	5,130

குறிப்பு - எண்கள் முழுத்தானமாக்கப்பட்டுள்ளன